# தமிழன்

THAMILAN தமிலன්

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர்: 05, இதழ்: 218 விசுவாவசு வருடம், சித்திரை மாதம் 15 ஆம் திகதி திங்கட்கிழமை (28.04.2025) ஹிஜ்ரி 1446, ஷவ்வால் - 29, 0115 886187- விலை ரூ.40 பக்கங்கள் 12




-உயர்தரப் பரீட்சை-

## கல்வியில் சாதித்தார் ஷாபியின் புதல்வி



2019ஆம் ஆண்டு பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய கருத்தடை தொடர்பான பொய்யான குற்றச்சாட்டுக்கு ஆளான வைத்தியர் ஷாபி ஷிஹாப்தீனின் மகளான ஸைனப் ஷாபி, 2024 க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று மருத்துவப் பீடத்துக்கு நுழைய தகுதி பெற்றுள்ளார்.

சர்ச்சையின்போது குடும்பத்தினர் சந்தித்த கடுமையான பொது விமர்சனம் மற்றும் மன அழுத்தம் காரணமாக பாடசாலையை விட்டு வெளியேற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருந்தாலும், இந்த மாணவி தனியார் பரீட்சார்த்தியாக பரீட்சைக்குத் தோற்றி விமர்சனங்களுக்கு தக்க பதில் வழங்கியுள்ளார்.



» 02 பக்கம்

## உயர்தரப் பரீட்சை பெறுபேறு மீளாய்வு

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
பரீட்சைத் திணைக்களம் - இலங்கை
Department of Examinations - Sri Lanka

» 02பக்கம்



இலட்சக்கணக்கானோரின் கண்ணீர் அஞ்சலிக்கு மத்தியில்

### விடைபெற்றார் புனித பாப்பரசர்

பக்கம் 03



### இந்தியா – பாக். இடையே போர் மூளும் அபாயம்

பக்கம் 10




பாகிஸ்தானை இந்தியாவுடன் ஒரே குழுவில் இணைக்க வேண்டாம்

### பி.சி.சி.ஐ. இன் கோரிக்கையை ஏற்குமா ஐ.சி.சி?

பக்கம் 12

# தொலைபேசி சின்னம் காலாவதியாகிவிட்டது!

## ஐக்கிய மக்கள் சக்தியுடனான உறவு மீள்பரிசீலனையில் என்கிறார் ஹக்கீம்



நூருல் ஹுதா உமர்

''தொலைபேசி சின்னம் காலாவதியாகி விட்டது'' என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

சம்மாந்துறை பிரதேச சபையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மரம் சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து வெள்ளிக் கிழமை மாலை (25) இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்தும் அங்கு உரையாற்றிய அவர் கூறியதாவது,

''சம்மாந்துறை பிரதேச சபையின் எல்லைகளைப் பிரித்தது நிறைய பிரச்சினை களைக் கொண்டது. அவற்றில் வீரமுனை வட்டாரம் நிறைய பிரச்சினைகளைக் கொண்டது. அவற்றுக்கு தீர்வு காணும் மாற்று வழியாக நடைபெறும் சம்மாந் துறை பிரதேச சபைத் தேர்தலில் தமிழரசுக் கட்சியில் எங்களின் வேட்பாளரை போட்டியிடச் செய்து அவர்களின் உடன்பாட்டுடன் அந்த வட்டாரத்தை வெல்ல வைக்க முடியுமா? என்ற முயற்சியையும் இம்முறை செய்து பார்த்தோம்.

இதேபோன்ற பிரச்சினை நாவிதன்வெளியிலும் இருந்தது. இந்த விடயங்களில் தமிழரசுக் கட்சியின் தலைமைகள் இணக்கம் தெரிவித்தன. துரதிர்ஷ்டவசமாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் அதற்கு இணங்கவில்லை.

சம்மாந்துறை பிரதேச சபையின் வீரமுனை வட்டாரத்தில் நிர்மாணப்பணி ஒன்று தொடர்பில் நீதிமன்றத்தில் வழக் கொன்று இருந்தபோதிலும் மு.கா. செயலாளர் நிஸாம் காரியப்பரை அந்த வழக்கில் ஆஜராக வேண்டாம் என்றும் சொல்லியிருந்தேன். ஏனெனில் இந்த விஷயத்தை சாதித்து கொள்வதற்காக. ஆனால் அவை ஒன்றும் சாத்தியமாக வில்லை.

» 02 பக்கம்

## 9,457 மாணவர்கள் 3 பாடங்களிலும் 'ஏ'



நடைபெற்ற (2024) க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் 9,457 மாணவர்கள் மூன்று பாடங்களிலும் 'ஏ' சித் தியைப் பெற்றதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜெய சுந்தர தெரிவித்தார்.

மேலும், மூன்று பாடங்களிலும் 'ஏ' சித்திகளைப் பெற்ற மாணவர்களின் சதவீதம் 3.45 சதவீதம் என்றும் குறிப்பிட்டார்.

கொழும்பில் நேற்று ஞாயிற்றுக்கிழமை (27) நடைபெற்ற சிறப்பு ஊடக சந்திப்பில் உரையாற்றும் போதே பரீட்சைகள் ஆணை யாளர் நாயகம் அமித் ஜெயசுந்தர இவ் வாறு தெரிவித்தார்.

பெறுபேறுகளின்படி, பரீட்சைக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளில் 64.73 சதவீதமானவர்கள்...

» 02 பக்கம்

## இரவில் கூட்டங்களை நடத்தக் கூடாதாம்!

### தேசிய பாதுகாப்பு தொடர்பில் திலித்



"நாட்டின் தேசிய பாதுகாப்பு மற்றும் பொதுப் பாதுகாப்புடன் அனுபவமற்ற ஒரு குழுவினர் விளையாடுவதாகவும் அரசாங்கத்தின் திறமையின்மை, உளவுத்துறை தகவல் இல்லாமை ஆகியவை ஒரு பெரிய நெருக்கடியாக மாறியுள்ளன" என்றும் சர்வசன அதிகாரம் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான திலித் ஜயவீர தெரிவித்துள்ளார்.

» 02 பக்கம்

## நாட்டின் பொருளாதாரம் நவம்பரில் வீழ்ச்சியடையும்

### வஜிர அபேவர்தன ஹேஷ்யம்



''எதிர்வரும் நவம்பர் மாதமளவில் இலங்கையின் பொருளாதாரம் வீழ்ச்சியடையும்'' என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன எதிர்வு கூறியுள்ளார்.

காலி, தலாப்பிட்டியவில் நேற்று (27) நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர் கூறியதாவது,

''எதிர்வரும் நவம்பர் மாதமளவில் இலங்கையின் பொருளாதாரம் மீண்டும் வீழ்ச்சியுறும்.

» 02 பக்கம்

## தண்ணீரையே கொடுக்க மறுக்கும் இந்தியாவுடன் எரிசக்தி இணைப்பை ஏற்படுத்தினால் என்னவாகும்?



புதுடில்லியுடனான ஒப்பந்தங்களை மீள்பரிசீலனை செய்யுமாறு உதய கம்மன்பில வலியுறுத்து

» 02பக்கம்

கமெண்ட் கந்தர்...




தொலைபேசி சின்னத்தில போட்டியிட்டு தான் வென்றத ஹக்கீம் ஹாஜியார் மறந்திட்டாரோ?

## 05 வயதுக்குட்பட்டோர் இறந்தால் பிரேத பரிசோதனை கட்டாயம்

### நீதி அமைச்சு தீர்மானம்

» 02பக்கம்

## உஷ்



முன்னாள் ஜனாதிபதி ரணிலுக்கு எதிரான விசாரணைகள் எதுவும் இடம்பெறாமை குறித்து ஆளுங்கட்சிக்குள் பெரும் கருத்து முரண்பாடு உருவாகியுள்ளதாக தகவல்.

ஜனாதிபதி அநுர, ரணில் தொடர்பில் மெத்தனப் போக்கை கடைப்பிடிப்பதாக பலரும் நேரடியாகவே விமர்சித்துள்ளதன் காரணமாகவே இப்போது பொதுமேடைகளில் ரணிலை ஜனாதிபதி விமர்சிக்க ஆரம்பித்துள்ளதாகத் தெரிகிறது.

எவ்வாறாயினும், ரணில் ஆட்சியில் இடம்பெற்ற எந்த விடயங்கள் குறித்தும் விசாரணைகள் சீரியஸாக இடம்பெறாதென அரச உள்ளகத் தகவல்கள் சொல்கின்றன.

## ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் இன்று இலங்கை விஜயம்



ஜீ.எஸ்.பி. பிளஸ் சலுகை தொடர்பில் கலந்துரையாட ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் இன்று (28) இலங்கைக்கான விஜயம் ஒன்றை மேற்கொள்ள வுள்ளனர்.

ஐரோப்பிய நாடுகளுக் கான ஏற்றுமதிகளின்போது இலங்கைக்கு வழங்கப் பட்டுள்ள ஜீ.எஸ்.பி. பிளஸ் சலுகையை தொடர்ந்தும் வழங்குவதற்கான நிபந்த னைகளில் ஒன்றாக 27 சர்வதேச பிரகடனங்கள் தொடர்பில் இலங்கை அடைந்துள்ள முன்னேற்ற நிலை...

» 02 பக்கம்




# காதல் தகராறினால் நடு வீதியில் நடந்த களேபரம்!

கிரிபத்கொட பிரதான வீதியில் ஒரு குழு ஒருவர் ஒருவரை கொடூரமாக தாக்குவதைக் காட்டும் காணொளி சமூக ஊடகங்களில் பரவியது.

இந்தச் சம்பவம் கிரிபத்கொட நகரில் நடந்ததாக பின்னர் தெரிவிக்கப்பட்டது. அதன்படி, தாக்குதல் சம்பவம் குறித்து பொலிஸார் விசார ணையை தொடங்கியுள்ளனர். மேலும் இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதலுக்குள்ளான நபர் தனியார் நிறுவனம் ஒன்றின் உரிமையாளர் என்று பொலிஸார் தெரிவித்தனர். அந்த நபர் தனது நிறுவனத்தில் பணிபுரிந்த ஒரு இளம் பெண்ணுடன் ஏதோ அலுவலக விடயமாக கடவத்தை பகுதிக்கு மோட்டார் வாகனத்தில் சென்றிருந்தார். அந்த நிறுவனத்தின் உரிமையாளருக்கும் இளம் பெண்ணின் காதலன் எனக் கூறப்படும் நபருக்கும் இடையே ஏற்பட்ட வாக்குவாதத்தின் விளைவாக இந்த சம்பவம் நடந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

இந்த சம்பவத்தால் ஏற்பட்ட விரிசல் காரணமாக, குறித்த காதலன் வேறொரு நபருடன் வந்து தனியார் நிறுவனத்தின் உரிமையாளரை வீதியில் தாக்கியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

யுவதியின் காதலன் எனக் கூறப்படும் நபரும் அவருடன் தாக்க வந்த மற்றொரு நபரும் இவ்வாறு கைது செய்யப்பட்டதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். மாகொல மற்றும் களனியைச் சேர்ந்த 22 மற்றும் 24 வயதுடைய இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் கிரிபத்கொட பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# தலதா வழிபாட்டில் கலந்துகொண்ட பக்தர்களில் எழுவர் பலி

(எம்.ஏ.அமீனுல்லா)

கண்டி ஸ்ரீ தலதா மாளிகைக்கு புனித தந்த தாது வழிபாட்டுக்காக கலந்துகொண்ட பக்தர்களில் நேற்று (27) வரையும் ஏழுபேர் உயிரிழந்துள்ளதாக கண்டி பொலிஸார் தெரிவித்தனர்.

இதில் அதிகமானோர் வயதானவர்கள் எனவும் இவர்கள் சன நெரிசலுக்கு மத்தியில் வரிசையில் இருந்தவர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஆறு பேர் மாரடைப்பால் உயிரிழந்துள்ளதுடன், மற்றுமொருவர் அந்தப் பகுதியில் இடம்பெற்ற விபத் தொன்றில் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்தவர்கள் குருநாகல், குளியாப்பிட்டிய, பண்டாரகம, கலிகமுவ மற்றும் பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

இதேவேளை, புனித தந்ததாது வழிபாட்டுக்காக வரிசையில் காத்திருந்தபோது, சுகயீனமடைந்த 550 பேர் கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அதில் அநேகர் சுகமடைந்த பின்னர் அங்கிருந்து வெளியாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், தலதா வழிபாட்டில் கலந்துகொண்டுள்ள 7000 பக்தர்கள் உப வைத்திய சிகிச்சை நிலையங்கள் மூலம் சிகிச்சை பெற்றுள்ளனர். தலதா வழிபாட்டுக் காலத்தில் கண்டி மற்றும் பேராதனை வைத்திய சாலைகளின் மேற்பார்வையில் 10 உப வைத்திய சிகிச்சைப் பிரிவுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தொலைபேசி சின்னம்...

ஏனெனில் சென்ற தடவை கூட நாங்கள் ஆட்சியை கைப்பற்றுவதில் அந்த வட்டாரத்தினால் நிறைய குளறுபடிகள் ஏற்பட்டது என்பது எல்லோருக்கும் தெரியும் என்றார்.

மேலும், தொலைபேசி சின்னம் (ஐக்கிய மக்கள் சக்தி) செத்து போய்விட்டது. அவர்களுடனான உறவு, இந்த தேர்தலில் மட்டுமல்ல இனிவரும் தேர்தல்களிலும் அவர்களுடனான உறவை பற்றி இன்னும் சிந்திக்க வேண்டியுள்ளது. தொலைபேசி சின்னத்துக்கு இங்கு வாக்களிக்க சொல்ல இன்னும் நாங்கள் தயாராக இல்லை. கண்டி மாவட்டத்தில் தனித்து கேட்கும் தீர்மானத்தை எடுத்துள்ளோம். வேட்பாளர்களினதும், அமைப்பாளர் களினதும் மன்றாட்டம் காரணமாக 03 இடங்களில் மட்டும் நாங்கள் ஐக்கிய மக்கள் சக்தியில் எங்களின் வேட்பாளர்களை களமிறக்கி உள்ளோம். 11 இடங்களில் தனித்து களமிறங்கியுள்ளோம் என்றார்.

## ஐரோப்பிய ஒன்றிய...

குறித்து ஆராய்வதே இவர்களின் விஜயத்தின் நோக்கமாகும்.

ஏப்ரல் 28ஆம் திகதி இலங்கை வந்தடையும் ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் குழு எதிர்வரும் மே மாதம் 07ஆம் திகதிவரை இலங்கையில் தங்கியிருந்து இது தொடர்பான மீளாய்வுகள் மற்றும் கலந்துரையாடல்களை மேற்கொள்ளவுள்ளது.

இலங்கையின் ஆகக் கூடியளவில் ஏற்றுமதிகளை மேற்கொள்ளும் நாடுகளின் பட்டியலில் ஐரோப்பிய ஒன்றியம் இரண்டாம் இடத்தில் உள்ளது.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு இலங்கை வருடாந்தம் மூன்று பில்லியன் டொலர் பெறுமதியான ஏற்றுமதிகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## நாட்டின் பொருளாதாரம்...

தற்போதைக்கு நாடு பயணிக்கும் திசையைக் கொண்டும் எனது பொருளாதார அறிவைக் கொண்டும் அதனை உறுதியாக குறிப்பிட்டுக் கொள்ள விரும்புகின்றேன்.

அதேநேரம், பாராளுமன்ற உறுப்பினர் பதவி இருந்தாலும், இல்லாவிட்டாலும் நாடு சிக்கலான நிலைமையொன்றுக்கு முகம் கொடுக்கும்போது அதிலிருந்து பொதுமக்களை பாதுகாப்பதற்கான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு ஒருபோதும் தயங்க மாட்டேன்'' என்றும் வஜிர அபேவர்தன தொடர்ந்தும் குறிப்பிட்டுள்ளார்.

## இரவில் கூட்டங்களை...

சர்வசன அதிகாரத்தின் கடுவெல கட்சி அலுவலகத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டபோதே திலித் ஜயவீர எம்.பி. இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

''நாட்டின் தற்போதைய பாதுகாப்பு நிலைமை காரணமாக, இரவில் பொதுக்கூட்டங்களை நடத்த வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. சுதந்திரமாக கருத்துகளை தெரிவிக்கக்கூட முடியாத நிலைமை இருக்கிறது.

வெறுப்பு சமூகத்தை உருவாக்குவதையும் சமூக ஊடக பயங்கரவாதத்தைப் பரப்புவதையும் தோற்கடிக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டும். எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் சில நேர்மையான விமர்சனங்களைச் செய்தாலும், அரசாங்கத்தின் போலி கருத்துப் படை அவர்களுக்கு மரண உத்தரவுகளைப் பிறப்பிக்கிறது'' என்றும் திலித் ஜயவீர எம்.பி. சுட்டிக்காட்டுகிறார்.

## 9,457 மாணவர்கள்...

பல்கலைக்கழக நுழைவுக்கான அடிப்படைத் தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ளதாகவும் தெரிவித்தார்.

பல்கலைக்கழக சேர்க்கைக்கான அடிப்படைத் தகுதிகளைப் பூர்த்தி செய்யும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும் 2023ஆம் ஆண்டில் 64.33 சதவீதமாக இருந்ததாகவும் 2024இல் அது 64.73ஆக உயர்ந்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த ஆண்டு உயர்தரப் பரீட்சைக்கு 274,361 பரீட்சார்த்திகள் தோற்றியதாகவும் அவர்களில் 177,588 மாணவர்கள் பல்கலைக்கழக நுழைவுக்கான அடிப்படைத் தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ளதாகவும் அவர் கூறினார்.

மேலும், பரீட்சைக்கு 222,774 பாடசாலை பரீட்சார்த்திகளும் 51,587 தனியார் பரீட்சார்த்திகளும் பங்கேற்றதாக அவர் தெரிவித்தார். அத்துடன், பரீட்சையில் 03 முக்கிய பாடங்களிலும் மொத்தம் 29,244 பரீட்சார்த்திகள் தோல்வியடைந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

## உயர்தரப் பரீட்சை...

இவர் உயர்தரப் பரீட்சையில் உயிரியல் பிரிவுக்கு தோற்றி 3 'ஏ' சித்திகளைப்பெற்று மாவட்ட ரீதியில் 12ஆவது இடத்தையும் தேசிய ரீதியில் 357ஆவது இடத்தையும் பெற்று, மருத்துவ பீடத்துக்கு நுழைய தகுதி பெற்றுள்ளார்.

முன்னதாக இவர் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையிலும் 9 'ஏ' சித்திகளைப்பெற்று சிறந்து விளங்கியுள்ளதோடு, மக்களுக்கு சேவை செய்ய தனது தந்தையைப்போல மருத்துவராக வேண்டும் என்ற தனது கனவை பகிரங்கமாக வெளிப்படுத்தியுள்ளார்.

போலி குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்ட இவரது தந்தையான வைத்தியர் ஷாபி ஷிஹாப்தீனை, சகல குற்றச்சாட்டுகளில் இருந்தும் குருநாகல் நீதவான் நீதிமன்ற கடந்த வருடம் நவம்பர் மாதம் விடுவித்து தீர்ப்பளித்திருந்தது.

## உயர்தரப் பரீட்சை பெறுபேறு...

கல்விப் பொது தராதர உயர்தரப் பரீட்சையின் பெறுபேற்றை மீளாய்வு செய்வதற்காக அடுத்த மாதம் 02ஆம் திகதி முதல் 16ஆம் திகதி வரை விண்ணப்பிக்க முடியும் என பரீட்சை திணைக்களம் தெரிவித்தது.

பரீட்சார்த்திகள் ONLINEEXAMS.GOV.LK எனும் இணையத்தளத்துக்குள் பிரவேசித்து பெறுபேற்றை மீளாய்வு செய்வதற்காக விண்ணப்பிக்க முடியும்.

இம்முறை உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளுக் கமைய 1,77,588 பேர் பல்கலைக்கழகத்துக்கான தகுதி பெற்றுள்ளனர்.

அத்துடன், 456 பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக பரீட்சைத் திணைக்களம் தெரிவித்தது.

## 05 வயதுக்குட்பட்டோர்...

ஐந்து வயதுக்குட்பட்ட அனைத்து குழந்தை களின் இறப்புகளும் கட்டாய பிரேத பரிசோ தனைக்குட்படுத்தப்படும் என்று நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சு மரண விசாரணை அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளது.

மரண விசாரணை அதிகாரிகளுடன் பகிர்ந்து கொள்ளப்பட்ட சுற்றறிக்கையில், இலங்கையில் குழந்தை இறப்பு பகுப்பாய்வின் ஒரு முக்கிய அங்கம் இது என்று அமைச்சு எடுத்துரைத்தது.

05 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் இறப்பு விகிதங்களுக்கான பொதுவான காரணங்களைக் கண்டறிந்து, அத்தகைய இறப்புகளைத் தவிர்க்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க இந்த நடைமுறை விதிக்கப்படுவதாக அமைச்சின் மூத்த அதிகாரிகள் கூறினர்.

“இந்த இறப்பு விகிதங்களைக் குறைக்க இந்த இறப்புகளுக்குப் பின்னால் உள்ள காரணங்களை ஆய்வு செய்து பகுப்பாய்வு செய்ய பிரேத பரிசோதனை முடிவுகள் பயன்படுத்தப்படும்.

தற்போது, ஒரு குழந்தையின் மரணம் சந்தேகத்துக்குரிய தீங்கு, சந்தேகத்துக்கிடமான சூழ்நிலைகள் அல்லது விபத்துகளை உள்ளடக்கியதாக இருக்கும்போது மட்டுமே பிரேத பரிசோதனைகள் நடத்தப்படுகின்றன. இருப்பினும், மருத்துவ வல்லுநர்கள் ஏற்கனவே இறப்புக்கான காரணத்தை தீர்மானித்த சந்தர்ப்பங்களில் கூட ஐந்து வயதுக்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் உள் பரிசோதனை களை புதிய சட்டம் கட்டாயமாக்கும்.

# தேசபந்துவை பதவிநீக்க நியமிக்கப்பட்ட விசாரணை குழுவுக்கு உதவ 4 பொலிஸ் அதிகாரிகள் அடங்கிய குழு

பதவி இடைநீக்கப்பட்டுள்ள பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை அவரது பதவியில் இருந்து நீக்குவதற்காக நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவுக்கு உதவ குற்றப் புலனாய்வுத் துறையைச் சேர்ந்த உதவி பொலிஸ் கண்காணிப்பாளர் உட்பட நான்கு பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

ரி.எம்.டபிள்யூ.தேசபந்து தென்னக்கோன் தனது பதவித் தத்துவங்களை பாரதூரமான வகையில் துஷ்பிரயோகம் செய்தமை தொடர்பில் விசாரணை செய்து அதன் வெளிப்படுத்தல்களை அறிக்கையிடுவதற்காக நியமிக்கப்பட்ட விசாரணைக்குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்க பொலிஸ் விசாரணைக் குழுவொன்றைப் பரிந்துரைக்குமாறு பதில் பொலிஸ் மா அதிபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் மா அதிபர் ரி.எம்.டபிள்யூ.தேசபந்து தென்னக்கோன் தனது பதவித் தத்துவங்களை பாரதூரமான வகையில் துஷ்பிரயோகம் செய்தமை தொடர்பில் விசாரணை செய்து அதன் வெளிப்படுத்தல்களை அறிக்கையிடுவதற்காக நியமிக்கப்பட்ட விசாரணைக்குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்க பொலிஸ் விசாரணைக் குழுவொன்றைப் பரிந்துரைக்குமாறு, விசாரணைக் குழு பதில் பொலிஸ் மா அதிபருக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளது. குறித்த விசாரணைக்குழு இரண்டாவது தடவையாக கடந்த வெள்ளிக்கிழமை (25) பாராளுமன்றத்தில் கூடியபோதே இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டது.

அத்துடன், இந்தக் குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் (ஜனாதிபதி சட்டத்தரணி) திலீப பீரிஸ் மற்றும் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் ரஜித பெரேரா ஆகியோர் சட்ட மாஅதிபரினால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

எதிர்கால விசாரணை செயற்பாடுகளை எவ்வாறு முன்னெடுப்பது மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினரை எவ்வாறு இணைத்துக் கொள்வது என்பது தொடர்பில் அன்றுகூடிய விசாரணைக்குழு கலந்துரையாடியது.

எதிர்கால நடவடிக்கைகள் குறித்துத் தீர்மானிப்பதற்கு இன்று 28ஆம் திகதி மீண்டும் கூடுவதற்கும் இக்குழு முடிவுசெய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உயர்தரப் பரீட்சையில் பாடரீதியாக முதல் 03 இடங்களைப் பிடித்தோர் விபரம்

2024ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் முதல் இடத்தைப் பிடித்த மாணவர்களின் பட்டியலை பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. அதன் விபரம் வருமாறு,

### உயிரியல் பிரிவு

– முதலாம் இடம்: சந்தித் நிம்தர ஹெகொட ஆராச்சி – மலியதேவ பெண்கள் கல்லூரி, குருநாகல்

– 2ஆவது இடம்: கல்பா விதுசராணி – அநுராதபுரம் மத்திய கல்லூரி

– 3ஆம் இடம்: ஜமுனானந்த பிரணவன் – இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்

### கணிதப் பிரிவு

– முதலாம் இடம்: லசந்து ரன்சர குமாரகே – பண்டாரநாயக்க கல்லூரி, கம்பஹா

– 2ஆம் இடம்: கந்தசாஸன் தசரத் – ஹாட்லி கல்லூரி, யாழ்ப்பாணம்

– 3ஆம் இடம்: தெவிந்து திலமித் தஹநாயக்க – பண்டாரநாயக்க கல்லூரி, கம்பஹா

### வணிகப் பிரிவு

– முதலாம் இடம்: அமாஷா துலாரி – விசாகா வித்தியாலயம், கொழும்பு

– 2ஆம் இடம்: இந்துவர சன்ஹித குமாரபேலி – றோயல் கல்லூரி, கொழும்பு

– 3ஆவது இடம்: செனண்டி உதார பெரேரா – சுஜாதா வித்தியாலயம், நுகேகொட

### கலைப் பிரிவு

– முதலாம் இடம்: செனாலி சமத்க ரணசிங்க – ரத்னாவலி பாலிகா வித்தியாலயம், கம்பஹா

– 2ஆம் இடம்: தினெத்மி மெத்தங்க ஜனகாந்த – பொர்குசன் உயர்பகளிர் கல்லூரி, இரத்தினபுரி

– 3ஆம் இடம்: இசுரி அஞ்சலிகா பீரிஸ் – மகாமாயா பெண்கள் கல்லூரி, கண்டி

### பொறியியல் தொழில்நுட்ப பிரிவு

– முதலாம் இடம்: காவ்யா ரவிஹன்சா – மயூரபாத மத்திய கல்லூரி, நாரம்மல

– 2ஆவது இடம்: உஷான் மலித் ஜயசூரிய – சிவலி மத்திய கல்லூரி, இரத்தினபுரி

– 3ஆவது இடம்: பசிந்து மதுஷங்க – ஸ்ரீசுமங்கலா வித்தியாலயம், ஹிக்கடுவை

### உயிரியல் அமைப்புகள் தொழில்நுட்பப் பிரிவு

– முதலாம் இடம்: நெத்மி நவோத்யா மாரசிங்க – சதலங்க தேசிய பாடசாலை

– 2ஆம் இடம்: மஹிஷா பத்திரன – புஷ்பதான பெண்கள் கல்லூரி, கண்டி

– 3ஆவது இடம்: சாமோதி ஹன்சிகா – ரத்னாவலி பாலிகா வித்தியாலயம், கம்பஹா

# கிளிநொச்சியில் கடும் மழையால் வீடுகளுக்குள் புகுந்த வெள்ளம்

மு.தமிழ்ச்செல்வன்



கிளிநொச்சியில் நேற்று (27) பெய்த கடும் மழை காரணமாக ஆங்காங்கே வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

பெரும்பாலான வீதிகளில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக பொது மக்களின் போக்குவரத்து சில மணிநேரம் நெருக்கடிக்குள் உள்ளானது. அத்தோடு பொது மக்களின் வீடுகளுக்குள்ளும் வெள்ள நீர் சென்றமையால் அவர்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிப்படைந்துள்ளது. வீடுகளுக்குள்ளும் வீதிகளிலும் வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக நகர் புறங்களில் அமைக்கப்பட்டுள்ள முறையற்ற மதில்கள் காரணமாக வெள்ள நீர் வடிந்தோட முடியாத நிலையில் வீடுகளுக்குள் புகுந்த வெள்ள நீரை வெளியேற்ற முடியாது பொது மக்கள் சிரமங்களை எதிர்கொண்டிருந்தனர்.

## தண்ணீரையே கொடுக்க...

''பாகிஸ்தானுடனான சிந்து நதி நீர் ஒப்பந்தத்தை நிறுத்தி வைப்பதாக இந்தியா விடுத்த மிரட்டல், இந்தியாவுடனான எரிசக்தி துறை இணைப்பை மறுபரிசீலனை செய்வதற்கான மதிப்புமிக்க பாடங்களை இலங்கைக்கு வழங்குகிறது'' என்று பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவர் முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

காஷ்மீரில் சுற்றுலாப் பயணிகளை தீவிரவாதி கள் தாக்கி 26 பேர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து, அதன் அண்டை நாடான பாகிஸ்தானுடனான இராஜதந்திர உறவுகளைக் குறைப் பதற்கான நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, பாகிஸ்தானுடனான சிந்து நதி நீர் ஒப்பந்தத்தை உடனடியாக நிறுத்தி வைப்பதாக இந்தியா அச்சுறுத்தியது.

இதனையடுத்து, நேற்றுமுன்தினம் ஊடகங்க ளுக்கு கருத்துத் தெரிவித்த கம்மன்பில, ''இரண்டு மின் கட்டமைப்புகளை ஒன்றோடொன்று இணைப்பதற்கும் பல்துறை பெற்றோலிய குழாய் பதிப்பதற்கும் இந்தியாவுடன் கையெழுத்திட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களை இலங்கை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கூறினார்.

இது தொடர்பாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் வருகையின்போது கையெழுத்திட்ட இரண்டு புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் நகல்களை அவர் பொதுவில் வெளியிட்டார்.

இலங்கையை எரிசக்தி மையமாக வளர்ப்பதற் காக இலங்கை, இந்தியா மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் இடையே கையெழுத்திடப்பட்ட முத்தரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தத்தைப் பற்றி குறிப்பிடுகையில், அது ஆங்கிலம், இந்தி மற்றும் அரபு ஆகிய மூன்று மொழிகளில் கையெழுத் திடப்பட்டுள்ளதாகவும் இது ஆங்கிலத்தில் மட்டுமே கையெழுத்திடும் முந்தைய மரபிலிருந்து முறித்துக் கொண்டதாகவும் அவர் கூறினார்.

பாகிஸ்தானுடன் இணையாக, இரு நாடுகளுக்கும் இடையிலான நீர் பகிர்வு ஒப்பந்தத்தை இந்தியா நிறுத்தி வைப்பதாக அச்சுறுத்தியதாகவும் ஒரு பிரச்சினை ஏற்பட்டால் எரிசக்தி இணைப்பு குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பாக அது என்ன செய்யும் என்பது புரிந்துகொள்ளத்தக்கது என்றும் அவர் கூறினார்.

இந்த ஒப்பந்தம் சிந்து நதிப் படுகையின் மூன்று கிழக்கு நதிகளான ரவி, பியாஸ் மற்றும் சட்லஜ் ஆகியவற்றை இந்தியாவுக்கும் மூன்று மேற்கு நதிகளான சிந்து, ஜீலம் மற்றும் செனாப் ஆகியவற்றில் 80 சதவீதத்தை பாகிஸ்தானுக்கும் ஒதுக்கியது.

1960 சிந்து நீர் ஒப்பந்தம் அணுசக்தி போட்டியா ளர்களுக்கு இடையிலான இரண்டு போர்களில் இருந்து தப்பித்தது மற்றும் எல்லை தாண்டிய நீர் மேலாண்மைக்கு ஒரு எடுத்துக் காட்டாகக் கருதப்பட்டது.

''எங்கள் விஷயத்தில், நாங்கள் இந்தியாவுடன் எரிசக்தி இணைப்பை நாடுகிறோம். இருப்பினும், பாகிஸ்தான் தானாக முன்வந்து தண்ணீருக்காக இந்தியாவைச் சார்ந்திருக்க முடிவுசெய்யவில்லை. அது ஒரு கரையோர நாடாக உள்ளது. அது தண்ணீர் தேவைகளுக்காக இந்தியாவில் இருந்து பாயும் ஆறு ஆறுகளைச் சார்ந்துள்ளது.

ஒரு அடிப்படை மனிதாபிமானத் தேவையான நீர் விநியோகத்தை, ஒரு பிரச்சினை ஏற்பட்டால் துண்டிக்க முயன்றால், மின்சாரம் மற்றும் பெற்றோலிய விநியோகத்துக்காக இந்தியாவுடன் இணைப்பதில் நாம் இருமுறை யோசிக்க வேண்டும்'' என்று அவர் கூறினார்.

# தினசரி பலாபலன்கள்

**விசுவாவசு வருடம் சித்திரை மாதம் 15ஆம் நாள் திங்கட்கிழமை**

**மேஷம்:** உடல் நலம் சீராக இருக்கும். தொழில், வியாபார நன்மைகள், உண்டு. நினைத்ததை இன்று சாதிப்பீர்கள்.

**ரிஷபம்:** உங்கள் மதிப்பினை நீங்களே கெடுத்துக் கொள்ளாதீர்கள். உணவு, உறக்கம் இன்றி சிரமப்படுவீர்கள்.

**மிதுனம்:** எந்த வேலையையும் மிக எளிதில் முடிப்பீர்கள். உடல் நோய்களில் அக்கறை காட்டுங்கள். கோபத்தை குறைத்துக் கொள்ளுங்கள்.

**கடகம்:** எதிர்கால வாழ்க்கைப்பற்றிய சிந்தைகளில் இருப்பீர்கள். நண்பரின் எதிர்பாராத உதவியால் ஆனந்த மடைவீர்கள்.

**சிம்மம்:** நீங்கள் எண்ணிய வெளிநாட்டுப் பயணம் நிறைவேறும். யாரையும் வீணே பகைத்துக் கொள்ளாதீர்கள்.

**கன்னி:** உடலைக் கெடுக்கும் எந்த முயற்சி யும் நன்மை தராது. கோபத்தை குறைத்துக் கொண்டால் இலாபம் உண்டு.

**துலாம்:** காதல், திருமணம் கைகூடும். உல்லாசமாகவும் மகிழ்ச்சியாகவும் இன்றைய நாளைக் கழிப்பீர்கள். புதிய முயற்சிகள் வேண்டாம்.

**விருச்சிகம்:** சில விடயங்களுக்காக மற்றவர்களுக்கு நீங்கள் கட்டுப்பட்டே ஆக வேண்டும். டென்ஷன் வேண்டாம்.

**தனுசு:** புத்திரர்களால் சற்று மனக்கவலை ஏற்படும். அதிர்ஷ்ட வாய்ப்புகளை நழுவ விடுவீர்கள். அரச வகையில் சற்று சங்கடங்கள் உண்டு.

**மகரம்:** குடும்பத்தில் மகிழ்ச்சியும் அன்பும் அமையும் நாள். உணர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொள்ளுங்கள்.

**கும்பம்:** நினைத்த காரியத்தில் வெற்றி கிட்டும் நாள். புதிய பொருள்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மீனம்:** தேவையற்ற செலவுகளால் பணத்தை இழப்பீர்கள். வாய்வார்த்தைகளால் குழப்பங்கள் ஏற்படும். கோபத்தால் பகை.

| | |
|---|---|
| திதி: | பிரதமை மு.இ.9.11 வரை பின் துவிதியை |
| நட்சத்திரம்: | பரணி மு.இ.9.37 வரை பின் கார்த்திகை |
| பிறை: | வளர்பிறை |
| யோகம்: | மரண யோகம்; மு.இ.9.37 வரை பின் அமிர்த யோகம் |
| வார சூலை: | கிழக்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது |
| நல்ல நேரம்: | காலை- 5.57 – 6.57 மணிவரை பகல் - 12.57 –1.57 மணிவரை மாலை- 2.57 – 3.57 மணிவரை |
| ராகு காலம்: | 7.27 – 8.57 மணிவரை |
| எமகண்டம் : | 10.27– 11.57 மணிவரை |
| குளிகை: | 1.27 – 2.57 மணிவரை |
| சந்திராஷ்டமம்: | கன்னி-துலாம் ராசியினர் |

எச்சரிக்கையாக செயற்படவும் (பின்னிரவு 2.53 வரை கன்னி ராசியினருக்கு)

**அதிர்ஷ்ட தாராபலனுடைய நட்சத்திரங்கள்**

**இன்று முன்னிரவு 9.37 வரை**

அஸ்வினி, கார்த்திகை, ரோஹிணி, திருவாதிரை, பூசம், மகம், உத்திரம், அஸ்தம், சுவாதி, அனுஷம், மூலம், உத்திராடம், திருவோணம், சதயம், உத்திரட்டாதி.

**இன்று முன்னிரவு 9.37 மேல்**

பரணி, ரோஹிணி,மிருகசீரிடம், புனர்பூசம், ஆயிலியம், பூரம், அத்தம், சித்திரை, விசாகம், கேட்டை, பூராடம், திருவோணம், அவிட்டம், பூரட்டாதி, ரேவதி

**போன்ற நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கும், தொழில், வியாபார இலாபங்கள், கல்விச் சிறப்பு, திடீர் தன அதிர்ஷ்டம், உடல் ஆரோக்கியம், தெய்வ அனுக்கிரகம் அனைத்தும் சித்திக்கும். அதிர்ஷ்டம், சுகம் உண்டு.**

**விசேட தினம்:** சித்திரை பரணி, சிறுத்தொண்டர் குரு பூசை



**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்) ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325 078-6759739







# இலட்சக்கணக்கானோரின் கண்ணீர் அஞ்சலிக்கு மத்தியில் விடைபெற்றார் புனித பாப்பரசர்

















மறைந்த பாப்பரசர் பிரான்சிஸின் திருவுடல் இலட்சக்கணக்கானோரின் கண்ணீர் அஞ்சலிக்கு மத்தியில், அவரது விருப்பப்படி ரோமிலுள்ள செயின்ட் மேரி மேஜர் பசிலிக்காவில் சனிக்கிழமை (26) நல்லடக்கம் செய்யப்பட்டது.

முன்னதாக பாப்பரசரின் திருவுடலுக்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உள்ளிட்ட பல உலகத் தலைவர்களும் இலட்சக்கணக்கான பொதுமக்களும் கண்ணீர் மல்க அஞ்சலி செலுத்தினர். கத்தோலிக்க மதத்தலைவர் போப் பிரான்சிஸ் (வயது 88) உடல் நலக் குறைவால் கடந்த திங்கட்கிழமை 21ஆம் திகதி வத்திக்கானில் காலமானார்.

அவரது உடல் கடந்த 23ஆம் திகதி முதல் 03 நாட்களாக வத்திக்கான் செயின்ட் பீட்டர்ஸ் பசிலிக்கா தேவாலயத்தில் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. உலகம் முழுவதும் இருந்து இலட்சக்கணக்கான மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து பாப்பரசரின் உடலுக்கு இறுதி மரியாதை செலுத்தினர். இதில், பாப்பரசரின் திருவுடலுக்கு சுமார் 2.5 இலட்சம் பேர் அஞ்சலி செலுத்தியதாக வத்திக்கான் தகவல் வெளியிட்டது.

இதையடுத்து, பாரம்பரிய வழக்கப்படி, பாப்பரசர் பிரான்சிஸின் முகம் வெள்ளை துணியால் மூடப்பட்டது. அவரது வாழ்க்கை குறிப்புகள் அடங்கிய ஆவணம், அவரது பதவிக்காலத்தில் வெளியிடப்பட்ட நாணயங்கள் உள்ளிட்ட பொருட்கள் அடங்கிய பையும் வைக்கப்பட்டு மரப்பெட்டி மூடி சீல் வைக்கப்பட்டது.

இந்நிலையில், இறுதிச் சடங்குகள் உள்ளூர் நேரப்படி சனிக்கிழமை காலை 10 மணிக்கு ஆரம்பமாகின. இதில், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், முன்னாள் ஜனாதிபதி ஜோ பைடன், இந்திய ஜனாதிபதி திரௌபதி முர்மு, பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவெல் மெக்ரோன், உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஸெலென்ஸ்கி, ஐ.நா பொதுச் செயலாளர் அண்டனியோ குட்டரெஸ், அர்ஜென்டினா ஜனாதிபதி ஜேவியர் மிலே, பிரித்தானிய பிரதமர் ஸ்டார்மர், பிரித்தானிய இளவரசர் வில்லியம், இலங்கை வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், இத்தாலி பிரதமர் ஜோர்ஜியா மெலோனி, ஆர்ஜென்ரீனா ஜனாதிபதி ஜேவியர் மிலேய், பிரேஸில் ஜனாதிபதி லூலா டாசில்வா, ஆஸ்திரிய ஜனாதிபதி அலெக்ஸாண்டர் வாண்டெர் பெலன், ஆஸ்திரிய பிரதமர் கிறிஸ்டியன் ஸ்டாக்கர், பங்களாதேஷ் அரசின் தலைமை ஆலோசகர் முகமது யூனுஸ், ஹங்கேரி ஜனாதிபதி விக்டர் ஆர்பன், ஸ்பெயின் மன்னர் ஆறாம் பெலிபே, பெல்ஜியம் மன்னர் பிலிப், உலக சுகாதார அமைப்பின் இயக்குநர் டெட்ரோஸ் அதானோம் கேப்ரியேசஸ் மற்றும் ஐரோப்பிய அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என 160க்கும் மேற்பட்ட உலகத் தலைவர்கள் பங்கேற்றனர்.

இதுதவிர, ஆயிரக்கணக்கான பொதுமக்களும் செயின்ட் பீட்டர்ஸ் சதுக்கத்தில் குவிந்து சிறப்பு திருப்பலியில் பங்கேற்று பாப்பரசரின் மறைவுக்கு கண்ணீர் அஞ்சலி செலுத்தினர். அப்போது, பாப்பரசர் பிரான்சிஸின் 12 ஆண்டு கால பாப்பரசர் வாழ்க்கையை குறிப்பிட்டு பேசிய கர்தினால் ஜியோவானி பாட்டிஸ்டா ரே, ''பிரான்சிஸ் மக்களின் போப்பாக வாழ்ந்தார். அனைவரிடமும் திறந்த இதயத்துடன் இருந்தார். புலம்பெயர்ந்தோர் மீது அதிக அக்கறை கொண்டிருந்தார்'' என கூறியதும் கூட்டத்தில் பலரும் கைதட்டி வரவேற்றனர்.

இதையடுத்து, பாப்பரசரின் திருவுடல் வைக்கப்பட்ட மரப்பேழை பீட்டர்ஸ் சதுக்கத்திலிருந்து வாகனத்தில் ஊர்வலமாக ரோம் நகருக்கு கொண்டு செல்லப்பட்டது. சுமார் 06 கிலோமீற்றர் தூரம் நடந்த இந்த வாகனப் பேரணியின்போது, வீதியின் இருபுறமும் சுமார் 03 இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் குவிந்து பாப்பரசர் பிரான்சிஸை வழியனுப்பி வைத்தனர்.

பாப்பரசர் பிரான்சிஸின் விருப்பப்படி அவரது உடல் நல்லடக்கத்துக்காக ரோம் நகரின் செயின்ட் மேரி மேஜர் பசிலிக்கா தேவாலயத்துக்கு கொண்டு செல்லப்பட்டது. அங்கு பாப்பரசர் பிரான்சிஸின் உடலை புலம்பெயர்ந்தோர், கைதிகள், வீடற்றவர்கள், 3ஆம் பாலினத்தவர்கள் என 40பேர் கொண்ட குழுவினர் வெள்ளை ரோஜா வைத்து வரவேற்றனர்.

பின்னர் பாப்பரசரின் திருவுடல் தேவாலய நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து, தேவாலய கல்லறையில் உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது. பொதுவாக பாப்பரசர்களின் உடல் 03 அடுக்கு சவப்பெட்டியில் வைக்கப்படும். ஆனால், பாப்பரசர் என்பவர் அதிகாரமிக்க நபராக இருக்கக் கூடாது, மக்களோடு மக்களாக பாதிரியாராக மட்டுமே இருக்க வேண்டுமென்ற எளிய வாழ்க்கை வாழ்ந்த பாப்பரசர் பிரான்சிஸின் உடல் துத்தநாகம் கலந்த ஒற்றை அடுக்கு மரப்பெட்டியில் வைக்கப்பட்டிருந்தது.

அதேபோல எந்த ஆடம்பரமும் இல்லாத கல்லறைக் குழியில் நல்லடக்கம் செய்யப்பட்டது. ஆர்ஜென்ரீனாவின் பியூனஸ் அயர்சில் பிறந்தவரான பிரான்சிஸ் கடந்த 2013ஆம் ஆண்டு மார்ச் 13ஆம் திகதி பாப்பரசராக தெரிவு செய்யப்பட்டார். இவர் முதல் லத்தீன் அமெரிக்காவை சேர்ந்த பாப்பரசர் என்பது குறிப்பிடத்தக்கது.

மறைந்த பாப்பரசரின் இறுதிக்கிரியைகள் நேற்றுமுன்தினம் (26) நிறைவடைந்த நிலையில், 09 நாட்கள் துக்கம் அனுஷ்டிப்பு தொடங்கியது. அதோடு, புதிய பாப்பரசரை தெரிவு செய்வதற்கான நடைமுறைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

### அடுத்த போப் யார்?

பாப்பரசர் பிரான்சிஸ் மறைவைத் தொடர்ந்து புதிய பாப்பரசர் தெரிவு, சிஸ்டின் தேவாலயத்தில் நடத்தப்படும். இதில் உலகம் முழுவதும் இருந்து 135 கர்டினால்கள் வாக்களிப்பார்கள். 3இல் 2 பங்கு பெரும்பான்மை அடிப்படையில் புதிய பாப்பரசர் தெரிவு செய்யப்படுவார். அதிகபட்சம் 33 சுற்று வாக்கெடுப்பு நடத்தப்படும். இதிலும் எவருக்கும் 3இல் 2 பங்கு பெரும்பான்மை கிடைக்காத பட்சத்தில், முதல் 02 இடங்களை பிடிப்பவர்கள் இடையே வாக்கெடுப்பு நடத்தி புதிய பாப்பரசர் தெரிவு செய்யப்படுவார்.

புதிய பாப்பரசரை தெரிவு செய்யும் நடைமுறைகள் 15-20 நாட்களுக்கு பின்னர் ஆரம்பமாகவுள்ளன. 80 வயதுக்கு குறைவான கார்டினல்கள் வாடிகனில் கூடி புதிய பாப்பரசரை தெரிவு செய்வதற்கான இரகசிய நடைமுறைகளை தொடங்குவார்கள். வத்திக்கானிலுள்ள சிஸ்டைன் தேவாலயத்தில் வைத்து இந்த நடைமுறைகள் நடைபெறும்.

புதிய பாப்பரசர் நடைமுறையில் ஈடுபட்டுள்ள கார்டினல்கள் வெளி உலக தொடர்பின்றி இருப்பார்கள். ஊடகங்களிடம் மட்டுமின்றி தொலைபேசிகள் மூலமாகவும் யாருடனும் தொடர்பில் இருக்க மாட்டார்கள். புதிய பாப்பரசராக தெரிவு செய்யப்படுபவருக்கு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை கிடைக்கும் வரை பல்வேறு கட்ட வாக்கெடுப்புகள் இடம்பெறும்.

ஒவ்வொரு சுற்று முடிவுக்கு பின்னரும் வாக்கெடுப்பில் பயன்படுத்தப்படும் தாள்கள் எரிக்கப்படும். இந்த நடைமுறைகளுக்கு பின்னர் கருப்பு நிற புகை சிக்னல்கள் வெளியிடப்பட்டால் பாப்பரசர் தெரிவு செய்யப்படவில்லை என்பதை குறிக்கும். வெள்ளை நிற புகை குறியீடு வந்தால், புதிய பாப்பரசர் தெரிவு செய்யப்பட்டதாக அர்த்தம். புதிய பாப்பரசர் தெரிவு செய்யப்பட்ட பின்னர், இந்த பொறுப்பை ஏற்றுக்கொள்ளுமாறு அவருக்கு முறைப்படி கோரிக்கை வைக்கப்படும். அவர் ஏற்றுக்கொண்டால் புதிய பாப்பரசராக அறிவிக்கப்படுவார். செயிண்ட் பீட்டர் பசிலிகாவிலிருந்து இந்த அறிவிப்பு வெளியிடப்படும். அதன்பின்னர் புதிய பாப்பரசர், செயிண்ட் பீட்டர் சதுக்கத்திலிருந்து மக்களுக்கு ஆசிர்வாதம் வழங்குவார்.

அதன் பின்னர், செயின்ட் பீட்டர்ஸ் பசிலிக்காவின் பிரதான பால்கனியிலிருந்து, வெள்ளை நிற கவசம் அணிந்து, பொதுமக்களுக்கு தனது முதல் உரையை வழங்குவார்.

அடுத்த பாப்பரசருக்கான போட்டியில், ஹங்கேரியை சேர்ந்த கார்டினல் பீட்டர் எர்டோ (வயது 72), பிலிப்பைன்ஸை சேர்ந்த கார்டினல் லூயிஸ் அன்டோனியோ டாக்லே (வயது 67),



மறைந்த பாப்பரசர் பிரான்சிஸின் கல்லறை

ஆபிரிக்காவின் கானாவை சேர்ந்த கார்டினல் பீட்டர் டர்க்சன்(வயது 76), கார்டினல் பியட்ரோ பரோலின்(வயது70) ஆகியோர் முன்னிலையில் இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

அடுத்த பாப்பரசர் யார் என்று கணிப்பது சாத்தியமற்றது என்றாலும், சில கார்டினல்களுக்கு மற்றவர்களை விட சிறந்த வாய்ப்புகள் இருப்பதாகக் கருதப்படுகிறது.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

**2025 ஏப்ரல் 28 ஆம் திகதி, திங்கட்கிழமை**

# சபாஷ் சத்தியலிங்கம்!

சிங்களவர்களுக்குப் பிறக்கின்ற பிள்ளைகளுக்குச் சத்தியலிங்கம் எனப் பெயரை வையுங்களென்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம் தெரிவித்திருப்பது எமது கவனத்தை ஈர்த்திருக்கிறது. இது வெறுமனே வசைபாடல் அல்ல என்பதால் அதுபற்றிப் பேசவேண்டியிருக்கிறது.

வவுனியாவில் நேற்றுமுன்தினம் ஊடகவியலாளரொருவர், ''சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க, ஆனையிறவு உப்பு விடயத்தில் பெயரைப் பார்க்க வேண்டாம், சுவையைப் பாருங்கள்''- என்று கூறியுள்ளமை தொடர்பில் கேள்வியெழுப்பியபோதே சத்தியலிங்கம் எம்.பி. மேற்கண்டவாறு பதிலளித்துள்ளார் என்பதைக் கவனத்தில்கொள்ள வேண்டும்.

"உப்பில் ருசியைத்தான் பார்க்க வேண்டும். அதுதான் உண்மை. ஆனால், உங்களுக்குப் பிறக்கின்ற பிள்ளைகளுக்கும் சத்தியலிங்கம் என்று பெயரை வையுங்கள். ஏன் ரத்நாயக்கா, விமல் வீரவன்ச, அந்த வன்ச, இந்த வன்ச எனப் பெயரை வைக்கின்றீர்கள். சத்தியலிங்கம், சுந்தரலிங்கம், பொன்னம்பலம் என உங்களது பிள்ளைகளுக்கும் பெயரை வையுங்கள். ஏனென்றால், உங்களுக்குப் பிள்ளைதானே வேண்டும். பெயர் முக்கியமில்லைத்தானே. அதற்குப் பின்னர் நாங்கள் வாயை மூடிக்கொண்டு இருக்கின்றோம்" - என்று குறிப்பிட்டுள்ளார் சத்தியலிங்கம்.

ஆனையிறவு உப்பு பெயர் மாற்றம் என்பது தென்னிலங்கைக்கு ஒரு சாதாரண பெயர்மாற்றமாக இருக்க முடியும். ஆனால், தமிழர்களைப் பொறுத்தவரை அது அப்படியல்ல. ஆனையிறவு உப்பு, இலங்கையின் வடக்கு மாகாணத்திலுள்ள ஆனையிறவு (Elephant Pass) பகுதியில் உள்ள உப்பளத்தில் உற்பத்தி செய்யப்படும் உயர்தர உப்பாகும். இதன் வரலாறு இலங்கையின் பொருளாதார, சமூக மற்றும் அரசியல் பின்னணியுடன் பின்னிப்பிணைந்துள்ளது.

ஆனையிறவு, யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கும் இலங்கையின் முக்கிய நிலப்பரப்புக்குமிடையே இணைப்பாக உள்ள ஒரு முக்கிய பகுதியாகும். இப்பகுதியின் உவர் நீர்நிலைகள் மற்றும் கடற்கரையோரச் சூழல் உப்பு உற்பத்திக்கேற்றதாக உள்ளன. இங்குள்ள உப்பளங்கள் இயற்கையாகவே கடல்நீரைப் பயன்படுத்தி உப்பு உற்பத்தி செய்யும் முறையைப் பின்பற்றுகின்றன.

ஆனையிறவு உப்பு உற்பத்தி பல நூற்றாண்டுகளாக இப்பகுதியில் நடைபெற்று வருகிறது. இலங்கையின் பண்டைய தமிழ் மக்கள், கடல் நீரை ஆவியாக்கி உப்பு பெறும் முறையைப் பயன்படுத்தினர். இந்த உப்பு உள்ளூர் மக்களின் உணவு, மீன் பதப்படுத்தல் மற்றும் வர்த்தகத்துக்கு முக்கிய பங்கு வகித்தது.

போர்த்துக்கேய, ஒல்லாந்த மற்றும் பிரித்தானிய காலனித்துவ ஆட்சியின் போது ஆனையிறவு உப்பளங்கள் முறையாக நிர்வகிக்கப்பட்டன. பிரித்தானியர்கள் உப்பு உற்பத்தியை வருவாய் ஈட்டும் தொழிலாக மாற்றி, இதற்கு வரி விதித்தனர் என்பதையும் குறிப்பிட்டாக வேண்டும்.

ஆனையிறவு உப்பு உயர்தரமானதாகக் கருதப்பட்டு, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தைகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. இலங்கையின் உள்நாட்டுப் போரின்போது ஆனையிறவு ஒரு முக்கிய மூலோபாய இடமாக இருந்தது. இதனால் உப்பு உற்பத்தி பெரிதும் பாதிக்கப்பட்டது. உப்பளங்கள் பராமரிப்பின்றி மூடப்பட்டன. மேலும், உற்பத்தி குறைந்தது. 2009இல் போர் முடிவடைந்த பின்னர் ஆனையிறவு உப்பளங்கள் மீண்டும் இயங்கத் தொடங்கின. அரசு மற்றும் தனியார் முதலீடுகளால் உப்பு உற்பத்தி மீளமைக்கப்பட்டது.

அப்படியான சூழ்நிலைகளையெல்லாம் தாண்டி வந்து இப்போது ஆனையிறவு உப்பு, 'ரஜ லுணு' (Raja Lunu) என்ற பெயரில் சந்தைப்படுத்தப்படுகிறது. ஆனால், பாரம்பரிய 'ஆனையிறவு உப்பு' என்ற பெயரை மீண்டும் பயன்படுத்த வேண்டுமென உள்ளூர் மக்கள் மற்றும் அரசியல் பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்தாலும் அரசு அதனைக் கண்டுகொள்ளவில்லை..

'ரஜ லுணு' என்ற பெயர் மாற்றம் சர்ச்சையை ஏற்படுத்தி இது உள்ளூர் அடையாளத்தை மாற்றுவதாகக் கருதப்பட்டது. பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் உள்ளிட்டோர், 'ஆனையிறவு உப்பு' என்ற பெயரை மீட்டெடுக்க வேண்டுமென வலியுறுத்தினர். ஆனையிறவு உப்பு உற்பத்தி, உள்ளூர் மக்களுக்கு வேலைவாய்ப்பை வழங்குகிறது மற்றும் இலங்கையின் உப்பு தேவையில் கணிசமான பங்கு வகிக்கிறது.

அதேசமயம், இப்பகுதியின் தமிழ் மக்களுக்கு ஆனையிறவு உப்பு ஒரு பாரம்பரிய அடையாளமாக உள்ளது. இதன் பெயர் மற்றும் உற்பத்தி முறை உள்ளூர் கலாசாரத்துடன் ஆழமாக இணைந்துள்ளது. வடக்கு மாகாணத்தின் பொருளாதார மற்றும் கலாசார அடையாளமாகத் தொடர்ந்து முக்கிய பங்கு வகிக்கிறது.

இப்படியான பின்னணியில் உப்பின் பெயர் மாற்றம் பற்றி அலட்டிக்கொள்ளவேண்டாமென அமைச்சர் பிமல் ரத்நாயக்க கூறுவது அவரின் அதிகாரத்திமிரையே பறைசாற்றுகிறது. பரம்பரை பரம்பரையாக, வரலாற்றில் இடம்பிடித்துள்ள ஒரு பெயரை எந்தவித அச்சமுமின்றி மாற்றிவிட்டு அதற்கு கொடுக்கும் வியாக்கியானங்கள் இந்த ஆட்சியின் எதேச்சதிகாரப் போக்கையே காட்டுகிறது. கடந்த ஆட்சியின் கீழ்தான் இந்த உப்பின் பெயர்மாற்றம் இடம்பெற்றதாக ஆளுங்கட்சி தன்னிலை விளக்கமளித்தாலும் அந்த ஆட்சியின் கொள்கைகளை இந்த அரசும் முன்னெடுக்குமாயின் அதற்கும் இதற்கும் இருக்கும் வித்தியாசம் என்ன?

இந்தத் திமிர்த்தனத்துக்கு சூடு வைக்கும் வகையிலேயே தமிழ்ப் பெயர்களை சிங்களப் பிள்ளைகளுக்கு சூட்டுங்கள் என்று அவர்களுக்கே புரியும் பாஷையில் சத்தியலிங்கம் எம்.பி. கூறியிருக்கிறார். சிங்களப் பிள்ளைகளுக்கு தமிழ் பெயரைச் சூட்டினால் எப்படி ஏற்புடையதற்றிருக்குமோ அப்படித்தான் ஆனையிறவு உப்பின் பெயர்மாற்றமும். சத்தியலிங்கம் எம்.பியின் கருத்து நகைச்சுவையானது போன்று வெளியில் தோன்றினாலும் அது ஆழ் கருத்தைக் கொண்டது. அது உச்சந்தலையில் நச்சென்று கொட்டியதாக இருக்கிறது. சபாஷ் சத்தியலிங்கம்.

## இன்றைய நாளில்...

- 1611 – உலகின் மிகப்பெரிய கத்தோலிக்கப் பல்கலைக்கழகமான சாந்தோ தோமஸ் பல்கலைக்கழகம், பிலிப்பைன்ஸில் அமைக்கப்பட்டது.
- 1876 – பிரித்தானிய இந்தியாவின் அரசியாக விக்டோரியா மகாராணி தெரிவுசெய்யப்பட்டமை லண்டன் வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டது.
- 1932 – மஞ்சள் காய்ச்சல் நோய்க்கான தடுப்பூசி முதன்முதலாக அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1978 – ஆப்கானிஸ்தான் அரசுத்தலைவர் முகமது தாவூது கான் கம்யூனிச சார்புப் போராளிகளால் பதவியிறக்கப்பட்டுக் கொல்லப்பட்டார்.
- 1995 – பலாலியில் அவ்ரோ விமானம் விடுதலைப் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டது. இதற்கு அடுத்த நாள் இன்னுமொரு விமானமும் வீழ்த்தப்பட்டது.
- 2000 – இலங்கை இராணுவத்தினருக்கெதிரான விடுதலைப் புலிகளின் ஓயாத அலைகள் மூன்று நடவடிக்கை முடிவுக்கு வந்தது.
- 2005 – ஊடகவியலாளர் தர்மரட்ணம் சிவராம் கொழும்பில் கடத்தப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்டார்.

# சிந்து நதிநீர் ஒப்பந்தத்தில் இந்தியா விலகுவது போருக்கான அறைகூவல்!

## பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் கவாஜா பேட்டி

இந்தியாவின் பஹல்காமில் தீவிரவாதத் தாக்குதல் நடைபெற்ற மறுநாளே பாகிஸ்தானுடனான 1960ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட சிந்து நதி நீர் உடன்படிக்கையை இடைநிறுத்தி வைப்பதாக இந்தியா அறிவித்துள்ளமை பல சர்ச்சைகளை ஏற்படுத்தியிருக்கிறது. இந்தியாவின் முடிவுக்கெதிராக உலக வங்கியை அணுகப்போவதாக பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் கவாஜா ஆசிப் பி.பி.சிக்கு அளித்த பேட்டியில், "சிந்து நதி நீர் ஒப்பந்தம் தொடர்பாக இப்போது இந்தியா ஏதேனும் நடவடிக்கைகளை மேற்கொண்டால், அது போருக்கான முன்னறிவிப்பாகக் கருதப்படும்" - என்று தெரிவித்தார். பாகிஸ்தானுக்கு பாத்தியப்பட்ட சிந்து நதிநீரை வழங்குவதை இந்தியாவால் தடுக்க முடியாதென்றும் அவர் கூறினார்.

26/11 மும்பை தாக்குதலுக்கு மூளையாக செயற்பட்டதாகக் கூறப்படும் ஹபீஸ் சயீத் பற்றி பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சரிடம் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அவர், அத்தகையவர்கள் இப்போது செயலற்றவர்களாகிவிட்டதாகக் கூறினார். பாகிஸ்தானிலிருக்கும் ஹபீஸ் சயீத்தை இந்தியாவிடம் ஒப்படைக்குமாறு இந்தியா கோரியுள்ளதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

**போர் பிரகடனமா, அச்சுறுத்தலா?**

சிந்து நதிநீர் உடன்படிக்கையை நிறுத்தி வைக்கும் இந்தியாவின் முடிவு குறித்து பி.பி.சி. நிருபர் ஆசாதேஹ் மோஷீரி, பாகிஸ்தான் பாதுகாப்புத்துறை அமைச்சர் கவாஜா ஆசிப்பிடம் கேட்டதற்கு, ''இந்தியா இந்த ஒப்பந்தத்திலிருந்து ஒருதலைப்பட்சமாக விலக முடியாது''- என்று அவர் பதிலளித்தார்.

மேலும், இந்த விடயம் தொடர்பாக உலக வங்கியையோ அல்லது வேறு மூன்றாம் தரப்பினரையோ மத்தியஸ்தத்துக்கு பாகிஸ்தான் அணுகுமா என்ற கேள்விக்குப் பதிலளித்த பாகிஸ்தான் பாதுகாப்புத்துறை அமைச்சர், "இந்த ஒப்பந்தம் உலக வங்கியின் மத்தியஸ்தத்தின் கீழ் கையெழுத்தானதால், இது தொடர்பான எந்தவொரு பிரச்சினையாக இருந்தாலும் அவர்களிடம் செல்வோம். 1960இல் கையெழுத்தான சிந்து நதிநீர் உடன்பாடு, நீண்ட காலமாக வெற்றிகரமாக அமுலில் இருக்கிறது. இந்த ஒப்பந்தத்தில் இருந்து இந்தியா ஒருதலைப்பட்சமாக விலக முடியாது" - என்று தெரிவித்தார்.

சிந்து நதிநீர் ஒப்பந்தத்தை நிறுத்தி வைப்பதாக இந்தியா அளித்த எச்சரிக்கை குறித்த கேள்விக்கு, ''இந்த ஒப்பந்தம் நிறுத்தி வைக்கப்பட்டால், அது போருக்கு அழைப்பு விடுவதாகக் கருதப்படும் என்று பாகிஸ்தான் பாதுகாப்புத்துறை அமைச்சர் கூறினார். ஏனென்றால், நதிநீர் ஒப்பந்தத்தில் இருந்து இந்தியா விலகினால், பாகிஸ்தானுக்கு உரிமையான நீரைப் பெறும் உரிமையை இந்தியா பறிப்பதாகவே கருதப்படும். எங்களுக்கு சிந்து நதியின் நீரில் உள்ள உரிமையை இந்தியா அங்கீகரித்துள்ளது. இது 1960 நீர் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தம் தொடர வேண்டுமென்றே நாங்கள் விரும்புகிறோம்''- என்று அவர் கூறினார்.

ஜம்மு காஷ்மீரின் பஹல்காமில் நடைபெற்ற தீவிரவாதத் தாக்குதலுக்குப் பிறகு இந்தியா மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு பதிலளிக்கும் விதமாக கடந்த வியாழனன்று, தேசிய பாதுகாப்புக் கவுன்சிலின் கூட்டத்தை பாகிஸ்தான் அரசு கூட்டியது.

அந்தக் கூட்டத்தில், சிந்து நதி நீர் ஒப்பந்தத்தை நிறுத்தி வைக்கும் இந்தியாவின் முடிவு நிராகரிக்கப்பட்டது. மேலும் இந்த ஒப்பந்தத்தின் கீழ் பாகிஸ்தான் பிராந்தியங்களில் நீர் ஓட்டத்தைத் தடுக்க அல்லது திசைதிருப்ப மேற்கொள்ளப்படும் எந்தவொரு முயற்சியும் போர்ச் செயலாகவே கருதப்படுமென்றும், அதற்கு முழு வீச்சில் பதிலடி கொடுக்கப்படுமென்றும் முடிவெடுக்கப்பட்டது.



**ஹபீஸ் சயீத் பற்றி பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சரின் கருத்து**

பாகிஸ்தானில் செயற்பட்டுவரும் தீவிரவாதக் குழுக்களைக் கண்காணித்து அவர்களைக் கட்டுப்படுத்தும் பொறுப்பு தனக்கிருப்பதை அந்நாடு உணர்ந்திருக்கிறதா என்று கவாஜா ஆசிப்பிடம் கேட்கப்பட்டது. இந்தக் கேள்விக்குப் பதிலளித்த அவர், "அவை பயனற்றதாகிவிட்டன"- என்றார். பயனற்றவை என்றால் செயலற்றவை ஆகிவிட்டன. அவை அழிந்துவிட்டன" - என்று கூறினார்.

ஹபீஸ் சயீத் போன்றவர்களைப் பற்றிய துப்புக்கொடுத்தால் சன்மானம் வழங்குவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது. அவர்களைப் பற்றியும் நீங்கள் இப்படித்தான் நினைக்கிறீர்களா? என்று பாகிஸ்தான் பாதுகாப்புத்துறை அமைச்சரிடன் கேட்கப்பட்டது. இதற்குப் பதிலளித்த அவர், "அத்தகையவர்கள் இப்போது இல்லை, அவர்களின் பெயர் மட்டுமே ஆவணங்களில் இருக்கின்றன" - என்று தெரிவித்தார்.

பாகிஸ்தானில் வசிக்கும் ஹபீஸ் சயீத், 2008 மும்பை தாக்குதல்களிலும் இந்தியாவில் நடைபெற்ற பல தீவிரவாத நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருப்பதாக இந்தியா நம்புகிறது. எனவே, அவரைத் தங்களிடம் ஒப்படைக்குமாறு பாகிஸ்தானிடம் இந்தியா கோரிக்கை விடுத்துள்ளது. ஐக்கிய நாடுகள் சபையும் அமெரிக்காவும் ஹபீஸ் சயீத்தை சர்வதேச பயங்கரவாதி பட்டியலில் சேர்த்துள்ளன. அவரின் தலைக்கு அமெரிக்கா பத்து மில்லியன் டொலர்கள் சன்மானம் அறிவித்துள்ளது. ஹபீஸ் சயீத், பாகிஸ்தானின் மிகப்பெரிய தீவிரவாதக் குழுவான லஷ்கர்-இ-தொய்பாவின் நிறுவுனராகக் கருதப்படுகிறார்.

ஹபீஸ் சயீத்துக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்காகவே அவரைத் தங்களிடம் ஒப்படைக்க வேண்டுமென இந்தியா கோருகிறது. பாகிஸ்தான் மண்ணிலிருந்து ஜம்மு காஷ்மீரில் பயங்கரவாதத் தாக்குதல்கள் நடந்த வரலாறு உள்ளதா என்று பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் கவாஜா ஆசிப்பிடம் கேட்கப்பட்டது.

இதற்குப் பதிலளித்த அவர், "பாகிஸ்தானில் இருந்து இந்தியாவுக்குள் ஊடுருவுவது சாத்தியமற்றதென நினைக்கிறேன். ஏனென்றால், இரு நாடுகளினது எல்லைக் கட்டுப்பாட்டுக்கோட்டிலும் இலட்சக்கணக்கான வீரர்கள் பாதுகாவலில் ஈடுபட்டுள்ளனர்" - என்று கூறுகிறார்.

**பாகிஸ்தான் இராணுவத்தின் முன்னேற்பாடுகள்**

பஹல்காம் தாக்குதலுக்குப் பிறகு பாகிஸ்தானுக்கெதிராக இந்தியா எடுத்த நடவடிக்கைகளுக்கு என்ன பதில் என்று கவாஜா ஆசிஃப்பிடம் கேட்டதற்கு, "கடந்த 24 மணி நேரத்தில் இந்தியா செய்ததற்கு மட்டுமே நாங்கள் பதிலடி கொடுக்கிறோம். இதை நாங்கள் அமைதியாகப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. அவர்களுக்கு அவர்களின் பாணியிலேயே பதிலளிக்க வேண்டியிருந்தது"- என்று பதிலளித்தார்.

இதுவொரு இராஜதந்திர நடவடிக்கையா என்றும், இது மோதல் சூழ்நிலையை உருவாக்காதா என்றும் கேட்டதற்கு பதிலளித்த அவர், "மோதலை உருவாக்கக்கூடாதென்று விரும்புகிறேன்... ஆனால், சூழ்நிலைகளைப் பார்த்தால் மோதல் ஏற்படக்கூடுமென்று தோன்றுகிறது. இருப்பினும், அது நடக்காது என்று நம்புகிறேன்"- என்று தெரிவித்தார்.

இந்தச் சூழ்நிலையில், பாகிஸ்தான் இராணுவத்தின் முன்னேற்பாடுகள் என்ன என்று பி.பி.சி. பத்திரிகையாளர் கேட்டார். இதற்குப் பதிலளித்த பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர், "நாங்கள் இனிமேல் தான் தயாராக இருக்க வேண்டும் என்பதில்லை, ஏற்கனவே ஏற்பாடுகளைச் செய்துவிட்டோம். எந்தச் சூழ்நிலைக்கும் நாங்கள் தயாராக இருக்கிறோம்" - என்றார்.

ஜம்மு காஷ்மீரில் செயற்படும் தீவிரவாதக் குழுக்களுக்கு பாகிஸ்தான் ஆயுதங்களையும் பணத்தையும் வழங்குவதாக இந்தியா குற்றஞ்சாட்டி வருவது தொடர்பாகவும் பாகிஸ்தான் பாதுகாப்புத்துறை அமைச்சரிடம் கேட்கப்பட்டது. இதற்குப் பதிலளித்த அவர், "ஜம்மு காஷ்மீரில் நடப்பதற்கும் எங்களுக்கும் எந்தவித சம்பந்தமும் கிடையாது" - என்று கூறினார்.

பஹல்காம் தாக்குதலில் பாகிஸ்தானியர்கள் இருவருக்கு தொடர்பிருப்பதாக இந்திய காவல்துறை ஓர் அறிவிப்பை வெளியிட்டுள்ளது தொடர்பாக பாகிஸ்தானுக்குத் தெரியுமா என்ற கேள்வியும் கவாஜா ஆசிப்பிடம் முன்வைக்கப்பட்டது.

"இது குறித்து எங்களுக்கு எந்தத் தகவலும் இல்லை" - என்று கூறிய அவர், கடந்த 48 மணி நேரத்தில் இந்திய ஊடகங்களில் இது குறித்து எதுவும் வெளிவந்ததாகத் தெரியவில்லை. ஆனால், அவர்கள் ஏதேனும் கதை புனைந்திருந்தால் அதைப்பற்றி தமக்கு எதுவும் தெரியாதென்றும் தெரிவித்தார்.

பஹல்காம் தாக்குதலுக்குப் பிறகு பாகிஸ்தானுக் கெதிரான இந்தியாவின் நடவடிக்கைக்கு பதிலளிக் கும் விதமாக பாகிஸ்தானும் பல நடவடிக்கைகளை எடுப்பதாக அறிவித்தது. இந்தியாவுடனான இருதரப்பு ஒப்பந்தங்களை நிறுத்தி வைப்பது, இந்தியாவுக்கு பாகிஸ்தானின் வான்வெளி மற்றும் எல்லைகளை மூடுவது மற்றும் வர்த்தகத்தை நிறுத்தி வைப்பதாக வியாழக்கிழமையன்று இஸ்லாமாபாத்தில் பிரதமர் ஷாபாஸ் ஷெரீப் தலைமையில் நடைபெற்ற தேசிய பாதுகாப்புக் கவுன்சில் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது.

இந்தியாவைப் போலவே, பாகிஸ்தானும் இந்திய பாதுகாப்பு ஆலோசகர்கள் மற்றும் அவர்களின் உதவியாளர்களை பாகிஸ்தானை விட்டு வெளியேறுமாறு அறிவுறுத்தியுள்ளது. மேலும், தூதரக அதிகாரிகளின் எண்ணிக்கையையும் குறைத்துள்ளது. கூட்டத்துக்குப் பிறகு வெளியிடப்பட்ட அறிக்கையில் சிந்து நதி நீர் ஒப்பந்தத்தை நிறுத்தி வைக்கும் இந்தியாவின் முடிவை நிராகரித்த பாகிஸ்தான், இந்த ஒப்பந்தத்தின் கீழ் பாகிஸ்தானின் பகுதிக்கான தண்ணீர் ஓட்டத்தைத் தடுக்கவோ அல்லது திசை திருப்பவோ மேற்கொள்ளப்படும் எந்தவொரு முயற்சியும் போர்ச் செயலாகவே கருதப்படும் என்றும் தெரிவித்துள்ளது.

**இந்தியாவின் கடும் நடவடிக்கைகள்**

முன்னதாக, ஜம்மு காஷ்மீரின் பஹல்காமில் நடந்த பயங்கரவாதத் தாக்குதலில் 26 பேர் கொல்லப்பட்டதையடுத்து, பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் புதுடில்லியில் பாதுகாப்புக்கான அமைச்சரவைக் குழுவின் (CCS) கூட்டத்தை இந்தியா நடத்தியது. பாகிஸ்தானுடனான சிந்து நதி நீர் ஒப்பந்தத்தை இடைநிறுத்துவது, அட்டாரி-வாகா எல்லையை மூடுவதெனக் கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது.

மேலும், சார்க் விசா விலக்கு திட்டத்தின் (SVES) கீழ் வழங்கப்பட்ட விசாக்களில் பாகிஸ்தான் குடிமக்கள் இனி இந்தியாவுக்கு பயணிக்க முடியாதென்று இந்திய வெளியுறவு செயலாளர் விக்ரம் மிஸ்ரி தெரிவித்தார்.

இஸ்லாமாபாத்தில் உள்ள இந்திய தூதரகத்தில் பணியாற்றும் பாதுகாப்பு/ இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படை ஆலோசகர்களை திரும்பப் பெறவும் இந்தியா முடிவு செய்தது. இரு நாட்டு தூதரகங்களிலும் இந்தப் பதவிகள் இரத்துச்செய்யப்பட்டதுடன், இராணுவ ஆலோசகர்களின் ஐந்து துணை ஊழியர்களையும் திரும்பப் பெற முடிவுசெய்யப்பட்டது.

*- இது பி.பி.சிக்காக கலெக்டிவ் நியூஸ்ரூம் வெளியீடு*

# தராக்கி சிவராமின் 20ஆவது நினைவுதினம் இன்று

தர்மரட்ணம் சிவராம் அல்லது தராக்கி சிவராம் (11.08.1959 – 28.04.2005) இலங்கையின் பிரபலமான ஊடகவியலாளரும் தமிழ்நாட்டின் பிரதான எழுத்தாளரும் முன்னாள் போராளியுமாவார். பம்பலப்பிட்டியில் பொலிஸ் நிலையம் முன்பாக வெள்ளை நிற வேன் ஒன்றில் வந்த ஆயுததாரிகளால் கடத்தப்பட்ட இவர் தாக்கப்பட்ட பின்னர் வாகனமொன்றில் கொண்டுசெல்லப்பட்டு இலங்கை பாராளுமன்றத்துக்கு அருகில் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். தலையை இலக்கு வைத்தே 09 மில்லிமீற்றர் வகை கைத்துப்பாக்கியால் இவர் சுடப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.



சிவராம் கிழக்கிலங்கையின் மட்டக்களப்பில் புவிராஜகீர்த்தி தர்மரட்ணம் - மகேஸ்வரி ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார். சிவராமின் தந்தையார் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் பயின்றவர். அவரின் பாட்டனார் சபாபதிப்பிள்ளை தர்மரட்ணம் (வன்னியனார்) 1938ஆம் ஆண்டில் மட்டக்களப்பின் இரண்டாவதாக தெரிவுசெய்யப்பட்ட இலங்கை சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர்.

1989ஆம் ஆண்டு மட்டக்களப்பில் யோகரஞ்சனி என்பவரை வாழ்க்கைத் துணையாக ஆக்கிக்கொண்ட சிவராமுக்கு வைஸ்ணவி, வைதேகி என்ற இரு மகள்களும் சேரலாதன் என்ற மகனும் உள்ளனர்.


ஆரம்பக்கல்வியை புனித மிக்கேல் கல்லூரியில் கற்றார். அதைத் தொடர்ந்து கொழும்பில் அக்குவானாஸ் கல்லூரியில் தொடர்ந்தார். பல்கலைக்கழகத்துக்குத் தெரிவான இவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் அனுமதிபெற்றார். செப்டெம்பர் 1981இல் பேராதனைப் பல்கலைக்கழகத்துக்குச் சென்ற அவர், ஆங்கிலத்தையும் ஒரு பாடமாகக் கொண்டு இரண்டு ஆண்டுகள் மட்டுமே அங்கு பயின்ற பின்னர், அரசியல் ஈடுபாட்டினாலும், 1983 இல் இடம்பெற்ற இனக்கலவரங்களினாலும் பல்கலைக்கழகக் கல்வியைக் கைவிட்டார்.

சிவராம் தராக்கி என்ற புனைப்பெயரில் ஆங்கிலத்தில் கொழும்பிலிருந்து வெளிவரும் 'The Island' ஏட்டில் தமது முதலாவது கட்டுரையை 1989இல் எழுதினார். அரசியல், போரியல் மற்றும் பாதுகாப்பு நிலைவரம் தொடர்பாக அவரது கட்டுரைகள் அமைந்திருந்தன. உள்நாட்டிலும் அனைத்துலக மட்டத்திலும் அவரது கட்டுரைகள் பெயர்பெற்றிருந்தன.

ஊடகத்துறை வரலாற்றில் மிகவும் சவால் நிறைந்த காலகட்டத்தில் துப்பாக்கி முனைகளின் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் தனது கருத்துகளினூடாக உண்மைகளை உரக்கச்சொன்ன மிகவும் துணிச்சல் மிக்க ஊடகப் போராளியாகத் திகழ்ந்தவர் ஊடகவியலாளர் தர்மரட்ணம் சிவராம் ஆவார்.

## நக்கல் நமசிவாயம்

*இந்தியாவை மிரட்டுது பாகிஸ்தான்.. பாகிஸ்தானை மிரட்டுது இந்தியா... அவ்வளவுதான்.. போரெல்லாம் வரப்போறதில்ல... இந்தியாவில அடுத்தடுத்து நடக்கும் தேர்தல்களுக்குப் பின்னர் எல்லாம் ஓகே ஆகிடும்...*



# அலரி மாளிகைக்கு முன்பாக மூடப்பட்டிருந்த வீதியை திறந்த நாம் கிளிநொச்சி பாதைகளை ஏன் மூடவேண்டும்?

## ஜனாதிபதி அநுர கேள்வி




(பு.கஜிந்தன்)

''அலரி மாளிகைக்கு முன்பாக மூடப்பட்டிருந்த பாதையை திறந்திருக்கின்றோம். ஜனாதிபதி மாளிகைக்கு முன்பாக மூடப்பட்டிருந்த பாதையைத் திறந்திருக்கின்றோம். எதற்காக நாம் கிளிநொச்சிப் பாதைகளை மூடி வைத்திருக்க வேண்டும்?''- என ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க கேள்வியெழுப்பினார்.

கிளிநொச்சிக்கு நேற்று முன்தினம் (26) பிற்பகல் விஜயம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க கிளிநொச்சியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு மக்கள் மத்தியில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து உரையாற்றுகையில்,

''அனைத்து மக்களும் சமனான உரிமைகளைப் பெற்றுக்கொள்ளும் வகையில் இந்த அரசாங்கம் அமைந்துள்ளது. இந்தப் பகுதிகளில் 30 வருடமாக யுத்தம் இடம்பெற்றது. இலட்சக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்தார்கள். பல கிராமங்கள் இழக்கப்பட்டன. பலர் குழந்தைகளை இழந்தார்கள். தங்களுடைய உறவுகளை இழந்தார்கள். வீடுகளை - சொத்துகளை இழந்தார்கள்.

நாங்கள் எல்லோரும் சேர்ந்து ஊழலற்ற ஓர் அரசாங்கத்தை அமைத்திருக்கின்றோம். கடந்த காலங்களிலே பாதுகாப்புக் காரணங்களுக்காக பொதுமக்களின் காணிகளை இராணுவ முகாம்களுக்காக எடுத்திருக்கின்றார்கள். நாங்கள் இப்போது அந்தக் காணிகள் தொடர்பில் இராணுவத் தலைவர்களிடம் பேச்சுவார்த்தைகளை நடத்தியிருக்கின்றோம். விடுவிக்கக்கூடிய அனைத்து இடங்களையும் மீண்டும் மக்களுக்காக வழங்குவதற்கு நாம் நடவடிக்கை எடுப்போம்.

அது மட்டுமல்ல, பாரம்பரியமாக பயிர்செய்து வந்த நிலங்கள் கூகுள் வரைபடத்தின்படி வனவளத் திணைக்களத்தால் எல்லையிடப்பட்டிருக்கின்றன. இந்தப் பகுதி மக்கள் விவசாயம் செய்த நிலங்கள் மக்களுடைய நிலங்கள். அவற்றை மீண்டும் அவர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்போம்.

ஆகவே, இன்னும் சில பாதைகள் மூடப்பட்டிருக்கின்றன. கொழும்பிலே மூடியிருந்த பாதைகளை திறந்திருக்கின்றோம். குறிப்பாக, அலரி மாளிகைக்கு முன்பாக இருந்த பாதையைத் திறந்திருக்கின்றோம். ஜனாதிபதி மாளிகைக்கு முன்பாக மூடப்பட்டிருந்த பாதையை திறந்திருக்கின்றோம். எதற்காக நாம் கிளிநொச்சிப் பாதைகளை மூடி வைத்திருக்க வேண்டும்? அனைத்து பாதைகளையும் இந்த மக்கள் பயன்படுத்தக்கூடிய வகையிலே நாங்கள் திறந்து விடுவோம்.

ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் மூடிய பாதைகளைத் திறந்துவிட்டிருக்கின்றோம். நாட்டை சாதாரண நிலைக்கு கொண்டுவர வேண்டும். வீடுகளை இழந்த மக்களுக்கு வீடுகளைக் கட்டி கொடுக்கவிருக்கின்றோம். ஏற்கனவே வழங்கப்பட்ட புதிய திட்டங்களுக்கு நிதிகளை விடுவிக்கவிருக்கின்றோம்''- என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# தேசிய மக்கள் சக்தியின் வன்னி எம்.பி. மீதான ஊழல் குற்றச்சாட்டுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பாரா ஜனாதிபதி?

## வினவுகிறார் சாணக்கியன் எம்.பி.



(சி.திவியா)

வன்னி மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தியின் ஒரு பாராளுமன்ற உறுப்பினருக்கெதிராக ஊழல் குற்றச்சாட்டுகள் இருக்கின்றன. இவை தொடர்பாக ஜனாதிபதி பொறுப்புக்கூறுவாரா என்று பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கேள்வி எழுப்பியுள்ளார்.

வவுனியா புளியங்குளத்தில் இடம்பெற்ற தமிழரசுக் கட்சியின் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் ஓரணியாக நின்றால் மாத்திரமே எமக்கு நிரந்தரமான ஓர் அரசியல் தீர்வு இந்த நாட்டிலே கிடைக்கும் என்ற நம்பிக்கையில் வாழமுடியும். இல்லையென்றால் பலமிழந்த ஒரு சமூகமாகவே நாங்கள் தொடர்ந்தும் இருப்போம். தமிழரின் இருப்பைத் தக்கவைத்துக்கொள்வதற்காக தமிழரசுக்கட்சி மாத்திரே இன்று நேர்மையாக செயற்பட்டு வருகின்றது. அதற்கு பல உதாரணங்களைக் கூறலாம்.

எங்கள் பிரச்சினைகள் பற்றி சர்வதேச சமூகத்திடம் நாங்கள் மாத்திரமே குரல் கொடுக்கிறோம். அண்மையில் வருகைதந்த பாரதப் பிரதமரை நாம் சந்தித்தோம். அவரைச் சந்திப்பதற்கு எமது கட்சியைச் சேர்ந்தவர்களும் ஏனைய தமிழ்த் தேசியப் பிரதிநிதிகளையும் மக்கள் பாராளுமன்றம் அனுப்பாவிட்டால் அவரைச் சந்திக்கும் அரசின் குழுவில் சிங்களவர்கள் மாத்திரமே அங்கம் வகித்தார்கள். அவர்கள் அந்த ரௌடி அமைச்சரையாவது கொண்டுபோயிருக்கலாம்.

அண்மையில் மூல்லைத்தீவில் மீனவ சங்கத்தலைவர் மீது ரௌடி அமைச்சரின் கும்பல் பலமான தாக்குதலை நடத்தியிருக்கின்றது. அவரது அடாவடித்தனத்தைக் காட்டியும் வன்னி மண்ணில் அடிவாங்காமல் போயுள்ளார் என்றார் அமைச்சர் என்ற பதவிக்கு அந்த மக்கள் மரியாதை கொடுத்துள்ளனர்.

இந்த ரௌடி அமைச்சரின் தலைவரான ஜனாதிபதி நேற்று மாங்குளம் சென்றிருந்தார். அங்கு ஒரு தொழிற்பேட்டை வலயமொன்றை அமைப்பதாகச் சொல்லியிருக்கிறார். ஆனால், பாராளுமன்றில் வரவு - செலவுத் திட்ட விவாதத்தில் மாங்குளம் என்ற வார்த்தையே வரவில்லை.எனவே, தேர்தலுக்காகச் சொல்லும் பொய் வார்த்தைகளே இவை.

சிங்கள மக்களும் ஜனாதிபதி சொல்வது போல ஒருதாய் பிள்ளைகளாக வாழலாம் என்ற மனநிலையில் இருப்பதாக நான் நம்பவில்லை. இனவாதிகளான கோட்டாபய அரசாங்கம் தங்களுடைய இனவாதப் பணியை சரியாகச் செய்யத் தவறியமையாலே இன்று இந்த இனவாதிகளுக்கு அந்த மக்கள் வாக்களித்துள்ளனர்.

கோட்டாவை விட மோசமான இனவாதிகள் இவர்கள். சிங்களப் பேரினவாத நாடாகத் தொடர்ந்து இலங்கையை வைத்திருப்பதே அவர்களது எண்ணம். அதற்குத் தடையாக இருப்பவர்கள் இலங்கை தமிழரசுக் கட்சியைச் சேர்ந்தவர்களே.

இதனை மக்கள் மனதிலே வைத்திருக்க வேண்டும். எதிர்வரும் தேர்தலில் அதனை வெளிப்படுத்த வேண்டும். மக்களின் ஆதரவு எமது கைகளுக்கு வந்தால் மாத்திரமே நாங்கள் செய்யும் போராட்டம் வலுவானதாக இருக்கும்.

ஊழல்வாதிகள் இல்லாத அரசு என்றார்கள். வன்னி மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தியின் ஒரு பாராளுமன்ற உறுப்பினருக்கெதிராக ஊழல் குற்றச்சாட்டு இருக்கிறது. அவர்கள் அரச ஊழியர்களாக இருந்தபோது பெண்களுக்கான வாழ்வாதாரத் திட்டத்துக்காக வந்த நிதியை மோசடி செய்ததாகக் குற்றச்சாட்டுகள் இருக்கின்றன.

இதுபோல பல விடயங்களை நான் பாராளுமன்றிலே தெரிவித்துள்ளேன். ரௌடியாக செயற்படும் அமைச்சர்கள் உள்ளனர். எனவே, ஜனாதிபதி இதற்கெல்லாம் பொறுப்புக்கூறாவிட்டால் இந்தத் தேர்தலில் இந்த அரசு தோல்வியடைவதை எவராலும் மாற்ற முடியாது''- என்றார்.

# நிவாரணப் பணிகளுக்கு மியன்மாருக்குச் சென்ற முப்படையினரின் குழு நாடு திரும்பியது



(ஜோசப் நயன்)

மியன்மாருக்கு நிவாரணப் பணிகளுக்குச் சென்ற முப்படைகளின் மனிதாபிமான நிவாரணக் குழு நாடு திரும்பியது.

மியன்மார் நிலநடுக்கத்தின் பின்னரான நிவாரணப் பணிக்காகச் சென்ற முப்படைகளின் மனிதாபிமான உதவி மற்றும் நிவாரணக் குழு, பணிகளை வெற்றிகரமாக முடித்த பின்னர் நேற்று முன்தினம் (26) பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தினூடாக (BIA) நாடு திரும்பியது.

பிரிகேடியர் புண்ய கருணாதிலக்க தலைமையில் மியன்மாருக்குச் சென்று திரும்பிய குழுவினரை இலங்கை இராணுவத் தலைமையகத்தின் ஆராய்ச்சி கருத்து மற்றும் கோட்பாட்டுப் பணிமனையின் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் நசீர் மஜீத் தலைமையில் வரவேற்பளிக்கப்பட்டது. பாதுகாப்பு அமைச்சு, அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் முப்படைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி அவற்றின் சிரேஷ்ட அதிகாரிகளும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இந்த மாதத் தொடக்கத்தில் மியன்மாரை உலுக்கிய நிலநடுக்கத்தின் பின் இந்த முப்படை நிவாரணக் குழு, ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் அறிவுறுத்தலின் பேரில் ஏப்ரல் 5 ஆம் திகதி மியன்மாருக்கு அனுப்பப்பட்டது.

பாதுகாப்புச் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பத் தூயகொந்தா வின் (ஓய்வு) மேற்பார்வையின் கீழ் மற்றும் வெளியுறவு அமைச்சின் ஒருங்கிணைப்புடன் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மியன்மாரின் யங்கோன் நகரிலிருந்து சுமார் 450 கிலோமீற்றர் தொலைவிலுள்ள Nay Pyi Taw மாகாணத்தில் குறிப்பாக, நிலநடுக்கத்தால் பெரிதும் பாதிக்கப்பட்ட பகுதியான Pobba Thiri நகரில் இலங்கையின் நிவாரணக் குழு நிவாரணப் பணிகளில் ஈடுபட்டது.

அந்நாட்டு அதிகாரிகளுடன் இணைந்து பணியாற்றிய இந்தக் குழு, இடம்பெயர்ந்த மக்களின் அவசர சுகாதாரத் தேவைகளை நிறைவுசெய்ய சூழ்நிலை மதிப்பீட்டை மேற்கொண்டு அதனைத் தொடர்ந்து நடமாடும் மருத்துவமனைகளை நிறுவி பாதிக்கப்பட்ட மக்களுக்கு சேவைகளை வழங்கத் தொடங்கியது. இந்த மருத்துவப் பணிகளின்போது காயங்களுக்கு சிகிச்சையளித்தல், நோய் பரவலைத் தடுத்தல் மற்றும் வர்த்தக அமைச்சக வளாகம், Lat Lok Toun Pagoda மற்றும் Mashikhana Monastery போன்ற தற்காலிக முகாம்களில் தங்கவைக்கப்பட்டிருந்த பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட பாதிக்கப்பட்டவர்களின் தேவைகளை நிவர்த்தி செய்வதில் கவனஞ்செலுத்தப்பட்டது.

பாதிக்கப்பட்ட சமூகத்தினருக்கு வழங்கப்பட்ட மருத்துவ சேவை, உளவியல் ஆதரவு மற்றும் சுகாதாரக் கல்வி போன்றவை இலங்கை குழுவினரின் மனிதாபிமான சேவைக்கான அர்ப்பணிப்பைப் பிரதிபலிப்பதாக அமைந்தமை குறிப்பிடத்தக்கது.

தம் நாட்டுக்கு மிகவும் அவசியமான வேளையில் வழங்கப்பட்ட உதவிக்கு மியன்மார் அதிகாரிகள் இலங்கையைப் பாராட்டியதுடன் இரு நாடுகளுக்குமிடையிலான நீடித்த மற்றும் பரஸ்பர நட்பின் அடையாளமாக இதைக் கருதுவதாகத் தெரிவித்துள்ளனர்.

இன்று நாடு திரும்பிய இலங்கைக் குழுவினர் ஒரு நாட்டின் பாராட்டையும் பிராந்தியத்தின் நன்மதிப்பையும் பெற்று வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன், சர்வதேச மனிதாபிமான நடவடிக்கைகள் மற்றும் அனர்த்த நிவாரண நடவடிக்கைகளின்போது இலங்கையின் வளர்ந்து வரும் பங்கு மற்றும் திறனை எடுத்துக்காட்டுவதாகவும் இந்நடவடிக்கை அமைந்ததென்பது குறிப்பிடத்தக்கது.

# மூவாயிரத்தை தாண்டிய தேர்தல் விதிமீறல்கள்

## இதுவரை 3053 முறைப்பாடுகள் பதிவு



தேர்தல் ஆணைக்குழு
Election Commission
ஊடக அறிவித்தல்
MEDIA RELEASE

ஊடக அறிவித்தல் இலக்கம் : LAE/2025/74 — 2025.04.27

உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் - 2025.05.06
தேர்தல் முறைப்பாட்டு சாரம்சக் குறிப்பு

கடந்த 24 மணி நேரத்திற்குள் (2025.04.26 பி.ப. 04.30 வரை) தேர்தல் முறைப்பாட்டு சாரம்சக் குறிப்பு

| முறைப்பாடு கிடைத்தல் | வன்முறைச் சம்பவங்கள் | சட்டத்தினை மீறுதல் | வேறு | முறைப்பாடுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையம் | 00 | 18 | 00 | 18 |
| மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையம் | 03 | 181 | 08 | 192 |
| **நாளாந்த மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை** | **03** | **199** | **08** | **210** |

2025.03.20 ஆம் திகதி தொடக்கம் 2025.04.26 ஆம் திகதி வரை அறிக்கையிடப்பட்ட மொத்த முறைப்பாடுகளின் சாரம்சக் குறிப்பு

| முறைப்பாடு கிடைத்தல் | வன்முறைச் சம்பவங்கள் | சட்டத்தினை மீறுதல் | வேறு | முறைப்பாடுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையம் | 01 | 254 | 37 | 292 |
| மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையம் | 17 | 2577 | 167 | 2761 |
| **மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை** | **18** | **2831** | **204** | **3053** |

2025.03.20 ஆம் திகதி தொடக்கம் 2025.04.26 ஆம் திகதி வரை நிலை

| விபரம் | முறைப்பாடு கிடைத்தல் | முறைப்பாடுகளை தீர்த்தல் | நடவடிக்கை எடுக்கப்பட்டுவரும் முறைப்பாடுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையம் | 292 | 200 | 92 |
| மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையம் | 2761 | 2291 | 470 |
| **மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை** | **3053** | **2491** | **562** |

சமன் ஸ்ரீ ரத்நாயக்க
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்

(பு.கஜிந்தன்)

உள்ளூராட்சித் தேர்தலுடன் தொடர்புடைய முறைப்பாடுகளின் எண்ணிக்கையை தேர்தல் ஆணைக்குழு வெளியிட்டுள்ளது.

அதனடிப்படையில் இதுவரை 3,053 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதுடன், 18 வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் 210 முறைப்பாடுகள் பதிவாகியுள்ள நிலையில், தேர்தல் குறித்த வன்முறைச் சம்பவங்கள் 03 பதிவாகியுள்ளதெனவும் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தல் சட்டத்தை மீறியமை தொடர்பான முறைப்பாடுகளே இதுவரை அதிகமாகக் கிடைக்கப்பெற்றுள்ளன. அது 2,831ஆகப் பதிவாகியுள்ளது.

அதனடிப்படையில் இதுவரையான முறைப்பாடுகளில் 2,491 முறைப்பாடுகளுக்கான தீர்வுகள் கண்டறியப்பட்ட நிலையில், 562 முறைப்பாடுகள் குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

# தேர்தல் அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்த பதாகைகள் பொலிஸாரால் அகற்றம்!

## பக்கச்சார்பாக செயற்படுவதாக வேட்பாளர் குற்றச்சாட்டு!

வவுனியாவில் ஜனநாயக தேசியக் கூட்டணி யின் மாநகர வட்டாரத் தேர்தல் அலுவலகத் தில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த பதாகைகள் நெளுக்குளம் பொலிஸாரால் அகற்றப்பட் டுள்ளதாக வேட்பாளர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

குறித்த தேர்தல் அலுவலகம் உரிய அனுமதிகளைப் பெற்றே அமைக்கப்பட்டிருந்த நிலையில் அதனைப் பொருட்படுத்தாமல் பொலிஸார் இவ்வாறு செய்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஜனநாயக தேசியக் கூட்டணியின் பட்டாணிச்சி புளியங்குளம் வட்டாரத்துக்கான வேட்பாளரான எட்வேட் அன்று என்பவரது அலுவலகப் பதாகைகளே இவ்வாறு அகற்றப்பட்டுள்ளன. இதே வேளை குறித்த சம்பவம் தொடர்பாக வவுனியா தேர்தல் அலுவலகத்திலும் முறைப் பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

# யாழ்ப்பாணம் மாநகர சபை சுகாதார ஊழியர்கள் இன்று பணிப்பகிஷ்கரிப்பு

(பு.கஜிந்தன்)

யாழ்ப்பாணம் மாநகர சபை வைத்திய அதிகாரிகள், யாழ்ப்பாணம் மாநகர சபை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம், யாழ். மாநகர சபை சுகாதார மாதுகள் சங்கம் ஆகியன இணைந்து மாநகர சபை ஆணையாளர் மற்றும் கணக்காளரின் செயற்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து பணிப்பகிஷ்கரிப்பு அறிவிப்பை வெளியிட்டுள்ளன.

இதனால் யாழ்ப்பாணம் மாநகர சபைச் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் பொதுச் சுகாதார சேவைகள், கர்ப்பிணித் தாய்மார்களுக்கான சிகிச்சை நிலையங்கள் இன்று (28) திங்கட்கிழமை முதல் முடங்கும் அபாயம் காணப்படுகின்றது.

யாழ்ப்பாணம் மாநகர சபைச் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் குடும்பநல உத்தியோகத்தர்களின் மேலதிக நேரக் கொடுப்பனவுக்கு எங்கேயும் நடைமுறைப்படுத்தப்படாத எந்தவொரு நிதிச் சுற்றறிக்கை மூலமும் பிரசுரிக்கப்படாத நடைமுறையை மாநகர சபைக் கணக்காளர் பகுதி எதேச்சையாக மேற்கொள்ள முயல்வதால் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் குடும்பநல உத்தியோகத்தர்கள் திங்கட்கிழமை (28) முதல் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளார்கள்.

வினைத்திறனற்ற கணக்காளர் (ii) இனால் பாதிக்கப்பட்டு மனவுளைச்சலுக்குள்ளான ஊழியர்கள் இந்தப் பகிஷ்கரிப்பு நடவடிக்கையை மேற்கொள்ள வுள்ளனர் என அவர்கள் தெரிவித்தனர்.

இதனால் பொதுமக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கான பொறுப்பை மாநகர சபை ஆணையாளரும் கணக்காளர் பகுதியினரும் பொறுப்பேற்க வேண்டுமென அவர்கள் தெரிவிக்கின்றனர்.

# சட்டத்தின் ஆட்சியை பாதுகாப்பது ஜனாதிபதியின் பொறுப்பு; ஆனால் வீண் பேச்சுகளையும் பொய்களையுமே கூறி வருகிறார்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச



தேர்தல் நெருங்கும் நேரத்தில் கிராமத்தின், நகரத்தின் அதிகாரம் குறித்து மக்கள் தெளிவான முடிவை எடுக்க வேண்டும். இந்த முடிவை எடுப்பதில் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல்களின் போது நாட்டுக்கு வழங்கிய தேர்தல் விஞ்ஞாபனங்கள் மற்றும் வாக்குறுதிகளுக்கு என்ன நடந்ததென்பதை ஆராய்ந்து பார்ப்பது மிகவும் முக்கியமானதாகும். தற்போது, சமூகம் கொலைகாரர்களின் பிடியில் சிக்கியுள்ளது. மிருகத்தனம், ஒழுங்கமைக்கப்பட்ட குற்றம் என்பன சமூகத்தை ஆட்கொண்டுள்ளன. எந்நேரத்தில் எங்கு என்ன நடக்கும் எனத் தெரியாதுள்ளது. வீடுகளிலும் வீதிகளிலும் பணியிடங்களிலும் நீதிமன்றத்தில் நீதிபதிகள் முன்னிலையிலும் துப்பாக்கிச் சூடுகள் நடக்கின்றன. பிள்ளைகள், பெற்றோர்கள், பெண்கள் முன்னிலையிலும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. சரமாரியாகத் துப்பாக்கிச் சூடுகளை நடத்தும் பாதாள உலகக் கும்பல்களின் பிடியில் நாடு சிக்கித் தவிக்கின்றதென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

ஹோமாகம பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சட்டத்தின் ஆட்சி பறிபோய்விட்டது. அரசிடம் சட்டம், ஒழுங்கைப் பேணுவதற்கான தேசிய திட்டமொன்று இல்லை. நடக்கும் கொலைகளால் தேசிய பாதுகாப்புக்கு ஆபத்தில்லையென அரசாங்கம் கூறுகிறது. தேசிய பாதுகாப்பு குறித்து டியூஷன் எடுப்பேன் எனக் கூறிய பாதுகாப்பு பிரதி அமைச்சருக்கு கூட தேசிய பாதுகாப்பு குறித்து டியூஷன் எடுக்கவேண்டிய நிலை இன்று ஏற்பட்டுள்ளது.

நாட்டின் பிரஜைகளின் வாழ்வுரிமையை உறுதிப்படுத்துவதும் சட்டத்தை அமுல்படுத்துவதும் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதும் அரச தலைவரின் பொறுப்பாகும். இது ஜனாதிபதியின் பொறுப்பாகும். ஆனால், இந்த ஜனாதிபதியின் கீழ் சட்டத்தின் ஆட்சி சீர்குலைந்துபோயுள்ளது.

பொலிஸ் மற்றும் பாதுகாப்புப் படையினருக்கு மேலதிகமாக கிராம மட்டத்தில் சிவில் பாதுகாப்புக் குழுக்களையும் சமூகப் பாதுகாப்புக் குழுக்களையும் நிறுவி மக்களின் பங்களிப்புடன் சகல பிரதேசங்களையும் பாதுகாக்க முடியுமென எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார். உள்ளூராட்சி நிறுவனங்களினூடாக மக்களை மையமாகக் கொண்டு பொலிஸ் மற்றும் பாதுகாப்புப் படையினருடன் இணைந்து செயற்படுவதன் மூலம் சட்டம், ஒழுங்கைப் பேண முடியும். இதனூடாக பாதாள உலகக் கும்பல்களை மக்கள் பங்கேற்புடன் கட்டுப்படுத்த முடியும். பாதாளக் குழுக்கள், கப்பம் கோரும் குழுக்கள் மற்றும் கொலைகாரர்களை இல்லாதொழிப்பதற்கு புதிய வழிமுறைகளைப் பயன்படுத்த வேண்டும். சமூகத்தில் இக்குற்றங்களைத் தடுப்பதற்கு முறையான வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்க வேண்டும். வழமையான வழிமுறைகளை மாத்திரம் வைத்துக்கொண்டு இவற்றுக்குத் தீர்வுகாண முடியாது. எனவே, புதிய வழிமுறைகளூடாக மக்கள் பங்கேற்புடன் இதனைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டும். புதிய பாதுகாப்பு ஒழுங்குகள் குறித்துச் சிந்திக்க வேண்டும்.

மேலும் திசைகாட்டி அரசு தலைமையிலான ஜனாதிபதி எழுதிய கடிதத்தால் டொனால்ட் ட்ரம்ப் விதித்த தீர்வை வரி 90 நாட்களுக்கு நிறுத்தப்பட்டதாகப் பிரதியமைச்சரொருவர் பிரஸ்தாபித்தார். பின்னர் வேறு ஒரு தூதுக் குழு அமெரிக்காவுக்கு பயணமாகி கலந்துரையாடல்கள் எமக்கு சாதகமாக இறுதி செய்யப்பட்டுள்ளன எனத் தெரிவித்தனர். இந்த வரியைத் திருத்துவது தொடர்பான பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளதால் இந்த விடயம் தொடர்பாக இரு தரப்பினரும் கூட்டு அறிக்கையை வெளியிடத் திட்டமிட்டுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்த போதிலும், அவ்வாறான அறிக்கை எதுவும் இன்றுவரை வெளியிடப்படவில்லை. பட்டப்பகலில் இவ்வாறான பொய்களைச் சொல்லி மக்களை ஏமாற்றி வருகின்றனர் என எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார்.

# அரசாங்கத்தின் இயலாமை காரணமாகவே தற்போது கண்டி நகரம் குப்பைக் குவியலாக மாறியுள்ளது

## முன்னாள் எம்.பி. லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவிப்பு

**(எம்.ஏ.அமீனுல்லா)**

அரசாங்கத்தின் இயலாமை காரணமாகவே தற்போது கண்டி நகரமே ஒரே குப்பைக் குவியலாக மாறியுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஆங்காங்கே குவிந்துள்ள மலம், சிறுநீர் உள்ளிட்ட குப்பைகளால், பல்வேறு நோய்கள் பரவி, கண்டி நகரம் வேறு விதமாக மாறும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கண்டி ஸ்ரீ தலதா மாளிகை யாத்திரைக்கு பக்தர்கள் செல்லும் அதீத எண்ணிக்கை குறித்து அவர்களுக்கு முறையான சுகாதார வசதிகள் போதாதது குறித்து நேற்று (27) ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்கையில் லக்ஷ்மன் கிரியெல்ல மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அரசாங்கம் தலதா மாளிகை யாத்திரைக்கு முன் ஏற்பாடுகளின்றி தயாராவதால் தான் இந்தப் பிரச்சினைகள் எல்லாம் எழுந்தன.

முன்னாள் ஜனாதிபதிகளான ரணசிங்க பிரேமதாச மற்றும் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் தலதா கண்காட்சி நிகழ்வை முன்னிட்டு, மூன்று மாதங்களுக்கு முன்னரே தயார் செய்ததாகவும் தலதா மாளிகை யாத்திரைக்கு தேவையான ஏற்பாடுகளை தயாரிப்பதற்காக அன்றைய காலத்தில் சுமார் பதினைந்து கூட்டங்கள் நடைபெற்றதாகவும் அதில் ஜனாதிபதிகள், ஆளுங்கட்சி உறுப்பினர்கள் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தனிப்பட்ட ரீதியில் பங்கு பற்றியதாகவும் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

தலதா மாளிகை யாத்திரைக்காக பத்து அமைச்சுகள் பணியமர்த்தப்பட்டனர். நீர், சுகாதாரம், உணவு போன்ற ஒவ்வொரு தேவைகளுக்கும் துறைசார்ந்த அமைச்சுகளுக்கு பொறுப்புகள் வழங்கப்பட்டிருந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



# கண்டி ஸ்ரீ தலதா யாத்திரைக்காக விடுமுறை வழங்கப்பட்ட 24 பாடசாலைகள் இன்று ஆரம்பம்

## 37 பாடசாலைகள் நாளை திறப்பு

**(எம்.ஏ.அமீனுல்லா)**

ஸ்ரீ தலதா மாளிகை யாத்திரைக்காக கண்டி நகர எல்லையிலும் அதனை அண்மித்த பகுதிகளிலும் மூடப்பட்ட 61 பாடசாலைகளில் 24 பாடசாலைகள் இன்று (28) மீண்டும் திறக்கப்பட உள்ளதாக மத்திய மாகாண ஆளுநர் பேராசிரியர் எஸ்.பி.அபயகோன் தெரிவித்துள்ளார்.

கண்டி நகருக்கு பெருந்தொகையான பக்தர்கள் வந்து புத்தரின் புனித தந்தத்தை தரிசனம் செய்ய வருவதால் போக்குவரத்துச் சிரமங்கள் ஏற்படக்கூடிய காரணத்தினால் இன்று (28)வரை மூடப்பட்டிருந்த 24 பாடசாலைகளும் திறக்கப்படும் எனவும் அவற்றைச் சுத்தப்படுத்த வேண்டிய அவசியமில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

கண்டிக்கு பாதுகாப்பு கடமைகளுக்காக வந்த பொலிஸார் மற்றும் முப்படை அதிகாரிகள் தங்கியிருந்த 37 பாடசாலைகளை சுத்தம் செய்ய வேண்டிய தேவை உள்ளதால் நாளை (29) திறக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் வலியுறுத்தினார்.

# புலனாய்வாளர்களின் அச்சுறுத்தலுக்கு மத்தியில் பாப்பரசர் போப் பிரான்சிஸுக்கு அஞ்சலி நிகழ்வு!






**(சி.திவியா)**

புலனாய்வாளர்களின் அச்சுறுத்தலுக்கு மத்தியில் பாப்பரசர் போப்பிரான்சிஸின் அஞ்சலி நிகழ்வு நேற்று முன்தினம் (26) இடம்பெற்றிருந்தது.

கத்தோலிக்க திருச்சபையின் பரிசுத்த பாப்பரசர் போப்பிரான்ஸ்சிஸ் வத்திகானில் உயிரிழந்திருந்தார்.

அவரின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து பல்வேறு பகுதிகளிலும் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்று வருவதுடன், நாடளாவிய ரீதியில் துக்க தினமாக நேற்று முன்தினம் (26) அனுஷ்டிக்கப்பட்டது. அந்த வகையில் வவுனியா காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சங்கத்தினரால் அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன்போது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளினால் தொடர் போராட்டம் மேற்கொண்டு வரும் வீதி அபிவிருத்தி திணைக்களத்துக்கு முன்பாக உள்ள கொட்டகைக்கு முன்பாக கையில் தீபமேந்தியவாறு அஞ்சலி செலுத்தியதுடன், அன்னாரது திருவுருவ படத்துக்கு ஒளிதீபமும் ஏற்றி அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

இதேவேளை, புலனாய்வாளர்களினால் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளினை புகைப்படம் எடுத்ததுடன், செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்களையும் படம் எடுத்திருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

# மக்கள் அனைவரையும் சமமாக நடத்தினால் மூவினக் கட்சிகள் தனித்தனியாக தேவையில்லை

## என்கிறார் சத்தியலிங்கம் எம்.பி.



**(சி.திவியா)**

மூவின மக்களும் இந்த நாட்டில் எப்போது சமமாக மதிக்கப்படுகின்றார்களோ அன்று தான் தமிழ்க்கட்சி, சிங்களக் கட்சி, முஸ்லிம் கட்சி என்ற தேவை இருக்காது. அந்த நிலையை ஏற்படுத்த வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று முன்தினம் (26) இடம்பெற்ற தந்தை செல்வநாயகத்தின் நினைவுதின நிகழ்வில் கலந்துகொண்டு ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர்,

மோகம் 30 நாள் என்று சொல்வார்கள். அந்த மோகத்தில் வந்த ஒரு கட்சி தாங்கள் தான் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களுடைய ஒட்டுமொத்த பிரதிநிதிகள் என்று சொல்கிறார்கள். ஒரு தேர்தலில் வென்றுவிட்டு அப்படி சொல்ல முடியாது. இந்த தேர்தல் முறையால் மாத்திரமே அவர்கள் வென்றார்களே தவிர, ஒட்டுமொத்த தமிழ் மக்களின் மனங்களையும் கவர்ந்து வெல்லவில்லை.

இந்த நாட்டில் மாற்றம் ஒன்று ஏற்படவேண்டும் என்று இலங்கை மக்கள் விரும்பினார்கள். இந்த நாட்டை தொடர்ச்சியாக ஆண்டவர்கள் நாட்டின் தேசிய வளங்களை பயன்படுத்தி நாட்டு மக்களை பிச்சைக்காரர் ஆக்கினார்கள். எனவே மக்கள் மாற்றம் ஒன்றை விரும்பி இந்த அரசை கொண்டு வந்தார்கள். அந்த மாற்றத்தை நாங்களும் எதிர்பார்க்கின்றோம்.

இந்த நாடானது ஊழற்ற சிறந்த நிர்வாகத்தை கொண்ட, கொள்ளையடிக்காதவர்களை கொண்ட ஒரு அரசாக இருக்க வேண்டும் என்பது ஒட்டுமொத்த இலங்கை மக்களின் அவா. அந்த விருப்பம் எமக்கும் இருக்கிறது. தமிழ்த் தேசிய கட்சிகள் ஒன்று சேர்ந்து இந்த நாட்டை நிர்வகிக்க முடியாது. நாங்கள் எண்ணிக்கையில் சிறுபான்மையாக இருக்கிறோம்.

தமிழ் மக்களின் பிரச்சினை நீண்டகால பிரச்சினை. எனவே தமிழ் தேசிய பிரச்சினையை தீர்க்க யார் முன் வருகின்றார்களோ அவர்களுடன் இணைந்து பயணிக்க நாம் தயாராக இருக்கிறோம்.

ஆனால், இந்த அரசு தெரிவுசெய்யப்பட்ட ஆறு மாதத்திலேயே அவர்களது பயணம் வித்தியாசமாக இருக்கிறது.

மூவின மக்களும் இந்த நாட்டில் எப்போது சமமாக மதிக்கப்படுகின்றார்களோ அன்று தமிழ்கட்சி சிங்களகட்சி, முஸ்லிம் கட்சி என்ற தேவை இருக்காது. அந்த நிலையை ஏற்படுத்த வேண்டிய பொறுப்பு இந்த அரசாங்கத்துக்கு இருக்கிறது. அதனை நம்பியே மக்கள் வாக்களித்தனர். எனவே குறுகிய நோக்கத்துக்காக மக்களை நீங்கள் ஏமாற்றினால் இந்த நாடு ஒரு நாளும் மீட்சியடையாது'' எனத் தெரிவித்தார்.

# 'மலையக சிறுகதைச் சிற்பி' நூல் வெளியீடு





**(அஷ்ரப் ஏ சமத்)**

வானொலி, தொலைக்காட்சிகளில் ஊடகப் பயணத்தைத் தொடர்பவர் நாகபூஷணி கருப்பையா மற்றும் தென்றல் எப்.எம். உதவிப் பணிப்பாளர் நாகபூசனி எழுதிய 'மலையக சிறுகதைச் சிற்பி' என்னும் தலைப்பில் என்.எஸ்.எம். இராமையாவின் மலையகச் சிறுகதைகளுக்கான பங்களிப்பு எனும் நூல் வெளியீட்டு வைபவம் சனிக்கிழமை 26 மே. 2025 கொழும்பு தபால் திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. நூலின் முதல் பிரதியை இராமையாவின் புதல்வர் கௌஷிக் இராமையா பெற்றுக்கொண்டார்.

இந்நிகழ்வுகள் சட்டத்தரணி, எழுத்தாளர் பதுளை சேனாதிராஜா தலைமையில் இடம்பெற்றதுடன், சிறப்பு விருந்தினராக சிரேஷ்ட உலக, ஒலிபரப்பாளர் பி.எச்.அப்துல் ஹமீத் கலந்துகொண்டதோடு, வெளியீட்டுரையை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மல்லியப்பு சந்தி திலகர் ஆற்றியதோடு, நூலாய்வு உரையை பிரதிப் பணிப்பாளர் சுப்பிரமணியம் சேதுரட்னம் மற்றும் தேசிய கல்வி நிறுவனத்தின் விரிவுரையாளர் தாஹிர் நூளருல் இஸ்ரா ஆகியோர்கள் நிகழ்த்தினார்கள். ஏற்புரை நூலாசிரியர் நாகபூசனி கருப்பையா நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் இலங்கை வானொலி ஒலி ஒளிபரப்பாளர்கள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு அதிதிகளிடமிருந்து நூல் பிரதிகளைப் பெற்றுக்கொண்டனர்.

# உயர்தரப் பரீட்சையில் சித்தி



உயர்தர பரீட்சையில் விஞ்ஞானப் பிரிவில் வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலய மாணவன் முகமட் முபாரக் முகமட் பர்ஹத் முதலிடம் பிடித்து சாதனைப் படைத்துள்ளார்.

2024 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று முன்தினம் (26) வெளியாகின. அதில் விஞ்ஞானப் பிரிவில் வவுனியா தெற்கு கல்வி வலயத்தைச் சேர்ந்த முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்ற முகமட் முபாரக் முகமட் பர்ஹத் என்ற மாணவன் 3'ஏ' சித்திகளைப்பெற்று மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தையும் தேசிய ரீதியில் 187ஆவது இடத்தையும் பெற்றுள்ளார்.



**(சி.திவியா)**

க.பொ.த. உயர்தர பரீட்சையில் வர்த்தகப் பிரிவில் வவுனியா நெளுக்குளம் கலைமகள் வித்தியாலய மாணவி பிதுர்சா சற்குணம் என்ற மாணவி முதலிடம் பிடித்து சாதனை படைத்துள்ளார்.

2024ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று முன்தினம் (26) வெளியாகின. அதில் வர்த்தகப் பிரிவில் வவுனியா தெற்கு கல்வி வலயத்தைச் சேர்ந்த நெளுக்குளம் கலைமகள் வித்தியாலயத்தில் கல்விபயிலும் பிதுர்சா சற்குணம் என்ற மாணவி 3'ஏ' சித்திகளை பெற்று மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தையும் தேசிய ரீதியில் 357ஆவது இடத்தையும் பெற்று சாதனைப் படைத்துள்ளார்.



**(சி.திவியா)**

க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் கணிதப் பிரிவில் வவுனியா கனகராயன்குளம் மகா வித்தியாலய மாணவன் குகதாசன் தனோஜன் முதலிடம் பிடித்து சாதனைப் படைத்துள்ளார்.

2024 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று முன்தினம் (26) வெளியாகின. அதில் கணிதப் பிரிவில் வவுனியா வடக்கு கல்வி வலயத்தைச் சேர்ந்த கனகராயன்குளம் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்ற குகதாசன் தனோஜன் என்ற மாணவன் மூன்று பாடங்களில் 3'ஏ' சித்திகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தையும் தேசிய ரீதியில் 144ஆவது இடத்தையும் பெற்றுள்ளார்.

குறித்த பாடசாலையின் வரலாற்றில் மாணவன் ஒருவன் முதலாம் இடத்தை பெறுவது இதுவே முதல் முறை என்பதும் குறிப்பிடத்தக்கது.



**(சி.திவியா)**

க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் கலைப் பிரிவில் வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலய மாணவி முகம்மது பைசல் பாத்திமா அஸ்ரா முதலிடம் பிடித்து சாதனைப் படைத்துள்ளார்.

2024ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று முன்தினம் (26) வெளியாகின. அதில் கலைப்பிரிவில் வவுனியா தெற்கு கல்வி வலயத்தைச் சேர்ந்த முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்ற முகம்மது பைசல் பாத்திமா அஸ்ரா என்ற மாணவி தமிழ், அரசியல், பொருளியல் ஆகிய பாடங்களில் 3'ஏ' சித்திகளை பெற்று மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தையும் தேசிய ரீதியில் 94ஆவது இடத்தையும் பெற்றுள்ளார்.



**(பு.கஜிந்தன்)**

2024 ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் வெளியாகியுள்ளன.

இயந்திரவியல் தொழில்நுட்ப பிரிவில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மாணவனான வியாகர்ணன் பிரவீன் மாவட்ட ரீதியாக முதலிடத்தையும் அகில இலங்கை ரீதியாக 97ஆவது இடத்தையும் பெற்று சாதனை படைத்துள்ளார்.

இவர் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் 'ஏ' சித்தியையும் தொழில்நுட்பத்துக்கான விஞ்ஞானத்தில் 'ஏ' சித்தியையும் இயந்திரவியல் தொழில்நுட்பத்தில் 'பி' சித்தியையும் பெற்று சாதனை புரிந்துள்ளார்.

# பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் அசமந்தப்போக்கால் வியாபாரிகள் சிரமம்!



**(பு.கஜிந்தன்)**

பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்கு உட்பட்ட பளை பிரதேசத்தில் உள்ள பொதுச் சந்தை மற்றும் பஸ் தரிப்பிடம் போன்ற இடங்களில் நேற்று (27) காலை பதற்றமான நிலை காணப்பட்டது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

பளை பஸ் தரிப்பிடத்தில் உள்ள பொது மலசலகூடமானது பராமரிப்பின்றி அசுத்தமான நிலையில் காணப்படுகின்றது. அதாவது மலசலகூட குழி நிரம்பிய நிலையில் காணப்படுவதுடன், அதனை பிரதேச சபை சுத்தம் செய்யாமல் மரப்பலகைகள் மற்றும் கடதாசி தாள்கள் போன்றவற்றை கொண்டு மூடியுள்ளனர். இதனால் பஸ் தரிப்பிடம் முழுவதும் துர்நாற்றம் வீசிய வண்ணம் உள்ளது.

மலசலகூடத்தின் பின்புறப் பகுதி பல காலமாக சுத்தம் செய்யாமல் காணப்படுவதால் அங்கு நீர் தேங்கி நிற்பதுடன், மரங்கள், புற்கள் மற்றும் கழிவு நீர் என்பன அதிகளவு காணப்படுவதால் நுளம்புகள் பெருகும் அபாயகரமாக காணப்படுகின்றது.

இப்பகுதிகளிலே ஈக்கள் அதிகளவு காணப்படுவதுடன் அந்த ஈ மரக்கறி சந்தை, மீன் சந்தை என்பவற்றில் வந்து நிற்பதால் வியாபாரிகள் தமது வியாபார நடவடிக்கையின்போது கொள்வனவாளர்கள் வியாபாரப் பொருட்களை கொள்வனவு செய்யும்போது ஈக்கள் நிற்பதால் அசுத்தமான பொருட்கள் என மரக்கறி, மீன்கள் என்பவற்றை கொள்வனவு செய்ய அச்சப்படுகின்றனர்.

மேலும் மீன் சந்தை சுற்றியுள்ள வடிகான் முழுவதும் நீர் தேங்கி நிற்பதுடன் புற்கள், மரங்கள் என்பன வளர்ந்து காணப்படுகின்றன. மற்றும் மீன் சந்தையின் கழிவு பொருட்கள் ஆங்காங்கே காணப்படுவதால் பொருட்களாலும் துர்நாற்றம் வீசுகின்றது. இதனால் சந்தைக்குள் வரும் வாடிக்கையாளர்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

மேலும், பிரதேச சபை இவ்வாறு பல தடவை தமக்கு வாக்குறுதி கொடுத்தும் தாம் தொடர்ந்து ஏமாற்றப்பட்டு வருவதாகவும் பிரதேச சபையில் தமக்கு நம்பிக்கை இல்லை எனவும் மக்கள் கூறுகின்றனர்.

மேலும் பொதுச்சந்தை கட்டடத் தொகுதியின் நடுப்பகுதியில் தற்போது பெய்த மழை காரணத்தால் நீர் தேங்கி நிற்பதுடன், சந்தைக்குள் வரும் வாடிக்கையாளர்கள் நீரினால் பாரிய சிரமத்தினை எதிர்நோக்கி வருகின்றனர்.


Now you can subscribe the following Newspapers

| Paper | Period | Cost Per Copy | No of Days | Rate |
|---|---|---|---|---|
| தமிழன் | One Month | 40.00 | 22 | 880.00 |
| | Three Month | | 64 | 2560.00 |
| | Six Month | | 129 | 5160.00 |
| | One Year | | 261 | 10440.00 |
| தமிழன் | One Month | 130.00 | 4 | 520.00 |
| | Three Month | | 13 | 1690.00 |
| | Six Month | | 26 | 3380.00 |
| | One Year | | 52 | 6760.00 |

| Paper | Period | Cost Per Copy | No of Days | Rate |
|---|---|---|---|---|
| the daily morning | One Month | 70.00 | 22 | 1540.00 |
| | Three Month | | 64 | 4480.00 |
| | Six Month | | 129 | 9030.00 |
| | One Year | | 261 | 18270.00 |
| the sunday morning | One Month | 180.00 | 4 | 520.00 |
| | Three Month | | 13 | 2340.00 |
| | Six Month | | 26 | 4680.00 |
| | One Year | | 52 | 9360.00 |

FOR MORE INFORMATION PLEASE CONTACT

Address : - The Manager Circulation
Liberty Publishers Private Limited
46/8, Dompe Road,
Kalukondayawa,Malwana.

DELIVERY FREE

Hotline :- 076 136 7623

Tel No: - 0112 127 209

# இரத்ததான முகாமின்போது தேர்தல் முறைப்பாடுகள் அலுவலகத்தின் உத்தியோகத்தர்கள் திடீர் சோதனை

## எம்.பிக்கள், கட்சி பதவிநிலையினர் வெளியேற்றம்



(வீரமுனை செய்தியாளர்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் வவுணதீவு பகுதியில் சனிக்கிழமை(26) காலை இலங்கை தமிழரசுக் கட்சியின் இரத்ததான முகாம் நடைபெற்ற நிலையில், அங்கு மட்டக்களப்பு மாவட்டத் தேர்தல்கள் முறைப்பாடுகள் அலுவலகத்தின் உத்தியோகத்தர்கள் திடீர் சோதனை நடவடிக்கையை முன்னெடுத்ததுடன் அங்கிருந்து பாராளுமன்ற உறுப்பினர்களை வெளியேற்றும் செயற்பாடுகளை முன்னெடுத்தனர்.

கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப் படையில் அங்கு சென்ற மட்டக்களப்பு மாவட்டத் தேர்தல்கள் முறைப்பாடுகள் அலுவலகத்தின் உத்தியோகத்தர்கள் இந்தச் சோதனை நட வடிக்கையை முன்னெடுத்தனர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகத் தலைவர் தந்தை செல்வாவின் நினைவு தினத்தை முன்னிட்டு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வாலிப முன்னணியின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் வவுணதீவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் நிலவும் இரத்தப் பற்றாக்குறையைத் தீர்க்கும் வகையில் வருடாந்தம் இந்த இரத்ததான முகாம் நடத்தப்பட்டு வருகின்றது. இதனடிப்படையில் இந்த இரத்ததான முகாம் வவுணதீவில் ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெற்ற நிலையில், அங்கு வந்த மட்டக்களப்பு மாவட்டத் தேர்தல் முறைப்பாடுகள் அலுவலகத்தின் உத்தியோகத்தர்கள் அனுமதிபெறாமல் குறித்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளமை தொடர்பிலும் வேட்பாளர்கள் குறித்த முகாமில் கலந்துகொள்ளப்பட்டுள்ளமை தொடர்பிலும் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் அடிப்படையில் சோதனையிட வந்துள்ளதாகத் தெரிவித்தனர்.

இதன்போது தேர்தல் ஆணைக்குழுவின் அரசியல் கட்சியின் செயற்பாடுகளுக்கான அனுமதிகள் பெறப்படாத காரணத்தால் அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள், கட்சியின் பதவிநிலை உறுப்பினர்கள் அங்கு இருக்கமுடியாதென மட்டக்களப்பு மாவட்டத் தேர்தல்கள் முறைப்பாடுகள் அலுவலகத்தின் உத்தியோகத்தர்கள் தெரிவித்ததற்கமைவாக பாராளுமன்ற உறுப்பினர்களும் கட்சியின் பதவி நிலையினரும் அங்கிருந்து வெளியேறிச் சென்றிருந்தனர்.

பொதுநல நோக்குடன் இரத்ததான நிகழ்வு முன்னெடுக்கப்பட்டுள்ளதன் காரணமாக வேட்பாளர்கள், அரசியல் கட்சிகளின் பதவி நிலையிலிருப்போர் இந்நிகழ்வைக் கொண்டுசெல்லமுடியுமென அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டதுடன் அறிவுறுத்தல்கள் மீறப்படுமானால் நிகழ்வு இரத்துச்செய்யப்படுமெனவும் உத்தியோகத்தர்களால் தெரிவிக்கப்பட்டது.

# சம்பூர் பகுதியில் கடற்படையினரால் கையகப்படுத்தப்பட்ட காணிகளை சொந்த மக்களுக்கு வழங்குமாறு கோரிக்கை



(பதுர்தீன் சிஹானா)

திருகோணமலை - சம்பூர் பகுதியில் கடற்படையால் கையகப்படுத்தப்பட்டுள்ள மக்களுக்குச் சொந்தமான காணிகளை வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த அரசாங்கத்தால் அனல்மின் நிலையத்துக்கு பெறப்பட்ட காணிகளை கடற் படையினர் தம்வசம் வைத்துள்ளதாகவும் தற்போது பயிர்ச்செய்கைகளை முன்னெடுப்பதற்கு தமக்குரிய காணிகளை வழங்குமாறும் சம்பூர் பிரதேச மக்கள் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மக்களுக்குச் சொந்தமான 500 ஏக்கருக்கும் மேலதிகமான விவசாயக் காணிகளை கடற்படையினர் தம்வசம் வைத்துள்ளதாகவும் இதனால் தமது வாழ்வாதாரத்தை முன்னேற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் பாதிக்கப்பட்ட சித்திர வேலாயுதம் தெரிவித்தார். கடற்படையினருக்கு 500 ஏக்கர் காணிகள் தேவைப்படாதெனவும் தமக்குத் தேவையான அளவைப் பெற்றுக்கொண்டு மிகுதியை காணி உரிமையாளர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் அவர் கோரிக்கை முன்வைத்தார்.

மேலும் குறித்த விவசாயக் காணி தொடர்பில் சம்பூர் 03ஆம் வட்டாரம் சித்திரவேல் கிருபைராஜா தமது கருத்தை இவ்வாறு வெளியிட்டார். ''மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தபோது 2006 ஆம் ஆண்டு தனது பிரதேசத்தை விட்டு வெளியேறியபோது இந்திய அரசாங்கத்துக்கு அனல்மின்நிலையம் அமைப்பதற்கு வழங்கியுள்ளதாகத் தகவல் கிடைத்துள்ளதாகவும் 2015ஆம் ஆண்டு மீள்குடியேற்றப்பட்டபோது மீண்டும் குறித்த காணிக்குள் செல்லும்போது அக்காணியைச் சுற்றி வேலி அமைத்திருப்பதாகவும் மக்களுக்குரிய காணியைப் பறித்து வேறு நாட்டவர்களுக்கு கொடுப்பது மிகவும் வேதனையளிப்பதாகவும் தங்களுடைய காணிகளைப் பெற்றுத் தருவதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டுமெனவும் தெரிவித்தார்.

கடந்த அரசாங்கத்தில் காணிகள் திருடப்பட்டு விற்பனை செய்யப்பட்ட நிலையில், இம்முறை அநுர அரசாங்கத்தை நம்பி நாங்கள் வாக்களித்துள்ளோம். ஆகவே, சம்பூர் மக்களுடைய காணிகளை வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டுமெனவும் நான் ஒரு தமிழனாக இருந்தும் இம்முறை இந்த அரசாங்கத்துக்கு வாக்களித்தது எங்களுடைய காணிகளை மீண்டும் வழங்குவார்கள் என்ற நம்பிக்கையில்தான் எனவும் பாதிக்கப்பட்ட நபரொருவர் தெரிவித்தார்.

இதேவேளை, சம்பூர் கடற்படை முகாம் அமைந்துள்ள இடமானது மக்களுக்குச் சொந்தமான இடமெனவும் மக்கள் பாவிக்கக்கூடிய குளங்கள் இருப்பதுடன் மாடுகளை மேய்க்கக் கூடிய காடுகள் இருப்பதாகவும் தற்போது மாடுகளைக் கூட மேய்ப்பதற்கு இடமில்லையெனவும் சம்பூர் பிரதேசத்தில் உள்ள மற்றுமொரு பெயர் குறிப்பிட விரும்பாத விவசாயியொருவர் தெரிவித்தார். கடந்த காலங்களில் சம்பூர் வேயன் வெட்டான் என்ற இடத்தில் தோட்டம் செய்து வந்ததாகவும் சோளம், மரக்கறி பல்வேறுபட்ட மரக்கறி வகைகளை நாட்டி தமது வாழ்வாதாரத்தை முன்னெடுத்து வந்ததாகவும் தற்போதைய நிலையில் குறித்த காணிகளை வழங்காமல் இருப்பதனால் தங்களது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இராசரெட்ணம் மோகன் தமது கவலையை வெளிப்படுத்தினார்.

2006 ஆம் ஆண்டு சொந்தக் காணியை விட்டு வேறிடங்களுக்குச் சென்று மீண்டும் வருகை தந்த போது கடற்படையினர் தங்களுக்குச் சொந்தமான காணியைப் பிடித்துவைத்துள்ளதாகவும் இந்த அரசாங்கம் குறித்த காணியை வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமெனவும் கோரிக்கை விடுகின்றனர்.

வீட்டுத் தோட்டங்களை மேற்கொண்டால் தங்களது ஜீவனோபாயத்தை எவ்வித பிரச்சினையுமின்றி முன்னெடுக்க முடியுமெனவும் பாதிக்கப்பட்ட மக்கள் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுகின்றனர். திருகோணமலை மாவட்டத்தில் சம்பூர் பிரதேசம் மிகவும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசமாகும். தமிழ் பேசும் மக்கள் தங்களது ஜீவனோபாயத்தை தங்களது முயற்சியால் மேம்படுத்தி வந்தனர். 450 க்கும் மேற்பட்ட ஏக்கர் விவசாயம் செய்யக்கூடிய விவசாய நிலங்கள் தற்போது கடற்படையினரின் கட்டுப்பாட்டில் கையகப்படுத்தப்பட்டுள்ளதாகவும் சம்பூர் பிரதேச அப்பாவி மக்களுடைய குறித்த விவசாயக் காணிகளை வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டுமெனவும் கோரிக்கை விடுகின்றனர்.

# வெள்ளத்தால் சேதமடைந்துள்ள மண்டூர் - ஆனைகட்டியவெளி வீதி

## போக்குவரத்துக்காக மீள் புனரமைப்பு



(வெல்லாவெளி செய்தியாளர்)

வெள்ளத்தினால் சேதமடைந்துள்ள மண்டூர் - ஆனைகட்டியவெளி போக்குவரத்துக்காக தற்காலிகமாக மீள் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளதாக போரதீவுப்பற்று வெல்லாவெளி பிரதேச செயலாளர் சோமசுந்தரம் ரங்கநாதன் நேற்று(27) தெரிவித்தார்.

கடந்த டிசம்பர் மாதம் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக போரதீவுப்பற்று வெல்லாவெளி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்டதும் மத்திய நீர்ப்பாசன பிரிவுக்குட்பட்டதுமான மண்டூர்-ஆனைகட்டியவெளியை இணைக்கும் சமுளை யடிவட்டை வீதியானது வெள்ளத்தால் உடைப்பெடுத்துள்ளது. இதனால் சுமார் நான்கு மாதமாக பொதுமக்கள், மாணவர்கள், கர்ப்பிணித்தாய்மார்கள், விவசாயிகள் பல கிலோ மீற்றருக்கப்பால் சுற்றியும் பல ஆயிரம் ரூபா பணத்தை வீண் செலவு செய்தும் போக்குவரத்துச் செய்யவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு முகம்கொடுத்திருந்தனர்.

இதனை தூரநோக்குடனும் மக்களின் அசௌகரியங்களையும் கண்ணுற்ற போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் ரங்கநாதன் தமது வழிகாட்டல், ஆலோசனைக்கமைவாக போரதீவுப்பற்று பிரதேச சபைச் செயலாளர், வெல்லாவெளி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, மத்திய நீர்ப்பாசன பொறியியலாளர், மண்டூர் கமநல அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் பொருளாதார உத்தியோகஸ்தர், கிராமசேவையாளர், சில தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் கூட்டான ஒத்துழைப்புடனும் கனரக வாகன இயந்திரப் பங்களிப்புடனும் உடைப்பெடுத்த வீதி தற்காலிமாக சிரமதானத்துடன் மீள் புனரமைப்புச் செய்யப்பட்டு போக்குவரத்து இலகுவாக்கப்பட்டுள்ளது.

குறித்த வீதியானது உரிமம் கோரப்படாத நிலையிலும் குறித்த விவசாய கமநல அமைப்பின் அலட்சியப்போக்கிலும் சுமார் நான்கு மாதம் மீள் புனரமைப்புச் செய்யப்படவில்லை என்பதோடு குறித்த வீதியை முழுமையாக மீள் புனரமைப்புச் செய்வதற்குரிய தொழில்நுட்ப உத்தியோகத்தரின் மதிப்பீட்டறிக்கையை வழங்குமாறு பிரதேச செயலாளர் கோரியுள்ளார்.

# பரீட்சையில் சித்தி



2024ஆம் ஆண்டுக்கான க.பொ.த. (உயர்தரப்) பரீட்சையில் மட்டக்களப்பு மகாஜனாக் கல்லூரி மாவட்டத்தில் முதல் இடத்தைப் பெற்று வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது. குணராஜா அபிசா என்ற மாணவி அளவையியல், மனைப் பொருளியல் மற்றும் தமிழ் ஆகிய பாடங்களில் 'ஏ' தர சித்தி பெற்றுள்ளார். அத்தோடு, அகில இலங்கை ரீதியில் 193ஆவது இடத்தைப் பெற்றுள்ளார்.(கல்லடி செய்தியாளர்)



2024ஆம் ஆண்டுக்கான க.பொ.த. (உயர்தரப்) பரீட்சைப் பெறுபேற்றின் அடிப் படையில் மட்டக்களப்பு செட்டிபாளையம் மகாவித்தியாலய மாணவன் மேகவண்ணன் திருமாவளவன் கணிதப் பிரிவில் 03 பாடங் களிலும் 'ஏ' தரச் சித்தி பெற்று பொறியியல் பீடத்துக்குத் தெரிவாகியுள்ளார். இவர் மாவட்ட மட்டத்தில் 15ஆவது இடத்தைப் பெற்றுள்ளார். (கல்லடி செய்தியாளர்)

# அல்-ஹிரா முஸ்லிம் மகளிர் மகா வித்தியாலய மாணவிகள் இருவர் மருத்துவத்துறைக்குத் தெரிவு

(சீனக்குடா செய்தியாளர்)



2024ஆம் ஆண்டு வெளியான க.பொ.த. (உயர்தர) பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் உயிரியல் விஞ்ஞான பிரிவில் கிண்ணியா முஸ்லிம் அல்-ஹிரா முஸ்லிம் மகளிர் மகா வித்தியாலய மாணவிகள் இருவர் வரலாற்றுச் சாதனை படைத்துள்ளனர்.

எம்.என்.மின்ஹா மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தையும் எம்.ஏ.எவ்.இனாசிரின் மாவட்ட மட்டத்தில் ஆறாம் இடத்தையும் பெற்று இந்தச் சாதனையை நிலைநாட்டி மருத்துவத் துறைக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்தப் பாடசாலைக்கு உயர்தரத்தில் விஞ்ஞானப் பிரிவுக்கான அனுமதி கிடைத்து முதல் தடவையிலேயே இந்த மாணவிகள் இந்தச் சாதனையை நிலைநாட்டியுள்ளனர். விஞ்ஞானப் பிரிவில் முதல் தடவையாக 13 மாணவிகள் இந்தப் பாடசாலையிலிருந்து தோன்றியிருந்தனர். இதில் பத்து மாணவிகள் சித்தியடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த மாணவர்களுக்கு கற்பித்த மற்றும் வேறு வழிகளில் உதவிய ஒத்தாசை புரிந்த அனைத்து ஆசிரியர்களுக்கும் நன்றி தெரிவிப்பதாகப் பாடசாலை அதிபர் தெரிவித்தார்.

# மருத்துவத்துறையில் முதலாம்நிலை பெற்று கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி சாதனை

(மாளிகைக்காடு செய்தியாளர்)

2024ஆம் வருட க.பொ.த. (உ/த) பரீட்சைப் பெறுபேறுகளின்படி கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியில் (தேசிய பாடசாலை) 10 மாணவிகள் மருத்துவ பீடத்துக்குச் செல்லத் தகுதி பெற்றுள்ளனர்.

இதில் மாவட்ட மட்டத்தில் 01, 04, 28, 35, 37, 43, 49, 60, 63, 67 ஆகிய நிலைகளைப் பெற்று மருத்துவ பீடத்துக்கு 10 மாணவிகளும் பொறியியல் பீடத்துக்கு 03 மாணவிகளும் உயிரியல் முறைமைகள் தொழில்நுட்பத்துக்கு 16 மாணவிகளும் வர்த்தக பீடத்துக்கு 12 மாணவிகளும் முகாமைத்துவ பீடத்துக்கு 08 மாணவிகளும் கலை, கலாசார பீடத்துக்கு 48 மாணவிகள் மற்றும் ஏனைய பீடங்கள் உள்ளடங்கலாக சிறந்த சித்திகளைப் பெற்று கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

பல்கலைக்கழகத்துக்கு தெரிவுசெய்யப்பட்ட மாணவிகளுக்கும் பாடசாலைக்கு அதி சிறப்புச் சித்திகளைப் பெற்று பெருமை சேர்த்த மாணவிகளுக்கும் சிறந்த பெறுபேறுகளைப் பெறுவதற்கு பல்வேறு நெருக்கடியான சூழ்நிலைகளில் அனைத்து வழிகளிலும் வழிகாட்டியாக இருந்து செயற்பட்ட கல்லூரி அதிபர் ஏ.பி.நஸ்மியா சனூஸ், பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள் உள்ளிட்ட பாடசாலைச் சமூகம் சார்பாக நன்றியும் வாழ்த்தும் தெரிவித்துள்ளனர்.

# தென்கிழக்கு பல்கலையில் இந்து- ஸ்ரீலங்கா உருதுக் கவிதைகள் தொடர்பான செயலமர்வு



(மாளிகைக்காடு செய்தியாளர்)

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை, கலாசார பீடத்தின் மொழித் துறையால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்து - ஸ்ரீலங்கா உருதுக் கவிதைகள் தொடர்பான செயலமர்வொன்று மொழித்துறைத் தலைவர் கலாநிதி ஏ. விக்கிரமரத்ன தலைமையில் பீடத்தின் கேட்போர் கூடத்தில் வெள்ளிக்கிழமை(25) இடம்பெற்றது.

மொழிகள் தொடர்பான விரிவுரையாளர்கள், மாணவர்கள் பங்குகொண்டிருந்த இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கலை, கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம்.பாஸில் கலந்து கொண்டார்.

நிகழ்வுக்கு இந்தியாவிலிருந்து வருகை தந்திருந்த இந்திய உருதுக் கவிஞர் மற்றும் பேராசிரியர் முஹமத் மசூத் அஹமத் விசேட பேச்சாளராகக் கலந்துகொண்டு உரையாற்றினார்.

நிகழ்வின்போது பீடாதிபதி உள்ளிட்ட பல்கலைக்கழக சமூகத்தினரால் விசேட பேச்சாளர் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். அதேவேளை, பேராசிரியர் முஹமத் மசூத் அஹமத் பல்கலைக்கழக நூலகத்துக்கு ஒரு தொகுதி நூல்களை பீடாதிபதியிடம் ஒப்படைத்தார்.

பேராசிரியரோடு இணைந்து சபுத்தி (Sabuddi) அமைப்பின் உறுப்பினர்களும் கலந்து கொண்டிருந்தனர். நிகழ்வின்போது சிரேஷ்ட பேராசிரியர் எம்.ஐ.எம்.கலில், பேராசிரியர் எம்.ஏ.எஸ்.எவ்.சாதியா, சிரேஷ்ட விரிவுரையாளர்களான என்.சுபராஜ், கே.ஆர்.பாத்திமா சீபா, விரிவுரையாளர் ஏ.அப்துல் ரஸ்ஸாக் உள்ளிட்டவர்களுடன் மாணவர்களும் பங்கு கொண்டிருந்தனர்.

# சமுர்த்தி வங்கியில் அடையாள அட்டை வழங்கல்

(திராய்க்கேணி செய்தியாளர்)

ஒலுவில், பாலமுனை சமுர்த்தி வங்கி கட்டுப்பாட்டுச் சபை உறுப்பினர்களுக்கான அடையாள அட்டைகள் மற்றும் சமுர்த்தி பயனாளிகளுக்கு கடன் வழங்கும் நிகழ்வும் சமுர்த்தி வங்கி கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் ஊடகவியலாளர் ஏ.எம்.பளீல் தலைமையில் வெள்ளிக்கிழமை(25) இடம்பெற்றன.

இந்நிகழ்வில், அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் ஏ.சி.அஹமட் அப்ஹர் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு ஒலுவில், பாலமுனை, தீகவாபி உட்பட 15 பிரிவுகளின் உள்ளக கட்டுப்பாட்டுச் சபை உறுப்பினர்களுக்கும் அடையாள அட்டைகளை வழங்கி வைத்தார்.

அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தின் சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ.எம்.ஹமீட், முகாமைத்துவப் பணிப்பாளர் ரி.பரமானந்தன், சமுர்த்தி வங்கி முகாமையாளர் ரி.கே.ரஹ்மத்துல்லா உட்படப் பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

வங்கி கட்டுப்பாட்டுச் சபையின் சங்கத் தலைவர்கள் உட்பட சங்க உறுப்பினர்கள் 15 பேருக்கு இந்த அடையாள அட்டைகள் வழங்கி வைக்கப்பட்டன. சமுர்த்தி வங்கிக்குப் புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட கட்டுப்பாட்டுச் சபை உறுப்பினர்களுக்கான அடையாள அட்டைகள் இவ்வாண்டின் (2025) முதலாவதாக அம்பாறை மாவட்டத்திலேயே அதிலும் ஒலுவில், பாலமுனை சமுர்த்தி வங்கிக் கட்டுப்பாட்டுச் சபையின் உறுப்பினர்களுக்கே வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# வட்டாரத் தேர்தலையும் தாண்டி தமிழினத்துக்கான தேர்தலாக உள்ளூராட்சித் தேர்தலை கருதவேண்டும்

## சாணக்கியன் எம்.பி.



(சீலாமுனை செய்தியாளர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழரசுக் கட்சிக்கு மூன்று பாராளுமன்றப் பிரதிநிதிகள் கிடைக்கப்பெறுவதற்கான ஆணையை எமது மாவட்ட மக்கள் வழங்கினார்கள். அதன் மூலம் எமது மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கான வழிவகைகளை எமது கட்சியும், பாராளுமன்ற உறுப்பினர்களும் மிகச் சிறப்பாக முன்னெடுத்து வருகின்றனர்'' - என மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் தெரிவித்தார்.

அதேபோன்று எமது மட்டு.மாநகர சபைக்குட்பட்ட மக்களின் தேவைகளையும் குறைபாடுகளையும் சிறப்பாக முன்னெடுத்துச் செல்லவேண்டும் என்றெண்ணி, உங்களது சீலாமுனை வட்டார வேட்பாளர் ஒருவரை எமது கட்சி களமிறக்கியுள்ளது. அவரை வெற்றிபெறச் செய்து உங்களின் பிரதேச தேவைகளை நிவர்த்தி செய்துகொள்ள முடியுமென்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

தமிழரசுக் கட்சியின் 11 ஆம் வட்டார சீலாமுனை, பெரிய உப்போடை மற்றும் சின்ன உப்போடை வேட்பாளர் த.நடராசா சுதர்சன் தலைமையில் அண்மையில் சீலாமுனையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

''மட்டு. மாவட்டத்திலுள்ள தமிழ் மக்கள் தமிழரசுக் கட்சிக்கு ஆணையை வழங்குவதற்குத் தயாராக இருக்கின்றார்கள். ஏனென்றால், மாநகர சபையில் அதிகளவான வளங்கள் காணப்படுகின்றன. கடந்த 2023 ஆம் ஆண்டு மாநகர சபையினுடைய ஆட்சிக்காலம் முடிவடைந்ததன் பின்னர் சபைக்குள் இருந்த பல நிதிகளை முன்னாள் இராஜாங்க அமைச்சர்களாக இருந்த பிள்ளையான் போன்றோர் கையாடல் செய்திருந்தார்கள். அதுமாத்திரமல்லாமல், மாநகர சபை எல்லைக்குள் இருக்கும் பல வளங்களை எடுத்து பல சட்ட விரோதமான செயல்களும் நடந்திருக்கின்றன.

இந்த விடயங்களில், கடந்த 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2023 ஆம் ஆண்டு வரை மட்டக்களப்பு மாநகர சபைக்குள் இருந்த இலங்கை தமிழரசு கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் மிக நேர்மையாக செயற்பட்டார்கள் என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக, சீலாமுனை பகுதியின் ஆற்றங்கரையோரத்தை ஒரு சுற்றுலாத்தலமாக அபிவிருத்தி செய்வதான சிறந்த முன்மொழிவுகளை எமது வட்டார வேட்பாளர்கள் தெரிவுசெய்திருக்கின்றார்கள். இவற்றை நடைமுறைக்கு கொண்டு வந்தால் மாநகர சபை எல்லைக்குள் வருமானங்களை அதிகரிக்கக்கூடிய சில திட்டங்களாக அவற்றை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. அந்தவகையில், இந்தத் தேர்தல் வட்டாரத் தேர்தலையும் தாண்டி, தமிழ் இனத்துக்கான ஒரு தேர்தலாகக் கருத்திலெடுத்து இலங்கை தமிழரசுக் கட்சிக்கு வாக்களிக்க வேண்டும்'' - என்று அவர் கேட்டுக்கொண்டார்.

# தந்தை செல்வாவின் 48ஆவது நினைவு தினம் அனுஷ்டிப்பு



(வீரமுனை செய்தியாளர்)

இலங்கை தமிழரசுக்கட்சியின் ஸ்தாபகத் தலைவர் தந்தை செல்வாவின் 48ஆவது நினைவு தினம் தமிழரசுக்கட்சி வாலிபர் முன்னணியின் ஏற்பாட்டில் தந்தை செல்வா சதுக்கத்தில் சனிக்கிழமை(26) அனுஷ்டிக்கப்பட்டது.

வாலிபர் முன்னணித் தலைவர் கே.சோபனன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களான ஞா.சிறிநேசன், இ.சிறிநாத் மற்றும் முன்னாள் மட்டக்களப்பு மாநகரசபை முதல்வா தி.சரவணபவன், தமிழரசுக்கட்சியின் முன்னாள் பொதுச்செயலாளர் கி.துரைராஜசிங்கம் உட்பட கட்சியின் முக்கியஸ்தர்கள், வாலிபர் முன்னணி, மகளிர் அணி உறுப்பினர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது தந்தை செல்வாவின் சிலைக்கு மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது. தந்தை செல்வாவின் ஆத்மசாந்திக்காக இரண்டு நிமிடங்கள் மௌன இறைவணக்கம் செலுத்தப்பட்டதுடன் நினைவுரைகளும் நடைபெற்றன.

# கடந்த இரு தேர்தல்களிலும் மக்கள் சோரம்போய் வாக்களித்ததன் காரணமாக ஏமாற்றப்பட்டனர்

## ஐ.ம.ச. பொத்துவில் அமைப்பாளர் வினோகாந்த்

(ஆலையடிவேம்பு செய்தியாளர்)

''கடந்த இரு தேர்தல்களிலும் மக்கள் சோரம்போய் வாக்களித்ததன் காரணமாக ஏமாற்றப்பட்டுள்ளனர். இந்த நாட்டுக்கு சிறந்த தீர்வைப் பெற்றுக்கொடுக்கக் கூடியவர் சஜித் பிரேமதாச ஒருவரே என்பதை ஏற்றுக்கொண்டுள்ளனர். எனவே, ஆலையடிவேம்பு, திருக்கோவில், காரைதீவு பிரதேச சபைகளில் அதிகமான இடங்களை நாம் கைப்பற்றுவோம்'' - என ஐக்கிய மக்கள் சக்தியின் பொத்துவில் தொகுதி அமைப்பாளர் வெள்ளையன் வினோகாந்த் தெரிவித்தார்.

அக்கரைப்பற்று ஆலையடிவேம்பில் அமைந்துள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் தேர்தல் காரியாலயத்தில் அண்மையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.



கடந்த இரு தேர்தல்களிலும் மக்கள் சோரம்போய் வாக்களித்ததன் காரணமாக ஏமாற்றப்பட்டுள்ளனர். இந்த நாட்டுக்கு சிறந்த தீர்வைப் பெற்றுக்கொடுக்கக் கூடியவர் சஜித் பிரேமதாச ஒருவரே என்பதை ஏற்றுக்கொண்டுள்ளனர். தற்போது ஆட்சிக்கு வந்துள்ள தேசிய மக்கள் சக்தியினருக்கு கையிலே ஒரு மைக் கிடைத்தால் போதும். அந்த மைக்கை வைத்துக்கொண்டு முடியுமானவரை பொய் சொல்லுகின்றனர்.

இப்படியான எல்போட் காரர்களுக்கு நீங்கள் வாக்கை வழங்கவேண்டாம் எனக் கூறியிருந்தோம். அதனையும் மீறி வாக்களித்தனர். இந்த வாகனம் தற்போது விபத்துக்குள்ளாகியுள்ளது. ஆகவே, கடந்த தேர்தல்களைப் போலன்றி கண்ணியமான வேட்பாளர்களைக் களமிறக்கியுள்ள சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்திக்கு வாக்களித்து பிரதேச சபையில் இருந்து மாற்றத்தைக் கொண்டுவருமாறு கேட்டுக்கொள்கின்றேன்'' - என்றார்.

# மனித உரிமை மீறல் தொடர்பில் ஆணைக்குழுவுடன் இணைந்து செயற்படுவது குறித்து கலந்துரையாடல்



(பாறுக் ஷிஹான்)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் கலாநிதி ஜெகான் குணதிலக தலைமையிலான உயர்மட்டக் குழுவினர் கல்முனை மனித உரிமைகள் பிராந்திய நிலையத்துக்கு விஜயமொன்றை மேற்கொண்டனர்.

கல்முனை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் அப்துல் அஸீஸின் நெறிப்படுத்தலில் குழுக் கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. இக்கலந்துரையாடலின் போது ஆணைக்குழுவின் சர்வதேச உறவுகளுக்கான பணிப்பாளர் க. கபிலன் வில்வராஜன் மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சட்ட உத்தியோகத்தர் ஏ.டபிள்யூ.எம்.அஹமட் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

வலிந்து காணாமலாக்கப்பட்ட தமிழ், முஸ்லிம் உறவினர்களின் குடும்பத்தினர்கள் கலந்து கொண்டு ஆணைக்குழுவிடம் கோரிக்கைகளை முன்வைத்தனர். இக்குடும்ப உறுப்பினர்கள் எதிர்நோக்குகின்ற பாதுகாப்புப் பிரச்சினைகள், சட்டரீதியாகவுள்ள உரிமைகள் பற்றியும் இதனைப் பிரயோகிக்கின்றபோது ஏற்படுகின்ற சவால்கள் பற்றியும் கருத்துகள் முன்வைக்கப்பட்டன. இது தவிர, சிவில் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலின் போது தற்போதைய சூழலில் சிவில் அமைப்புகள் செயற்படுவதால் ஏற்படும் சவால்கள், அண்மையில் நடந்துகொண்டிருக்கும் மனித உரிமை மீறல்கள் பற்றியும் மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன் இணைந்து செயற்படுவதற்கான பொறிமுறைகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

அதனைத் தொடர்ந்து கல்முனை பிராந்திய பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றும் பொலிஸ் அதிகாரிகளுடனான கலந்துரையாடலின் போது தமிழ்மொழிப் பிரயோகத்தின் அவசியம் பற்றியும் பாதிக்கப்பட்டு பொலிஸ் நிலையங்களுக்கு வருகின்ற பொதுமக்களுக்கான விரைவான பரிகாரங்கள் மற்றும் வழக்கு நடைமுறையிலுள்ள சவால்கள் பற்றியும் கலந்துரையாடப்பட்டன.

மேலும், அம்பாறை மாவட்டத்தில் கரும்பு விவசாயிகளின் உணவுப் பாதுகாப்பு மற்றும் காணி உரிமை சம்பந்தமாகவும் நுரைச்சோலையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சுனாமி வீடமைப்புத் திட்டத்தை இருபது வருடங்களுக்கும் மேலாக மக்களிடம் கையளிக்கப்படாமை பற்றியும் காதி நீதிமன்றங்களின் அமர்வுகளின் போது பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் இருக்காமையால் ஏற்படும் விளைவுகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

இதற்கு மேலதிகமாக கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் நிர்வாக ரீதியான பிரச்சினைகள் பற்றியும் அதனால் பொதுமக்கள் எதிர்நோக்கும் நிர்வாகக் குறைபாடுகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது. மேற்படி மக்களின் கோரிக்கைகளை ஆணைக்குழு உரிய கவனமெடுத்து நடவடிக்கை எடுக்கப்படுமென ஆணையாளர் கலாநிதி ஜெகான் குணதிலக கூறினார்.

# சுமந்திரன் தமிழரசுக் கட்சியில் இருக்கும்வரை தமிழ் மக்களின் அபிலாஷைகள் நிறைவேறாது

## மக்கள் சிந்தித்து செயற்பட வேண்டும் என்கிறார் சட்டத்தரணி சிறிகாந்தா



(கனகராசா சரவணன்)

''தமிழரசுக் கட்சியினர் மைத்ரிபால சிறிசேன காலத்தில் எவ்வாறு செயற்பட்டார்களோ அவ்வாறே ரணிலுக்கும் ஆதரவாக செயற்பட்டார்கள். அதுபோலவே அநுரகுமார அரசாங்கத்துடன் இரகசியமான ஓர் உடன்பாட்டின் அடிப்படையிலே செயற்படத் தொடங்கியுள்ளதுடன் ஜே.வி.பி. தமிழ் எம்.பிக்களின் பேச்சாளர்களாக சிலர் இயங்கி வருகின்றனர். எனவே, எம்.ஏ.சுமந்திரன் கட்சியில் இருக்கும் வரையும் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை எதிர்பார்க்க முடியாது. மக்கள் சிந்தித்து செயற்பட வேண்டும்'' - என தமிழ்த் தேசியக் கட்சித் தலைவரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான நல்லதம்பி சிறிகாந்தா தெரிவித்தார்.

மட்டக்களப்பு, கல்குடா தேர்தல் தொகுதியில் ஏறாவூர்ப்பற்று பிரதேச சபைக்கான வேட்பாளர் அறிமுகக் கூட்டம் களுவன்கேணியில் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சி மற்றும் தமிழ் மக்கள் பேரவை என்பன இணைந்து சைக்கிள் சின்னத்தில் களமிறங்கியுள்ள வேட்பாளர்களின் அறிமுகக் கூட்டம் அண்மையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் தலைமையில் இடம்பெற்றுது.

இதன்போது அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சிரேஷ்ட சட்டத்தரணி ந.சிறிகாந்தா, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செ.கஜேந்திரன், முன்னணியின் உறுப்பினர் சட்டத்தரணி சுகாஸ் உட்பட கட்சியின் முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டனர். இதன்போது உரையாற்றிய நல்லதம்பி சிறிகாந்தா,

''இலங்கை சுதந்திரமடைந்த நாளிலிருந்து திட்டந்தீட்டி தொடர்ச்சியாக செயற்பட்டு வந்த பௌத்த, சிங்கள பேரினவாத அரசாங்கங்களை விட இப்போது அநுரகுமார திசாநாயக்க தலைமையில் இயங்கிக்கொண்டிருக்கின்ற தேசிய மக்கள் சக்தி என அழைக்கப்படுகின்ற ஜே.வி.பி. அரசாங்கம் மிக தீவிரமாக இராஜதந்திர ரீதியாக செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

எனவே, எங்கள் தீர்ப்பு, எங்கள் முடிவு உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தீர்க்கமாகத் தெரிவிக்கப்பட வேண்டும் என்பதற்காக தமிழ் மக்கள் பேரவை அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் சைக்கிள் சின்னத்தில் தமிழீழம் முழுவதும் சிங்கள இனவெறிக் கும்பலின் வேட்பாளர்களுக்கெதிராக சுயமரியாதை கொண்ட தமிழர்களான ஆண்களையும் பெண்களையும் இளைஞர்களையும் களத்தில் இறக்கியுள்ளோம். இது ஒரு சத்திய போராட்டம். இந்தப் போராட்டத்தில் எங்களுடன் இணைந்திருக்க வேண்டிய தமிழ்க் கட்சிகள் தங்களுடைய சொந்தக் காரணங்களுக்காக தனித்துப் போட்டியிடுகின்றனர். காலப்போக்கிலே இந்தக் கொடியின் கீழ் வருவார்கள். ஆனால், தமிழரசுக் கட்சி கடந்த தேர்தலில் மாபெரும் வெற்றியைப் பெற்றிருப்பதாக மார்தட்டிக்கொண்டிருக்கின்றது.

எமது மக்களுக்காகப் பேசவேண்டியவர்கள் இன்று தமிழர்களின் தேசிய அபிலாஷைகளுக்கெதிராக செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற சிங்கள இனவாதிகளின் எடுபிடிகளான இந்த ஜே.வி.பி. தமிழ் எம்.பிக்களுக்கு பேச்சாளர்களாக தமிழரசுக் கட்சியின் சில உறுப்பினர்கள் இயங்கிக்கொண்டிருக்கின்றனர். எவ்வளவு வெட்கம் கெட்ட நிலைமை. யாருடைய சார்பிலே இப்போது அரசாங்கத் தரகர்களாக சிங்கள இனவெறிக்கும்பலின் எம்.பிக்களின் பேச்சாளர்களாகத் தங்களை மாற்றிக்கொண்டிருக்கின்றனர் என்பதை மக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இவர்கள் அரசியல் தரகர்கள். இவர்களை நம்பி எமது மக்கள் வாக்களிக்கின்ற போது ஒவ்வொரு வாக்கும் உரிமைக்காக, உணர்வுக்காக, விடுதலைக்காக அளிக்கப்படுகின்றது .

ஆனால், அவர்கள் என்ன செய்து கொண்டிருக்கின்றனர்? இன்று தமிழரசுக் கட்சி தமிழ் மக்களின் அரசியல் கோரிக்கையை வலியுறுத்துகின்ற உரிமையை இழந்துள்ளது. அவர்களது கோரிக்கை எல்லாம் தமிழ் இனத்தின் விடுதலை அல்ல. நாங்களும் நீங்களும் அர்த்தமற்றுப் போய்விட்டது எனக் கருதுகின்ற இந்திய - இலங்கை 13ஆவது திருத்தத்தைப் பேசுகின்றனர். இந்த ஒப்பந்தம் தொடர்பாக இலங்கைக்கு இந்தியத் தலைவர்கள் வரும்போது அதனை அமுல்படுத்துமாறு கோரியதாக ஊடகங்களில் சொல்லிவிட்டுப் போகின்றனர். அதனை இலங்கை அரசு ஒரு காதால் கேட்டு மறு காதால் விட்டுவிடுகின்றது.

இந்தியா விரும்பினால் இந்த ஒப்பந்தத்தை அமுல்படுத்த நிர்ப்பந்திக்க முடியும். அதை இந்தியா செய்யமாட்டாது. 13ஆவதை பேசிப் பேசியே தமிழ் மக்களின் காலம் நீர்த்து போகுமென இந்தியா கணக்குப் போடுகின்றது. இது யதார்த்தமான நிலைமை. தமிழரசுக் கட்சி ஆளும் அரசாங்கத்தினுடைய ஏவல் படையாக மாறிக் கொண்டிருக்கின்றது. இந்தப் பின்னணியில் தான் தமிழ் மக்களின் அடிப்படை இலட்சியத்தை, குறிக்கோளை வலியுறுத்தக்கூடிய எங்களுக்கு ஓர் உறுதியான அரசியல் தலைமை தேவைப்படுகிறதென உணர்ந்த காரணத்தால் நாங்கள் எல்லோரும் ஓர் அணியாகத் திரண்டுள்ளோம்.

சுமந்திரனுடைய காருக்கு ஒரு சின்னப் பிரச்சினை நடந்தால் அன்றைய ஜனாதிபதி மஹிந்த விசாரிப்பார். சுமந்திரன் தமிழினத்தின் சாபக்கேடு. அவரைக் கொண்டு வந்த சிலர் இன்று உயிரோடு இல்லை. கடந்த தேர்தலில் தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்ட பின்னர் கூட தமிழரசுக் கட்சியைத் தொடர்ந்து நாசப்படுத்திக் கொண்டிருக்கின்றார். அவர் தமிழரசுக் கட்சியிலிருந்து ஆட்டம் போடும்வரை நீங்களும் நாங்களும் எதையும் எதிர்பார்க்க முடியாது. அந்த நிலைமை மாற்றப்படக் கூடுமா என்பதை தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் தான் தீர்மானிக்க வேண்டும். ஆனால், தமிழரசுக் கட்சிக்கெதிராக இந்தத் தேர்தலிலே வாக்குகள் விழுமாக இருந்தால் அந்த நிலைமை மாறும்'' - என்றார்.

# கிரான்குள பாடசாலையில் 16 வயது மாணவியொருவர் மயங்கி விழுந்து உயிரிழப்பு

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு கிரான்குளம் பாடசாலையொன்றின் வகுப்பறையில் 16 வயது மாணவியொருவர் மயங்கி வீழ்ந்த நிலையில் களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற நிலையில் உயிரிழந்த சம்பவம் வெள்ளிக்கிழமை (25) இடம்பெற்றுள்ளதாக களுவாஞ்சிக்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

கிரான்குளம் 8ஆம் பிரிவு அமரசிங்க வீதியைச் சேர்ந்த க.பொ.த. சாதாரண தரத்தில் கல்விகற்றுவரும் 16 வயதுடைய இராஜன் வினோஜினி என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கிரான் குளம் விநாயகர் மகா வித்தியாலயத்தில் கல்விகற்றுவரும் குறித்த மாணவி வழமைபோல சம்பவதினம் பாடசாலைக்குச் சென்று கற்றல் நடவடிக்கையில் ஈடுபட்டுவந்த நிலையில் வகுப்பறையில் திடீரென மயங்கி வீழ்ந்துள்ளார்.

இதனையடுத்து மாணவியை செட்டிப்பாளையம் பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு சென்று அங்கிருந்து களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற நிலையில் உயிரிழந்துள்ளார். இதில் உயிரிழந்தவரின் சடலம் வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டு பிரேத பரிசோதனை மேற்கொள்ள நீதிமன்ற அனுமதியைப் பெறும் நடவடிக்கையை பொலிஸார் முன்னெடுத்திருந்தனர். மேலும், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிக்குடி பொலிஸார் மேற்கொண்டிருந்தனர்.

# மழைநீர் தேங்கிய குழியில் விழுந்து ஒரு வயது சிறுவன் உயிரிழப்பு

(சீனக்குடா செய்தியாளர்)

கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட, காக்காமுனை, கோழிமுட்டைகரச்சை பகுதியில் மழைநீர் தேங்கி நின்ற குழியில் விழுந்து, ஒரு வயது நிரம்பிய சிறுவன் பலியாகினார்.

இச் சம்பவம் சனிக்கிழமை(26) காலை இடம்பெற்றுள்ளது.

ஒரு வயதும் இரண்டு மாதங்களும் நிரம்பிய, குடும்பத்தின் ஒரே ஒரு மகனான முகமது சையான் மிசாரி என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்தவராவார். சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

தனது வீட்டு முற்றத்தில், மாமரத்தில் கட்டப்பட்டிருந்த தொட்டிலுக்கு அருகில் விளையாடிக் கொண்டிருந்த இந்தச் சிறுவன் வீட்டுக்கு முன்னால் மழைநீர் தேங்கி நிற்கின்ற குழிக்குள் சென்று விளையாட முற்பட்டபோதே இந்த அனர்த்தம் ஏற்பட்டிருப்பதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

# தமிழன் வணிக உலகம்

Thamilan Business World

www.thamilan.lk businessthamilan@gmail.com

## New Anthoney's அன்ரிபயோடிக் இல்லாத கோழி இறைச்சித் தெரிவுகளை வாடிக்கையாளர்களுக்கு விநியோகிப்பதற்காக PickMe உடன் கைகோர்ப்பு




சிறந்த, உயர்தர, நெறிமுறைப்படி பெறப்பட்ட இறைச்சிகளை எளிதாகவும் வசதியாகவும் அனுபவிக்கும் நோக்கில் New Anthoneys இன் முதன்மையான இறைச்சி பல்பொருள் அங்காடியான மீட்லரி, இலங்கையின் முன்னணி டிஜிட்டல் தள மற்றும் விநியோக கட்டமைப்பான PickMe உடன் கூட்டுச் சேர்ந்துள்ளது. இந்தக் கைகோர்ப்பு, தேர்ந்தெடுக்கப்பட்ட பிராந்தியங்களில் உள்ள நுகர்வோர் பாராட்டப்பட்ட ஹரிதாஹரி கோழி உட்பட Meatley இன் பிரீமியம் அளவிலான அன்ரிபயோடிக் இல்லாத கோழி இறைச்சித் தயாரிப்புகளை நேரடியாக தங்கள் வீடுகளுக்கு வசதியாக ஓடர் செய்யும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையின் முன்னணி நிலைபேறான கோழி இறைச்சி உற்பத்தியாளரான New Anthoneys குழுமத்தின் ஒரு பகுதியான Meatlery, நுண்ணுயிர் எதிர்ப்பிகள் இல்லாமல் வளர்க்கப்படும் பல்வேறு வகையான இறைச்சிகளை வழங்குகிறது. அவற்றில் அவர்களின் மிகவும் விரும்பப்படும், விருது பெற்ற பதப்படுத்தப்பட்ட மற்றும் மதிப்பு கூட்டப்பட்ட உணவுப் பொருட்கள் அடங்கும். இது சமீபத்தில் 26ஆவது ஜனாதிபதி ஏற்றுமதி விருதுகளில் பதப்படுத்தப்பட்ட உணவுப் பிரிவில் மதிப்புமிக்க 'சிறந்த ஏற்றுமதியாளர்' விருதைப் பெற்றது. அதனூடாக நுகர்வோர் ஆரோக்கியமான மற்றும் சுவையான தயாரிப்புகளை அனுபவிப்பதை உறுதிசெய்துள்ளது.

## வியாபார தொடர்ச்சித்தன்மை ISO தரச் சான்றிதழைப் பெற்ற CDB



மீண்டெழும் திறன், வியாபார தொடர்ச்சி, புத்தாக்கம், பாதுகாப்பு மற்றும் செயற்பாட்டு சிறப்பு ஆகியவற்றுக்கான அர்ப்பணிப்பை உறுதி செய்து சிட்டிசன்ஸ் டெவலப்மன்ட் பிஸ்னஸ் ஃபினான்ஸ் பி.எல்.சி. (CDB), இலங்கையில் வியாபார தொடர்ச்சி முகாமைத்துவத்துக்காக ISO 22301:2019 சான்றிதழைப் பெற்றுக் கொண்ட முதலாவது வங்கி சாரா நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனமாகத் திகழ்கிறது. தகவல் பாதுகாப்புக்கான நீண்ட கால அர்ப்பணிப்பின் அடிப்படையில் CDB இன் இந்த மைல்கல் கட்டியெழுப்பப்பட்டுள்ளதுடன், 2024 செப்டெம்பர் மாதத்தில் தகவல் பாதுகாப்பு முகாமைத்துவம் தொடர்பான ISO 27001:2022 மீள் சான்றிதழை வெற்றிகரமாகப் பெற்றுள்ளது. ஆறு வருடங்களாகப் பேணியிருந்த ஏற்கனவே நிறுவனம் பெற்றிருந்த ISO 27001:2013 சான்றிதழிலிருந்து இது மேம்படுத்தப்பட்ட சான்றிதழாகவும் அமைந்துள்ளது. இந்தச் சான்றிதழ்களுடன், நிதித் துறையில் பாதுகாப்பு மற்றும் செயற்பாட்டு நியமங்கள் போன்றவற்றில் CDB புதிய நியமத்தை ஏற்படுத்தியுள்ளதுடன், வாடிக்கையாளர்களுக்கு செயற்பாடுகள் தடங்கலின்றித் தொடரும் என்பதற்கான உறுதி மொழியையும் வழங்கியுள்ளது.

இந்தச் சான்றிதழ் தொடர்பில் CDB இன் பிரதம தகவல் பாதுகாப்பு அதிகாரி ஷவிந்திர பெர்னான்டோ கருத்துத் தெரிவிக்கையில், "CDB இல் பாதுகாப்பு மற்றும் மீண்டெழும் திறன் போன்றன எமது செயற்பாடுகளின் அடிப்படையான விடயங்களாக அமைந்துள்ளன. ISO 27001 மற்றும் ISO 22301 ஆகிய சான்றிதழ்களை பெற்றுள்ளமையானது, வாடிக்கையாளர் தரவுகளைப் பாதுகாப்பதற்கான எமது அர்ப்பணிப்பை உறுதிசெய்துள்ளதுடன், வியாபார தொடர்ச்சித் தன்மையையும் பேணுகிறது. மேலும், நம்பிக்கை வாய்ந்த நிதிச் சேவைகள் வழங்கும் பங்காளர் எனும் எமது நிலையை மேலும் உறுதி செய்வதாக அமைந்துள்ளது-" என்றார்.

## முச்சக்கரவண்டிச் சாரதிகளுக்காக புதிதாக அறிமுகப்படுத்தியுள்ள 'Orient டுக் லீசிங்'



தினசரி பல மில்லியன் இலங்கையர்களுக்கு சிக்கனமான போக்குவரத்து வசதியை வழங்கும் இலங்கையின் போக்குவரத்துக் கட்டமைப்பில் மிகவும் முக்கிய பங்கைக் கொண்டுள்ள முச்சக்கர வண்டிகளைக் கொள்வனவு செய்வதற்காக ஒரியன்ட் பைனான்ஸ் புதிய லீசிங் திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது. Orient Tuk லீசிங் திட்டத்தினூடாக முச்சக்கர வண்டிச் சாரதிகளுக்கு முதலாவது மாத வாடகைத் தவணையை செலுத்துவதற்கு இரு மாத கால அவகாசம் வழங்கப்படுகிறது. அத்துடன், குறைந்த மாதாந்த தவணைகள் மற்றும் உயர்ந்த பெறுமதியைப் பெறுவதற்கான வாய்ப்பும் வழங்கப்படுகின்றது.

சாரதிகளுக்கு நிதிவசதியை கால தாமதமின்றி பெற்றுக் கொடுப்பதை உறுதிசெய்யும் வகையில் துரித அனுமதி வழங்கும் செயன்முறையும் பின்பற்றப்படுகிறது.

நாடு தொடர்ந்தும் பொருளாதார பின்னடைவிலிருந்து மீண்டு வரும் நிலையில், முச்சக்கர வண்டிச் சாரதிகள் எதிர்நோக்கும் சவால்களும் முழுமையாக மறைந்துவிடாத நிலையில், அவர்கள் நாளாந்தம் எதிர்கொள்ளும் நிதிச் சவால்களை கவனத்திற்கொண்டு அவற்றுக்கு சிறந்த முறையில் தீர்வைப் பெற்றுக்கொடுப்பதாக இந்த Orient Tuk லீசிங் திட்டம் அமைந்துள்ளது. சாரதிகளுக்கு ஏற்படக்கூடிய பழுதுபார்ப்புச் செலவுகள், வீடுகளில் எழக்கூடிய செலவுகள் மற்றும் பராமரிப்புச் செலவுகள் போன்ற பல அம்சங்களைக் கவனத்தில் கொண்டு இந்தத் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

## கடல் பாதுகாப்பில் முன்னணியில் திகழும் NDB வங்கி




NDB வங்கியானது நீருக்கடியில் தூய்மைப்படுத்துவதன் மூலம் கடல் பாதுகாப்பில் இணைந்துகொள்வதற்காக கிளீன் ஓஷன் ஃபோர்ஸ் லங்காவுடன் [Clean Ocean Force Lanka] கூட்டுச் சேர்ந்த முதலாவது உள்நாட்டு வங்கியாக மாறியுள்ளது. இன்றுவரை பார் ரீவ் பாதுகாக்கப்பட்ட கடல் பகுதி மற்றும் பார்பெரின் தீவுக்கு அருகிலுள்ள கிழக்கு கடற்கரையில் 3 முக்குளித்தல் [Dives] செயற்பாடுகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. ஆற்று நீரில் மூழ்குபவர்களைக் [Divers] கொண்ட அர்ப்பணிப்புள்ள குழுவானது ஆழ்கடல் முக்குளிப்பு செயற்பாடுகளை நடத்தி, சுற்றுச்சூழல் ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த இந்தப் பகுதிகளிலிருந்து 130 கிலோவுக்கும் அதிகமான தீங்கு விளைவிக்கும் கடல் கழிவுகளை வெற்றிகரமாக அகற்றியது.

NDB வங்கியின் நிலைத்தன்மை நிகழ்ச்சி நிரலின் கீழ் மேற்கொள்ளப்பட்ட இந்த முயற்சியானது, ஐக்கிய நாடுகள் சபையின் நிலையான அபிவிருத்தி இலக்கு 14 (நீருக்குக் கீழே வாழ்க்கை) - கடல் வளங்களைப் பாதுகாத்தல் மற்றும் நிலையான முறையில் முகாமைத்துவம் செய்தல் திட்ட முயற்சியை நேரடியாக ஆதரிக்கிறது.

கிளீன் ஓஷன் ஃபோர்ஸ்[Clean Ocean Force], ஏர்த் லங்கா[Earth Lanka] மற்றும் கல்பிட்டி டைவ் சென்டரைச்[Kalpitiya Dive Cente]சேர்ந்த நிபுணர்களைக் கொண்ட நீரில் மூழ்கும் குழுவினர் [dive team] கடற்கரைக்கு வெளியே உள்ள அசுத்தமான சூழ்நிலைகளைச் துணிச்சலுடன் அகற்றினர்.

- கடல்வாழ் உயிரினங்களுக்கு ஆபத்தான அச்சுறுத்தலை ஏற்படுத்தும் 90 கிலோ நிறையுடைய கோஸ்ட் வலைகள்
- கடல் சுற்றுச்சூழல் அமைப்புகளை சிதைக்கும் 38 கிலோ நிறையுடைய பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் கழிவுகள்
- மீன்கள் தொகை மற்றும் பவளப்பாறைகளுக்கு ஏற்படும் அச்சுறுத்தலைக் குறைக்கும் 5 கிலோ நிறையுடைய கைவிடப்பட்ட மீன்பிடி கொக்கிகள் ஆகியன இச்செயற்பாடுகள் மூலம் அகற்றப்பட்டுள்ளன.

## யாழ்ப்பாணத்தில் தனது ஏழாவது மருந்து விநியோக மையத்தைத் திறக்கும் Healthguard Distribution




இலங்கையின் ஒரேயொரு முழுமையாக வளர்ச்சியடைந்த தேசிய மருந்து விநியோக நிறுவனமான Healthguard Distribution, தனது ஏழாவது பிராந்திய விநியோக மையத்தை (RDC) அண்மையில் யாழ்ப்பாணத்தில் திறந்து வைத்தது. இந்த மையம் யாழ்ப்பாண நகரத்தி லிருந்து 3 கிலோமீற்றர் தொலைவில், 414, பலாலி வீதி, கோண்டாவில், யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ளது. இந்த இடம் அனைத்து முக்கிய வீதிகளுக்குமருகில் உள்ளதால் மக்களுக்கு எவ்வித தங்கு தடையுமின்றி மருந்துகளை விநியோகிப்பதையும் வழங்குவதையும் எளிதாக்குகிறது.

பல ஆண்டுகளாக வட மாகாணத்தில் சேவை செய்து வரும் Healthguard Distributionக்கு, இப்பிராந்தியத்தின் சுகாதாரத் தேவைகள் மற்றும் பொருளாதார வளர்ச்சியின் போக்குகள் பற்றி நல்ல புரிதல் உள்ளது. அனைத்து ஒழுங்குமுறை விதிகளுக்கும் அமைய, யாழ்ப்பாணத்தில் புதிதாகத் திறக்கப்பட்டுள்ள இந்த விநியோக மையம், விநியோக சங்கிலியை வலுப்படுத்தவும் சேவைகளை மேம்படுத்தவும் மேலும் இப்பிராந்தியத்துக்கு சிறந்த சுகாதார வசதிகள் மற்றும் முன்னேற்றத்துக்கான நீண்டகால ஒத்துழைப்பை வழங்கும் நிறுவனத்தின் உறுதியான படியாக இது உள்ளது.

## எதிர்காலக் கல்விப் பயணத்தை வெற்றிகரமாக்க SLIIT வழங்கும் முதுதத்துவமானி (M.phil) - கலாநிதிப் பட்டம் (Phd)





SLIIT இனால் வழங்கப்படும் முதுதத்துவமானி (Master of Philoso phy -MPhil) மற்றும் கலாநிதிப்பட்ட (Doctor of Philosophy - PhD) பாடநெறிகள் மூலம் தமது ஆய்வுகள் மற்றும் தொழில்சார் விருப்பத்தை நிறைவேற்றுவதற்கு எதிர்பார்த்திருக்கும் மாணவர்கள் மற்றும் தொழில்சார் நிபுணர்களிடமிருந்து SLIIT இன் வணிகப் பிரிவு விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளத் தொடங்கியுள்ளது.

SLIIT இல் காணப்படும் அதிநவீன வசதிகள், உலகளாவிய ரீதியில் புகழ்பெற்ற பேராசிரியர்களுடன் காணப்படும் தொடர்புகள் என்பன இளமானி மாணவர்கள் தங்கள் ஆராய்ச்சி மற்றும் தொழில்முறை திறன்களை சமூகத்துக்கு வெளிப்படுத்தும் நேர்மறையான கல்விச் சாதனைகளை அடைவதற்கு ஒரு சிறந்த சூழலை உருவாக்குகின்றன. இந்தப் பாடநெறிகளினூடாக இலங்கையில் அறிவு மற்றும் புத்தாக்கத்தை மேம்படுத்துவதில் SLIIT கொண்டிருக்கும் தொடர்ச்சியான அர்ப்பணிப்பு பறைசாற்றப்படுவதுடன், ஆர்வமுள்ள அறிஞர்கள் மற்றும் தொழில்துறை வல்லுநர்களுக்கு உலகத் தரம் வாய்ந்த கல்வி வாய்ப்புகளையும் இவை ஏற்படுத்திக் கொடுக்கின்றன.

SLIIT இன் முதுதத்துவமானி பட்டப்படிப்பு மற்றும் கலாநிதிப் பட்டப்படிப்பு என்பன பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தைப் பெற்றிருப்பதுடன், இப்பட்டங்களைத் தொடர விரும்புவோர் மேம்பட்ட ஆய்வுகளைத் தொடர்வதற்கும் அவர்களின் கல்வித் தகுதிகளை மிக உயர்ந்த மட்டத்துக்கு மேம்படுத்திச் செல்வதற்கும் இவை இணையற்ற வாய்ப்புகளை வழங்குகின்றன.

## கவர்ச்சிகரமான லீசிங் தெரிவுகளை வழங்க ஒன்றிணையும் கொமர்ஷல் வங்கி- மைக்ரோ நிறுவனம்




கொமர்ஷல் வங்கியானது மைக்ரோ கார்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தால் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட அல்லது பொருத்தப்பட்ட வாகனங்களுக்கு முழு வரிசைக்கும் கவர்ச்சிகரமான லீசிங் தெரிவுகளை வழங்குவதற்காக மைக்ரோ கார்ஸ் லிமிட்டெட் நிறுவனத்துடன் மூலோபாய பங்குடைமை ஒன்றை மேற்கொண்டுள்ளது.

இந்த பங்குடைமைக்கிணங்க இரு நிறுவனங்களும் லீசிங் வசதியில் வாகனங்களைக் கொள்வனவு செய்ய விரும்பும் வாடிக்கையாளர்களுக்கு சிறப்பு சலுகைகளை வழங்கவுள்ளன. இந்தப் பங்குடைமைக்கான ஒப்பந்த மானது மார்ச் 31, 2026 வரை நடைமுறையில் இருக்குமென்று வங்கி தெரிவித்துள்ளது.

இந்தச் சலுகைகள் இலங்கையில் மைக்ரோ கார்ஸ் நிறுவனத்தால் பிரதிநிதித்துவப் படுத்தப்படும் MG, Chery, Proton, KGM – SUV மற்றும் Higer சொகுசு பஸ்கள் உட்பட அனைத்து வர்த்தக நாமங்களுக்கும் பொருந்தும்.

இந்த ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் Chery Tiggo4Pro SUV விலையில் ரூ.50,000 விலைக்கழிவு, Proton Saga கார்களுக்கு முதல் ஆண்டு முழு காப்புறுதித் தொகை மற்றும் இரண்டு ஆண்டுகள் அல்லது 40,000 கி.மீ. சேவை பொதி இலவசமாக வழங்கப்படுவதுடன் Rexton Sports பிக்-அப்களை கொள்வனவு செய்யும் முதல் 50 வாடிக்கையாளர்களுக்கு இலவச பதிவு ஆகியவற்றை வழங்க மைக்ரோ கார்ஸ் உறுதியளித்துள்ளது.

## International Logistics & Movers (Pvt) Ltd இற்கு DIMO விடமிருந்து Tata SIGNA Prime Movers வாகனங்கள்



இலங்கையில் Tata Motors நிறுவனத்தின் ஒரேயொரு அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தரும் 85 வருடங்களுக்கும் மேலாக நாட்டில் வாகனங்கள் தொடர்பான விசேடத்துவம் கொண்ட நிறுவனமுமான DIMO, அண்மையில் 22 Tata SIGNA Prime Movers வாகனங்களை, முன்னணி போக்குவரத்து நிறுவனமான International Logistics & Movers (Pvt) Ltd (ILM) நிறுவனத்துக்கு வழங்கியிருந்தது.

இலங்கைச் சந்தையில் வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்பட்டதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட இந்த வணிக வாகனங்களின் விநியோகமானது இலங்கையின் வணிக வாகனத் துறையில் ஒரு முக்கிய மைல்கல்லைக் குறிக்கிறது. கடந்த நிதியாண்டில் மாத்திரம் 100 க்கும் மேற்பட்ட Tata Prime Movers வாகனங்கள் விற்பனை செய்யப்பட்டதன் மூலம், நாட்டின் Prime Movers வகை வாகனப் பிரிவில் முன்னணித் தெரிவாக DIMO மாற்றமடைந்துள்ளது.

களஞ்சியம், போக்குவரத்து, சுங்கத் தரகு, செயற்பாடு மற்றும் திட்டங்களுக்கான பொருட்கள் போக்குவரத்து தீர்வுகள் போன்றவற்றின் முக்கிய விநியோக நடவடிக்கைகளில் ஈடுபடும் ILM நிறுவனம், ஆரம்ப கட்டமாக கோரிய 22 Tata SIGNA Prime Movers வாகனங்களின் எண்ணிக்கையை உடனடியாக 50 ஆக விரிவுபடுத்தத் திட்டமிட்டுள்ளது.


## 160 பில்லியன் ரூபா பங்களிப்புடன் பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவளித்துள்ள Uber

Uber நிறுவனமானது, அதன் 2024ஆம் ஆண்டின் இலங்கை பொருளாதார தாக்க அறிக்கையின் பெறுபேறுகளை வெளியிட்டுள்ளது. இந்த அறிக்கையை உலகளாவிய கொள்கை ஆராய்ச்சி நிறுவனமான Public First தொகுத்துள்ளது. Uber மற்றும் Uber Eats என்பன இணைந்து, கடந்த வருடம் பொருளாதார நடவடிக்கைகளில் 160 பில்லியன் ரூபாவை எவ்வாறு பங்களித்தன என்பதை இந்த அறிக்கை எடுத்துக்காட்டுகின்றது. இது நெகிழ்வான வருவாய் வாய்ப்புகளை வழங்குவதில் அவர்களின் வளர்ந்து வரும் பங்களிப்பைச் சுட்டிக்காட்டுகின்றது. குறிப்பாக, பாதுகாப்பான, மலிவு விலையிலான போக்குவரத்துக்கான அணுகலை அவர்கள் எவ்வாறு விரிவுபடுத்துகின்றனர் மற்றும் உள்ளூர் வியாபார நிறுவனங்களுக்கு எவ்வாறு அதிக வாடிக்கையாளர்களை அடைய உதவுகின்றனர் என்பதையும் இந்த அறிக்கை எடுத்துக்காட்டுகின்றது.

கடந்த சில வருடங்களில் மக்கள் பயணம் செய்யும் முறை, உணவு, மளிகைப் பொருட்கள் மற்றும் ஏனைய விடயங்களை கொள்முதல் செய்யும் முறையை Uber மாற்றியுள்ளது. போக்குவரத்து மற்றும் விநியோக சேவைகளைப் பாதுகாப்பானதாகவும் அணுகக்கூடியதாகவும் மாற்றியதனூடாக இலங்கை நிதியியல் ரீதியில் நிச்சயமற்ற தன்மையிலிருந்து மீண்டுவரும் போது, பொருளாதாரத்தை வளர்த்தெடுப்பதற்கு இந்த நிறுவனம் உதவியது.

நேரடி வருவாய் மற்றும் அணுகல் தன்மைக்கப்பால் Uber இன் இருப்பு அனைத்து துறைகளிலும் பரந்த பொருளாதார நன்மையை வழங்குகின்றது. சேவைகளைப் பொறுத்தவரை அவை தனிப்பட்ட பயனாளர்களுக்கு அப்பாற்பட்டு





காணப்படுகின்ற நிலையில், அவை பரந்த பொருளாதாரத்துக்கு கூடுதல் ஆதாயங்களை உருவாக்குகின்றன. 2024ஆம் ஆண்டு Uber மற்றும் Uber Eats என்பன மேலதிக நுகர்வோர் வருமானமாக (உபரியாக) 338 பில்லியன் ரூபாக்களை உருவாக்கியது.

# இந்தியா - பாக். இடையே போர் மூளும் அபாயம்!

## போர்க் கப்பல்களை அழிக்கும் ஏவுகணை சோதனையில் இந்தியா



அரபிக்கடலில் இந்திய கடற்படை எதிரி நாடுகளின் போர்க் கப்பல்களை ஏவுகணை மூலம் அழிக்கும் சோதனையை வெற்றிகரமாக நிகழ்த்தியுள்ளது. இந்த வீடியோவை இந்திய கடற்படை வெளியிட்டுள்ளது.

பஹல்காம் படுகொலைகளை நிகழ்த்தியவர்கள் உலகத்தின் எந்த மூலையில் இருந்தாலும் அவர்களும், அவர்களுக்கு ஆதரவாக செயல்படுபவர்களும் நிச்சயம் தண்டிக்கப்படுவது உறுதி என பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

**பயங்கரவாதிகளுக்கு கடுமையான பதிலடி நிச்சயம்**

இந்நிலையில் மன் கி பாத் நிகழச்சியில் பிரதமர் மோடி ''பயங்கரவாதத் தாக்குதலால் இந்தியர்களின் இரத்தம் கொதிப்பதை என்னால் உணர முடிகிறது'' என தெரிவித்தார்.

மேலும், இந்த தாக்குதல் சம்பவம், பயங்கரவாதிகளுக்கு ஆதரவு அளிப்பவர்களின் பதற்றத்தை காட்டுகிறது. அவர்களின் கோழைத்தனத்தை வெளிப்படுத்துவதாக உள்ளது.

தாக்குதலில் ஈடுபட்டவர்களுக்கு கடுமையான பதிலடி கொடுக்கப்படும். பயங்கரவாதிகளும், அவர்களை வழிநடத்துபவர்களும், காஷ்மீரை மீண்டும் அழிவுப் பாதைக்கு கொண்டுசெல்ல விரும்புகின்றனர். எனவேதான் இப்படி ஒரு சதித்திட்டத்தை தீட்டி செயல்படுத்தியுள்ளனர். இத்தகைய சூழ்நிலையில் நமது தேசத்தின் மகத்தான மன உறுதியை நாம் வெளிப்படுத்தியாக வேண்டும்.

இந்த பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பிறகு, நாம் என்ன செய்கிறோம் என்று உலகம் நம்மை பார்த்துக் கொண்டிருக்கிறது. மொத்த நாடும் ஒரே குரலில் பேசிக் கொண்டிருப்பதை இந்த உலகம் பார்க்கிறது. அமைதி திரும்ப தொடங்கிய நேரத்தில், வளர்ச்சி பொறுக்காமல் காஷ்மீரை அழிக்க நினைக்கிறார்கள். பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் நமது ஒற்றுமையே பலம் - என்றார்.

இந்நிலையில் ஜம்மு காஷ்மீரில் பயங்கரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கை முடுக்கிவிடப்பட்டுள்ளன.

இதனால் இந்தியா - பாகிஸ்தான் இடையே எந்த நிமிடமும் போர் வெடிக்கும் சூழல் உருவாகியுள்ளது. இத்தகைய சூழ்நிலையில், இந்திய கடற்படைக்கு சொந்தமான போர்க் கப்பலிலிருந்து ஏவுகணையை ஏவி எதிரி நாடுகளின் போர்க் கப்பல்களை அழிக்கும் வகையிலான சோதனையை வெற்றிகரமாக செய்யப்பட்டுள்ளது.

இந்த வீடியோவை, இந்திய கடற்படை சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளது. அதில், நீண்டதூரம் சென்று துல்லியமாக எதிரிகளின் போர்க் கப்பல்களை தாக்கி அழிக்கும் மல்டிபிள் ஏவுகணை சோதனையை இந்திய கடற்படைக் கப்பல் மேற்கொண்டுள்ளது. கடல்சார் நலன்களை பாதுகாப்பதில் இந்தியா உறுதியாக இருக்கிறது. தேச நலனை காப்பதற்கான பணியில், எந்நேரத்திலும், எந்த தாக்குதலுக்கும் தயாராகவே இருக்கிறோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ட்ரம்ப் - ஸெலென்ஸ்கி மீண்டும் சந்திப்பு

## புட்டின் மீது கடும் அதிருப்தி





அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின்மீது கடும் அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளார்.

வத்திக்கானில் மறைந்த பாப்பரசர் பிரான்சிஸின் திருவுடல் நல்லடக்கம் மற்றும் இறுதிச் சடங்கில் பங்கேற்க சனிக்கிழமை (26) உலகத் தலைவர்கள் பலர் வருகை தந்திருந்தனர். இந்நிகழ்வில், உக்ரைன் ஜனாதிபதி வெலோடிமிர் ஸெலென்ஸ்கியும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பும் ஒரே நேரத்தில் கலந்துகொண்டிருப்பது முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. பாப்பரசர் இறுதிச்சடங்கில் பங்கேற்க வந்திருந்த இருவரும் நெடுநேரம் பேசிக் கொண்டனர்.

இந்த சந்திப்பைத் தொடர்ந்து, தமது 'ட்ரூத் சோஷியல்' சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ள ட்ரம்ப்,

''உக்ரைனில் நீடிக்கும் சண்டையை முடிவுக்குக் கொண்டு வருவதில் புட்டினுக்கு விருப்பம் இருக்கிறதா? இல்லையா? என்ற கேள்வியை எழுப்பியுள்ளார். உக்ரைனில் ரஷ்யா ஏவுகணைகள் மூலம் கடும் தாக்குதல்களை நடத்தியதையும் அவர் வன்மையாகக் கண்டித்துள்ளார். இதைத்தொடர்ந்து, ரஷ்யா மீது பொருளாதாரத் தடை கடுமையாக்கப்படும் என்று மறைமுகமாக எச்சரிக்கை விடுத்துள்ளார் ட்ரம்ப்.

நேட்டோ இராணுவக் கூட்டமைப்பில் இணைவதற்கு எதிர்ப்பு தெரிவித்து, உக்ரைன் மீது கடந்த 2022இல் படையெடுத்த ரஷ்யா இன்றுவரை தாக்குதல்களைத் தொடர்ந்து வருகிறது. ரஷ்யாவின் தாக்குதல்களுக்கு எதிர்வினையாக உக்ரைனும் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் ஆதரவுடன் சண்டையிட்டு வருகிறது. இந்த போரை முடிவுக்குக் கொண்டுவர, அமெரிக்கா ஜனாதிபதியாக கடந்த ஜனவரியில் பதவியேற்றுக்கொண்ட ட்ரம்ப் முனைப்பு காட்டி வருகிறார். இந்த நிலையில், உக்ரைனில் ரஷ்யா தாக்குதல்களை தொடர்வதால் போர் நிறுத்தம் இழுபறியாகியுள்ளது.

**உக்ரைன் மீது ட்ரோன் தாக்குதல் நடத்த ரஷ்யா திட்டம்**

இந்நிலையில் உக்ரைன் மீது ரஷ்யா ட்ரோன் தாக்குதல் நடத்தவுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

உக்ரைன் மீதான போர் விவகாரத்தில் ரஷ்ய ஜனாதிபதி புட்டின்மீது அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் அதிருப்தி தெரிவித்த நிலையில், உக்ரைன் மீது தாக்குதல் நடத்த, 150 ட்ரோன்களை ரஷ்யா தயாராக வைத்திருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

# இந்திய முப்படை தலைமை தளபதியுடன் பாதுகாப்பு அமைச்சர் ஆலோசனை



காஷ்மீரில் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்திய சூழ்நிலையில், டில்லியில் மத்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங்கை நாட்டின் முப்படைத் தலைமை தளபதி அனில் சவுகான், எல்லை பாதுகாப்பு படை (பிஎஸ்எப்) தலைவர் தல்ஜித் சிங் சவுத்ரி ஆகியோர் சந்தித்து ஆலோசனை நடத்தினர்.

காஷ்மீரின் பஹல்காமில் நடந்த பயங்கரவாதத் தாக்குதலில் 26 சுற்றுலா பயணிகள் கொல்லப்பட்டனர். இதன் பின்னணியில் பாகிஸ்தான் உள்ளமை அம்பலமானது. இதனையடுத்து, அந்நாடு மீது கடும் நடவடிக்கை எடுத்துள்ள இந்திய மத்திய அரசு சிந்து நதிநீர் ஒப்பந்தத்தை இரத்து செய்தது. மேலும் இந்தியாவில் தங்கியுள்ள பாகிஸ்தானியர்கள் உடனடியாக நாட்டைவிட்டு வெளியேறும்படி உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த கொடூர தாக்குதல் நடத்தியவர்கள் மீது நிச்சயம் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதமர் மோடி உறுதியளித்துள்ளார். அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து மத்திய அரசு ஆலோசனை நடத்தி வருகிறது. முப்படைகளும் தயார் நிலையிலுள்ளனர்.



# காலக்கெடு நிறைவு; கண்ணீருடன் அட்டாரி வழியாக வெளியேறிய பாகிஸ்தானியர்!





இந்தியாவில் தங்கியிருக்கும் பாகிஸ்தானியர்கள் நாட்டைவிட்டு வெளியேறுவதற்கான காலக்கெடு நேற்றுடன் (27) நிறைவடைந்த நிலையில், அட்டாரி வழியாக பாகிஸ்தானியர்கள் சொந்த நாடு திரும்பி வருகின்றனர்.

பஹல்காமில் கடந்த செவ்வாய்க்கிழமை (ஏப்.22) நடந்த கொடூரத் தாக்குதலில் 26 பேர் கொல்லப்பட்ட நிலையில் இந்தியா, பாகிஸ்தானியர்களுக்கான விசாக்களை இரத்து செய்வது உள்ளிட்ட முக்கிய முடிவுகளை எடுத்தது. அதன்படி சார்க் விசாக்கள் ஏப்ரல் 26ஆம் திகதி நிறைவடைந்தது. ஏனைய விசாக்கள் நேற்றுடன் (27) நிறைவடைந்தன. மருத்துவ விசாக்கள் மட்டும் ஏப்ரல் 29ஆம் திகதிவரை செல்லுபடியாகும். இந்த முடிவுகளால் இரு நாடுகளுக்கும் இடையே பதற்றம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்தியாவில் தங்கியிருந்த பாகிஸ்தானியர்கள் வெளியேறுவதற்கான காலக்கெடு நேற்றுடன் நிறைவடைந்த நிலையில், பாகிஸ்தானியர்கள் அமிர்தரஸிலுள்ள வாகா - அட்டாரி சோதனைச் சாவடி வழியாக வெளியேறி வருகின்றனர்.

# இந்தியாவை தாக்க 130 அணு ஆயுதங்கள் தயார் நிலையில்

## பாகிஸ்தான் அமைச்சர் மிரட்டல்



''கோரி, ஷாஹீன், கஸ்னவி ஏவுகணைகள் மற்றும் 130 அணு ஆயுதங்கள் இந்தியாவை தாக்க தயாராகவுள்ளன'' என பாகிஸ்தான் அமைச்சர் ஹனிஃப் அப்பாஸி தெரிவித்துள்ளார். அந்த ஆயுதங்கள் இந்தியாவுக்காக மட்டுமே நாட்டின் பல்வேறு பகுதிகளில் வைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

காஷ்மீரின் பஹல்காம் தாக்குதலால் இந்தியா - பாகிஸ்தான் உறவில் விரிசல் ஏற்பட்டு போர் மூளும் அபாயம் ஏற்பட்டுள்ள நிலையில், பாகிஸ்தான் அமைச்சர் ஹனிஃப் அப்பாஸி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"பாகிஸ்தானுக்கு தண்ணீர் வழங்குவதை நிறுத்தினால், அவர்கள் போருக்கு தயாராக இருக்க வேண்டும். எங்களிடம் உள்ள இராணுவ உபகரணங்கள், ஆயுதங்கள், அணு ஆயுதங்கள் மற்றும் ஏவுகணைகள் வெறும் கண்காட்சிக்கானது அல்ல. நாடு முழுவதும் பல்வேறு இடங்களில் 130 அணு ஆயுதங்கள் வைக்கப்பட்டுள்ளன. அவை எங்கு உள்ளன என்று யாருக்கும் தெரியாது. இந்த அணு ஆயுதங்கள் அனைத்தும் இந்தியாவை மட்டுமே குறிவைத்து நிறுத்தப்பட்டுள்ளன" எனத் தெரிவித்துள்ளார்.

எல்லை தாண்டிய தீவிரவாதத்துக்கு ஆதரவு அளிப்பதை பாகிஸ்தான் நிறுத்தும் வரை, இந்தியா- பாகிஸ்தான் இடையே 1960 ஆண்டு செய்துகொண்ட சிந்து நதிநீர் ஒப்பந்தம் நிறுத்தி வைக்கப்படுவதாக மத்திய அரசு அறிவித்தது. இதன் காரணமாக பாகிஸ்தானில் நீர் தட்டுப்பாடு ஏற்படும் நிலை உருவாகியுள்ளது.

# எவரும் இனி பொய் சொல்லி ஆட்சிக்கு வர முடியாது!

## த.வெ.க. தலைவர் விஜய் ஆவேசம்






''இனி, யாரும் பொய் சொல்லி ஆட்சிக்கு வர முடியாது; அவ்வாறு நடக்க விடப்போவதில்லை என, தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் தெரிவித்துள்ளார்.

த.வெ.க., கட்சியில் அமைத்துள்ள வாக்குச்சாவடி முகவர்களுக்கான கருத்தரங்கு, கோவையில் நேற்று முன்தினம் (26) நடைபெற்றது.

தனி விமானம் மூலம் கோவைக்குச் சென்ற விஜய்க்கு கட்சித் தொண்டர்கள் மேளதாளம் முழங்க உற்சாக வரவேற்பளித்தனர். விமான நிலைய நுழைவுவாயில் பகுதியிலிருந்து அவிநாசி சாலை வரை ஏராளமானோர் திரண்டிருந்தனர். வீதியின் இருபுறங்களிலும் தொண்டர்கள் மட்டுமின்றி, குழந்தைகள், பெண்கள், முதியோர் என அனைத்துத் தரப்பினரும் குவிந்திருந்தனர். இதனால் விமான நிலையம், சிட்ரா பகுதி மற்றும் நிகழ்ச்சி நடைபெற்ற எஸ்.என்.எஸ். கல்லூரி அமைந்துள்ள பகுதிகளில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

இந்நிலையில் கருத்தரங்கில் கலந்துகொண்ட கட்சியின் தலைவரான விஜய் அங்கு உரையாற்றுகையில்,

''இங்கு நடப்பது பூத் லெவல் பயிற்சி பட்டறை. கட்சியினரை தேர்தலுக்கு தகுதிப்படுத்துவதற்காக நடத்தப்படும் நிகழ்வு. வாக்குக்காக நடத்தப்படும் நிகழ்ச்சியாக இதை பார்க்கக்கூடாது.

ஆட்சி அதிகாரம் என்றாலே வாக்கு சம்பந்தப்பட்டது தான். இருந்தாலும், ஆட்சிக்கு வந்து மற்றவர்கள் போல் நாம் இருக்கப்போவதில்லை. நாம் ஆட்சிக்கு வர வேண்டும் என நினைப்பது மக்கள் நலனுக்காக மட்டுமே.

மக்களிடம் இருந்து எப்படி வாக்கு வாங்கப் போகிறோம் என்பது ஒருபக்கம் இருந்தாலும், மக்களுடன் எப்படி கனெக்ட்டாகி(தொடர்பில்) இருக்கப்போகிறோம் என்பது தான், இப்போதைக்கு நம் பிரதான ஆலோசனை.

இதற்கு முன்னர் நிறைய பேர் நிறைய பொய் சொல்லியிருக்கலாம்; மக்களை ஏமாற்றி இருக்கலாம். இப்படியெல்லாம் சொல்லி ஆட்சியையும் பிடித்திருக்கலாம். இனிமேல் அப்படி நடக்காது; நடக்க விடமாட்டோம்.

நம் கட்சி மீது, மக்களிடம் பெரிய நம்பிக்கையை ஏற்படுத்தப்போவதே, பூத் லெவல் ஏஜன்டான நீங்கள் தான். நீங்கள் ஒவ்வொருவரும் போர் வீரனுக்கு சமமானவர்கள்.

நீங்கள் மக்களிடம் செல்லும்போது, உங்களுக்கு என்ன அரசியல் அனுபவம் இருக்கிறது என, மக்கள் கேட்பர். கறை படியாத அரசியலுக்கு சொந்தக்காரர்கள் நாங்கள்; எங்களிடம் நேர்மை, இலட்சியம் இருக்கிறது. உழைக்க தெம்பு இருக்கிறது என்பதை தெளிவாக எடுத்துச் சொல்ல வேண்டும். மக்கள் உங்களை கட்டாயம் நம்புவர் - இவ்வாறு விஜய் தெரிவித்துள்ளார்.

# கதிர்காமம் மாணிக்க கங்கையில் நீராடிக் கொண்டிருந்த நபர் நீரில் அடித்துச்செல்லப்பட்ட நிலையில் சடலமாக மீட்பு

## முன்னறிவித்தலின்றி வேரகல நீர்த்தேக்கத்தின் வான்கதவுகள் திறக்கப்பட்டமையால் சம்பவம்

**(பொகவந்தலாவை நிருபர்)**

புத்தள, வேரகல நீர்த்தேக்கத்தின் வான்கதவுகள் எவ்வித முன் அறிவித்தலுமின்றி திறக்கப்பட்டமையினால் கதிர்காமம் மாணிக்க கங்கையில் நீர்மட்டம் அதிகரித்ததைத் தொடர்ந்து மாணிக்க கங்கையில் நீராடிக் கொண்டிருந்த நபர் ஒருவர் நீரில் அடித்துச்சென்று சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக கதிர்காமம் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் (26) சனிக்கிழமை இடம்பெற்றதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்ட நபர் புதிய வாகனம் ஒன்றை கொள்வனவுசெய்து தனது நேர்த்திக் கடனுக்காக கதிர்காமம் முருகன் ஆலயத்துக்குச் சென்றிருந்த வேளை குறித்த நபர் மாணிக்ககங்கையில் நீராடிக் கொண்டிருந்தபோதே நீரின் வேகம் அதிகரித்து அள்ளுண்டு சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சடலமாக மீட்கப்பட்டவர் ஹட்டன் பகுதியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான 52 வயதுடைய பழனி லோகேஸ்வரன் என அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

பொலிஸார் மற்றும் பொதுமக்களின் உதவியோடு மீட்கப்பட்ட சடலம் கதிர்காமம் பிரதேச வைத்திய சாலையிலிருந்து சட்ட வைத்திய அதிகாரியின் பிரேத பரிசோதனைக்காக ஹம்பாந்தோட்டை மாவட்ட வைத்திய சாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதோடு, பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்படவுள்ளதாக கதிர்காமம் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இதேவேளை, எவ்வித முன்னறிவித்தலுமின்றி வேரகல நீர்த் தேக்கத்தின் வான் கதவுகள் திறக்கப் பட்டமை தொடர்பாக நீர்த்தேக்கத்தின் பொறியியலாளர் மீது பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# தேசிய மக்கள் சக்தியின் அமைப்பாளரிடம் மன்னிப்பு கோரிய இ.தொ.கா. உறுப்பினர்

**(பொகவந்தலாவை நிருபர்)**

தேசிய மக்கள் சக்தியின் பொகவந்தலாவை மாவட்ட அமைப்பாளரிடம் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உறுப்பினர் ஒருவர் பொகவந்தலாவை பொலிஸ் நிலையத்தில் வைத்து மன்னிப்பு கோரியுள்ளதாக பொகவந்தலாவை பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரசாரக் கூட்டமொன்று கடந்த வாரம் தலவாக்கலை நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது. இந்த கூட்டத்துக்கு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க கலந்துகொண்டிருந்த வேளையில், தேசிய மக்கள் சக்தியின் பொகவந்தலாவை பிரதேச அமைப்பாளர் குறித்த கூட்டத்தில் உரையாற்றியது சமூக ஊடகங்களில் பேசப்பட்டு வந்தது.


இந்த காணொளியை பார்வையிட்ட இ.தொ.காவின் உறுப்பினர் ஒருவர் கொழும்பிலிருந்து பொகவந்தலாவை பகுதிக்கு வந்து மூன்று மதுபானசாலைகளில் மது அருந்திவிட்டு மதுபோதையில் குறித்த பெண் அமைப்பாளரை தொலைபேசி ஊடாக தொடர்புகொண்டு தகாத வார்த்தைப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பாக குறித்த பெண் அமைப்பாளர் பொகவந்தலாவை பொலிஸ் நிலையத்தில் பதிவுசெய்த முறைப்பாட்டுக்கமைய குறித்த நபர் கைதுசெய்யப்பட்டு, பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் மன்னிப்பு கோரியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# நானுஓயாவில் குடும்பஸ்தரொருவர் 60 அடி மரத்திலிருந்து தவறி விழுந்து பலி

## பொன்னர் சங்கர் நாடகத்தின்போது அசம்பாவிதம்





**(செ.திவாகரன்)**

நானுஓயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நானுஓயா கிளாசோ தோட்டத்தில் தமிழர் வரலாற்றை கூறும் 'பொன்னர் சங்கர்' நாடகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை (27) அதிகாலை 60 அடி உயரம் கொண்ட கம்ப மரத்தில் ஏறும்போது தவறி விழுந்தவர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் நானுஓயா கிளாசோ தோட்டத்தைச் சேர்ந்த முருகன் சதாசிவம் (வயது 63) என்பவர் எனவும் இவர் பொன்னர் சங்கர் கூத்து நாடகத்தில் பெரிய அண்ணன் என்ற கதாபாத்திரத்தில் வேடமிட்டவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

குறித்த பொன்னர் சங்கர் வரலாற்று நாடக நிகழ்ச்சி நேற்று முன்தினம் (26) இரவு ஆரம்பிக்கப்பட்டு நேற்று (27) காலை வரை இடம்பெறவிருந்த நிலையில் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நானுஓயா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# எல்பட தோட்டப்பகுதிக்கு செல்லும் பிரதான தொங்கு பாலத்தை புனரமைத்து தரவேண்டும்

## பொது மக்கள் கோரிக்கை

**(பொகவந்தலாவ நிருபர்)**


நோர்வூட் பிரதேச சபைக்குட்பட்ட நோர்வூட் எல்பட தோட்டப்பகுதி மக்கள் போக்குவரத்துக்காக பயன்படுத்தும் தொங்கு பாலம் சேதமடைந்து காணப்படுகின்றமை தொடர்பாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க கவனமெடுத்து பாலத்தை புனரமைத்து தருமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நோர்வூட் எல்பட கீழ்பிரிவு மற்றும் மேல்பிரிவு ஆகிய தோட்டப் பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் நாளாந்தம் குறித்த வீதியையே பயன்படுத்தி வருகின்றனர்.

நாட்டில் பலதரப்பட்ட அரசியல் மாற்றங்கள் இடம்பெற்றாலும் இந்தப் பாலத்தினை புனரமைப்பதற்கு எவரும் முன்வரவில்லை.

கடந்த காலங்களில் நோர்வூட் பிரதேச சபை ஊடாக 13 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் பாலத்தை புனரமைப்பதாகக்கூறி வெறுமனே வாகை பலகையைக் கொண்டு அமைத்துள்ளார்கள். இந்த பாலம் நீண்டகாலமாக பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றமையால் கடந்த காலங்களில் உயிர்ச்சேதங்கள் ஏற்பட்ட சம்பவங்களும் பதிவாகியிருக்கின்றன.

நோர்வூட் தேசிய கல்லூரி மற்றும் ஹலன்ஸ் கல்லூரி, பொகவந்தலாவை சென்மேரீஸ் தேசிய கல்லூரி ஆகிய பாடசாலைகளுக்கு செல்லும் பாடசாலை மாணவர்களும் நாளாந்தம் இந்த தொங்கு பாலத்தையே பயன்படுத்தி வருகின்றனர். இந்த பாலத்தில் பொருத்தப்பட்டிருக்கும் பலகைகள் உக்கிய நிலையில் காணப்படுவதாக மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.


இதுவரை காலமும் மலையகத்தில் எந்தவொரு அரசியல்வாதிகளும் இந்த தொங்கு பாலம் குறித்து அக்கறை செலுத்தவில்லை. இந்த தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கத்தின் ஊடாகவாவது எமது தோட்ட மக்கள் நாளாந்தம் பயன்படுத்தும் இந்த தொங்கு பாலத்தினை கொங்கிரீட் பாலமாக மாற்றியமைக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# சாவகச்சேரியில் தமிழரசு கட்சியின் பிரசாரக் கூட்டம்

**(சாவகச்சேரி நிருபர்)**

இலங்கை தமிழரசுக் கட்சியின் மாபெரும் பிரசார கூட்டம் நேற்று முன்தினம் (26) பிற்பகல் சாவகச்சேரி பஸ் தரிப்பிட வளாகத்தில் கட்சியின் சாவகச்சேரி தொகுதிக்கிளைத் தலைவர் கே.சயந்தன் தலைமையில் இடம்பெற்றிருந்தது.



மேற்படி நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இ.சாணக்கியன், கட்சியின் பொதுச்செயலாளர் சுமந்திரன், கட்சியின் தலைவர் சி.வி.கே சிவஞானம், தமிழரசுக் கட்சியின் சாவகச்சேரி தொகுதிக்கிளை செயலாளர் ச.தங்கராசா மற்றும் சாவகச்சேரி நகரசபையின் முன்னாள் தவிசாளர் இ.சிவமங்கை ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.



மேலும் சாவகச்சேரி நகர மற்றும் பிரதேச சபைகளுக்கான வேட்பாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# தனியாருக்கு வழங்கப்பட்டிருந்த திக்கம் வடிசாலையை மீளவும் தொழில்துறை சார்ந்தவர்களிடம் வழங்க தீர்மானம்

**(சாவகச்சேரி நிருபர்)**

கடந்த அரசாங்கத்தால் முறைகேடான விதத்தில் தனியாருக்கு தாரை வார்க்கப்பட்ட திக்கம் வடிசாலையை மீளவும் அந்தந்த பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கங்களிடமும் தொழில்துறை சார்ந்தவர்களிடமும் வழங்க பனை அபிவிருத்திச் சபையின் பணிப்பாளர் சபை தீர்மானம் ஒன்றினை நிறைவேற்றியிருந்தது.

மேற்படி மகிழ்ச்சிகரமான தீர்மானத்தை வடமராட்சி பனை தென்னை வள கூட்டுறவுச்சங்கங்களுக்கு தெரியப்படுத்தும் முகமாகவும் திட்டமிட்டு மறைக்கப்பட்ட திக்கம் வடிசாலையின் பெருமையை இளைய தலைமுறையினர் அறிந்து கொள்ள ஏதுவாகவும் கடந்த வெள்ளிக்கிழமை (25) காலை பனை அபிவிருத்திச்சபையின் தலைவர் வி.சகாதேவன் கைதடியில் அமைந்துள்ள பனை அபிவிருத்திச்சபை அலுவலகத்திலிருந்து திக்கம் வடிசாலை வரை விழிப்புணர்வு நடைபயணம் ஒன்றினை முன்னெடுத்திருந்தார்.

இது தொடர்பாக பனை அபிவிருத்திச்சபையின் தலைவர் வி.சகாதேவன் கருத்துத் தெரிவிக்கையில்,

25 வருட காலமாக திக்கம் வடிசாலை விவகாரம் பேசு பொருளாகவும் அரசியல் மயப்படுத்தப்பட்டும் வருகின்றது. இன்றுள்ள இளம்தலைமுறைக்கு திக்கம் என்றால் என்னவென்று தெரியாமல் மறைக்கப்பட்டு ஒரு சமுதாயத்தினுடைய எழுச்சி ஒடுக்கப்பட்டுள்ளது. திக்கம் வடிசாலை விவகாரம் மக்கள் மயப்படுத்தப்பட்டு 25வருடங்கள் கடந்துவிட்டன. கடந்த காலங்களில் உரிய தீர்வுகள் எவையும் எட்டப்படவில்லை.




இன்று திக்கம் வடிசாலையை மீள இயக்கத் தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கும்போது அதன் சொத்தாக பழைய போத்தல் மூடிகளும் எஞ்சியுள்ள ஸ்டிக்கர்களும் மாத்திரமே உள்ளன.

அதனை விட கவலைக்குரிய விடயம் கடந்த காலத்தில் முறைகேடான ஒப்பந்தம் ஊடாக பனை அபிவிருத்திச்சபை நிர்வாகத்தினால் திக்கம் வடிசாலை தனியாருக்கு தாரைவார்க்கப்பட்டுள்ளது.

சமுதாயத்துக்கு கிடைக்க வேண்டிய நன்மை அடுத்த சில தசாப்தங்களுக்கு இல்லாமல் செய்யப்பட்டு தனியாருக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்ட பின்னர் பனை அபிவிருத்திச்சபையின் பணிப்பாளர்சபை திக்கம் வடிசாலையை மீளவும் அந்தந்த சங்கங்களுக்கும் தொழில்துறை சார்ந்தவர்களுக்கும் வழங்குவதென ஒரு தீர்க்கமான முடிவினை கடந்த சில நாட்களுக்கு முன்னர் எடுத்துள்ளது.

கடந்த 2000ஆம் ஆண்டு திக்கம் வடிசாலையை இயக்குவது இலகுவாக இருந்தது. ஆனால் இன்று அவ்வாறில்லை. பல சவால்கள் உள்ளன. பல சட்ட சிக்கல்கள் உள்ளன. திக்கம் வடிசாலையை தனியாருக்கு வழங்கிய ஒப்பந்தத்தில் உள்ள தவறான விடயங்களை அணுகி உரிய ஆலோசனை பெற்று பணிப்பாளர் சபை அந்த ஒப்பந்தத்தை இரத்துச் செய்துள்ளது.

அந்த நல்ல செய்தியை வடமராட்சி பனை தென்னை வள கூட்டுறவுச்சங்கங்களின் கொத்தணியிடம் தெரியப்படுத்தவே இந்த நடைபயணம் மேற்கொள்ளப்படுகின்றது.

அத்துடன் இன்றைய தலைமுறைக்கு திக்கம் என்றால் என்னவென்று தெரியாது. மிக முக்கியமாக திக்கம் வடிசாலையை நம்பியுள்ள தொழிலாளர்கள் மீளவும் எழுச்சி பெற வேண்டும் என்ற நோக்கத்துக்காக இந்த வேலைத்திட்டத்தினை முன்னெடுக்கின்றோம்.

கடந்த காலத்தில் வடமாகாணத்தின் பிரதான வருவாயை ஈட்டித்தரும் வருமான மார்க்கமாக திக்கம் வடிசாலை இருந்தது. 15ஆயிரம் தொழிலாளர்கள் வரை தொழிலில் ஈடுபட்டனர். இன்று அந்த தொழிலாளர்கள் எண்ணிக்கை இலட்சங்களில் இருந்திருக்க வேண்டும். ஆனால் அந்த தொழிலாளர்களுடைய எண்ணிக்கை சில நூற்றுக்கணக்காக சுருங்கிவிட்டமை கவலைக்குரிய விடயம்.

நாம் கடந்த தைப்பூச தினத்தன்று திக்கம் வடிசாலையை மீள திறப்பதாக உறுதியளித்திருந்தோம். இருப்பினும் சில நிர்வாக ரீதியான நடைமுறைகள் மற்றும் சட்ட சிக்கல் காரணமாக சற்று தாமதமாகியுள்ளது.

மேலும் நாம் சில சட்டரீதியான விடயங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. அதற்கு மக்களுடையதும் கொத்தணிகளுடையதும் ஒத்துழைப்பு நிச்சயமாக இருக்கும் என எதிர்பார்க்கிறேன் - என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

# உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளில் சாதனை படைத்த இரட்டையர்கள்

## மாவட்ட மட்டத்தில் முதலிடம்




2024ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில், யாழ். இந்துக் கல்லூரியைச் சேர்ந்த இரண்டு மாணவர்கள் மாவட்ட மட்டத்தில் முதல் இரு இடங்களைப் பெற்றுள்ளனர்.

மேலும் குறித்த இருவரும் தேசிய மட்டத்தில் 3ஆம் மற்றும் 5ஆம் இடங்களைப் பெற்றுள்ளனர்.

சி.ஜமுனானந்தா பிரணவன் (முதலாம் இடம்) மற்றும் சி.ஜமுனானந்தா சரவணன் (இரண்டாம் இடம்) ஆகிய இருவருமே இவ்வாறு உயர்தரத்தில் சாதனை படைத்துள்ளனர்.

# பாகிஸ்தானை இந்தியாவுடன் ஒரே குழுவில் இணைக்க வேண்டாம்

## வருமானத்தில் பாதிப்பை ஏற்படுத்தும் பி.சி.சி.ஐ இன் கோரிக்கையை ஏற்குமா ஐ.சி.சி?

ஜம்மு - காஷ்மீரின் அனந்த்நாக் மாவட்டத்தில் உள்ள பஹல்காமில் கடந்த வாரம் பாகிஸ்தான் தீவிரவாதிகள் என சந்தேகிக்கப்படும் சிலர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 26 இந்தியர்கள் பரிதாபமாக உயிரிழந்ததன் எதிரொளியாக ஐ.சி.சி தொடர்களில் இந்தியா - பாகிஸ்தானை ஒரே குழுவில் சேர்க்க வேண்டாம் என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை ஐ.சி.சிக்கு கடிதம் எழுதியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

2008ஆம் ஆண்டு மும்பையில் ஏற்பட்ட வெடிகுண்டு தாக்குதலுக்குப் பிறகு இந்திய அணி, பாகிஸ்தானுக்குச் சென்று விளையாடுவதை முற்றிலுமாகத் தவிர்த்துவிட்டது. மேலும், அண்மையில் பாகிஸ்தானில் நடைபெற்ற சம்பியன்ஸ் தொடரிலும் இந்திய அணி விளையாட மறுத்ததால், இந்தியாவுக்கான போட்டிகள் மட்டும் டுபாயில் நடத்தப்பட்டன.

இந்நிலையில், பாகிஸ்தான் தீவிரவாதிகளின் துப்பாக்கிச் சூட்டைக் கண்டித்து இனி எந்த இருதரப்பு கிரிக்கெட் தொடர்களிலும் பாகிஸ்தானுடன் மோதப் போவதில்லை என்று பி.சி.சி.ஐ உப தலைவர் ராஜீவ் சுக்லா தெரிவித்துள்ளார். இதுகுறித்து ஐ.சி.சி. தரப்பில் எந்தத் தகவல்களும் வெளியாகவில்லை.

இந்தியா - பாகிஸ்தான் போட்டிகளுக்கான விளம்பர வருமானத்தை வைத்துதான் ஒளிபரப்பு உரிமம் மிகப்பெரிய தொகைக்கு விற்கப்படுவது குறிப்பிடத்தக்கது.




## வெளியேறிய முன்னாள் சம்பியன் சி.எஸ்.கே.




நடப்பு தொடரில் 9ஆவது லீக் போட்டியில் 7ஆவது தோல்வியை சந்தித்த 05 தடவை சம்பியன் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி ப்ளேஓப் சுற்று வாய்ப்பை இழந்தது. இதுவரையில் வெறும் 04 புள்ளிகளுடன் புள்ளிப் பட்டியலில் கடைசி இடத்தில் உள்ள சென்னை அணியின் ப்ளேஓப் சுற்று வாய்ப்பு முடிவுக்கு வந்துவிட்டது.

எதிர்வரும் 05 போட்டிகளிலும் வெற்றி பெற்றாலும் சென்னை அணியால் 14 புள்ளிகள் மட்டுமே பெற முடியும். அதுவும் நல்ல ரன்ரேட் விகிதத்தில் வெற்றி பெற வேண்டும். அத்துடன் மற்ற அணிகளின் முடிவும் சென்னை அணிக்கு சாதகமாக அமைய வேண்டும். அவ்வாறு நடந்தால் மட்டுமே சென்னை அணியால் ப்ளேஓவ் சுற்றுக்கு முன்னேற முடியும்.

இதனால் இந்த சீசனில் சென்னை அணி ஏறக்குறைய ப்ளேஓவ் வாய்ப்பை இழந்துவிட்டது. இதனால் 6ஆவது சம்பியன் பட்டத்தை சென்னை அணி வெல்லும் என்று எதிர்பார்த்த ரசிகர்களின் கனவு உடைந்துவிட்டது.

# முக்கோண ஒருநாள் தொடரின் சம்பியனான இலங்கை ஏ அணி



ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெற்ற இலங்கை, அயர்லாந்து மற்றும் ஆப்கானிஸ்தான் ஏ அணிகள் மோதிய முக்கோண ஒருநாள் தொடரின் இறுதிப் போட்டியில் இலங்கை ஏ அணி சம்பியன் பட்டம் வென்றது.

தொடரின் லீக் போட்டிகளின் அடிப்படையில் தோல்வியுறாத இலங்கை ஏ மற்றும் அயர்லாந்து ஏ அணிகள் இறுதிப் போட்டிக்கு தெரிவாகின. வெள்ளிக்கிழமை அபுதாபியில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் நாணய சுழற்சியில் வென்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பை தெரிவு செய்த முதலில் துடுப்பாடிய அயர்லாந்து அணியானது 47.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 200 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

201 ஓட்டங்களை அடைய பதிலுக்கு ஆடிய இலங்கை அணியானது 34.3 ஓவர்களில் 05 விக்கெட்டுகளை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. போட்டியின் ஆட்டநாயகனாக இலங்கை ஏ அணியின் மிலான் ரத்நாயக்க தெரிவானார்.

## உலக தடகள அஞ்சலோட்டத்தில் பங்கேற்கும் இலங்கை அணி அறிவிப்பு




சீனாவின் குவாங்சோவில் நடைபெறும் உலக தடகள அஞ்சல் ஓட்டப் போட்டிகளில் 4X400 கலப்பு அஞ்சல் போட்டியில் பங்கேற்க இலங்கை அணி தகுதிபெற்றுள்ள நிலையில் அதற்கான இலங்கை வீரர்கள் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி அருண தர்ஷன, காலிங்க குமாரகே, ஹர்ஷனி பெர்னாண்டோ, லக்ஷிமா மெண்டிஸ், நதீஷா ராமநாயக்க மற்றும் சதேவ் ராஜகருணா ஆகியோர் போட்டியிடவுள்ளனர்.

இப் போட்டி எதிர்வரும் மே 10 மற்றும் 11 ஆம் திகதிகளில் குவாங்சோவில் உள்ள குவாங்டோங் ஒலிம்பிக் மைதானத்தில் நடைபெறும் எனவும் இது உலக தடகள அஞ்சல் ஓட்டப் போட்டிகளின் 7ஆவது கட்டமாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விக்னேஸ்வரன் ஆகாஷின் பந்துவீச்சில் வீழ்ந்த பங்களாதேஷ்

## இலங்கை இளையோர் அணிக்கு இலகுவெற்றி



இலங்கை – பங்களாதேஷ் இளையோர் அணிகள் மோதும் 06 போட்டிகள் கொண்ட இளையோர் ஒருநாள் தொடரின் முதல் போட்டியில் இலங்கை அணி 98 ஓட்டங்களினால் அபார வெற்றி பெற்றது.

கொழும்பு சி.சி.சி. மைதானத்தில் சனிக்கிழமை நடைபெற்ற குறித்த போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 50 ஓவர்களில் 06 விக்கெட்டுகளை இழந்து 241 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் சாமிக்க ஹீனட்டிகல 78 ஓட்டங்களையும் கவிஜ கமகே 60 ஓட்டங்களையும் சேகுஜ வீகுனகொட 50 ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றனர்.

பதிலெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 33.3 ஓவர்களில் 143 ஓட்டங்களுக்குள் சுருண்டு போனது. பந்துவீச்சில் பருத்தித்துறை ஹாட்லி வீரர் விக்னேஸ்வரன் ஆகாஷ் தனது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் அபாரமாக பந்துவீசி 05 விக்கெட்டுகளை வீழ்த்தி ஆட்டநாயகன் விருது வென்றதுடன் சாதனையும் படைத்தார். இரு அணிகளுக் கிடையிலான இரண்டாவது போட்டி இன்று நடைபெறவுள்ளது.

# விளையாட்டுத் துளிகள்

பங்களாதேஷ் – ஸிம்பாப்வே அணிகள் இடையிலான டெஸ்ட் தொடரின் இரண்டாவது போட்டிக்கான பங்களாதேஷ் குழாத்தில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான அனாமுல் ஹக் இணைக்கப்பட்டுள்ளார். முதல் போட்டியில் ஸிம்பாப்வே வெற்றி பெற்று 1:0 என தொடரில் முன்னிலை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

★★★★★★★★★★★★★

ஸ்பெயினில் நடைபெற்றுவரும் மெட்ரிட் ஓபன் டென்னிஸ் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவின் 2ஆவது சுற்றில் நட்சத்திர வீராங்கனையான பிரிட்டனின் எம்மா ராடுகானு, உக்ரைனின் மார்டா கோஸ்டியுக் உடன் மோதினார். இதில் எம்மா 4:6, 6:2, 2:6 என்ற செட் கணக்கில் தோல்வியடைந்து தொடரிலிருந்து வெளியேறினார்.

★★★★★★★★★★★★★

பார்சிலோனா ஓபன் டென்னிஸ் தொடரில் சம்பியன் பட்டம் வென்ற டென்மார்க்கைச் சேர்ந்த ஹோல்ஜர் ரூனே புதிய டென்னிஸ் தரவரிசை பட்டியலில் 04 இடங்கள் முன்னேறி முதல் முறையாக 9ஆவது இடத்தைப் பிடித்துள்ளார். இத்தாலியின் ஜானிக் சின்னர் முதலிடத்தில் தொடருகிறார். ஜெர்மனியின் அலெக்சாண்டர் ஸ்வெரேவ் 2ஆவது இடத்துக்கு முன்னேறினார். கார்லோஸ் அல்காரஸ் ஒரு இடம் சரிந்து 3ஆவது இடத்தில் உள்ளார். அமெரிக்காவின் டெய்லர் பிரிட்ஸ் 4ஆவது இடத்திலும் செர்பியாவின் நோவக் ஜோகோவிச் 5ஆவது இடத்திலும் நீடிக்கிறார்கள்.

★★★★★★★★★★★★★

ஸ்பெயினில் நடைபெற்றுவரும் மெட்ரிட் ஓபன் டென்னிஸ் தொடரின் ஆடவர் ஒற்றையர் பிரிவின் 3ஆவது சுற்றில் முன்னணி வீரரான கார்லஸ் அல்காரஸ் (ஸ்பெயின்), கேப்ரியல் டியாலோ (கனடா) உடன் மோத இருந்தார். இருப்பினும் காலில் ஏற்பட்ட காயம் காரணமாக கடைசி நேரத்தில் நட்சத்திர வீரர் அல்காரஸ் தொடரிலிருந்து விலகினார். இதனால் கேப்ரியல் டியாலோ விளையாடாமலே வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டார்.

★★★★★★★★★★★★★

400 ரி20 போட்டிகளில் விளையாடிய 4ஆவது இந்திய கிரிக்கெட் வீரர் என்ற பெருமையை சி.எஸ்.கே. அணியின் தலைவர் டோனி பெற்றார். இந்திய வீரர்களில் ரோஹித் சர்மா (456) முதலிடத்தில் உள்ளார். தினேஷ் கார்த்திக் (412) 2ஆவது இடத்திலும் விராட் கோஹ்லி (407) 3ஆவது இடத்திலும் உள்ளனர். அதேவேளையில் உலக அரங்கில் டோனி 24ஆவது இடத்தில் உள்ளார். மேற்கிந்திய தீவுகளின் கெய்ரன் பொலார்ட் 695 போட்டிகளில் விளையாடி முதலிடத்தில் உள்ளார்.

# முதல் ஆட்டத்திலேயே தோல்வியடைந்த ஜோகோவிச்

பல முன்னணி நட்சத்திர வீரர்கள் பங்கேற்கும் மெட்ரிட் ஓபன் டென்னிஸ் தொடர் ஸ்பெயினில் நடைபெற்றுவரும் நிலையில் உலகின் நட்சத்திர வீரரான நோவக் ஜோகோவிச் முதல் ஆட்டத்திலேயே தோல்வியை தழுவி தொடரிலிருந்து வெளியேறினார்.



கடந்த 21ஆம் திகதி ஆரம்பமாகிய குறித்த மெட்ரிட் ஓபன் டென்னிஸ் தொடரின் ஆடவர் ஒற்றையர் பிரிவின் 2ஆவது சுற்றுக்கு செர்பியாவின் நோவக் ஜோகோவிச் நேரடியாக தகுதிபெற்றிருந்தார். அதன்படி சனிக்கிழமை நடைபெற்ற 2ஆவது சுற்றில் ஜோகோவிச், இத்தாலியின் மட்டியோ அர்னால்டி உடன் மோதினார்.

இதில் ஜோகோவிச் 3:6, 4:6 என்ற செட் கணக்கில் அதிர்ச்சி தோல்வியடைந்து தொடரிலிருந்து வெளியேறினார்.

## IPL - 2025

**இன்றைய போட்டி**

போட்டி இல. - 47

ராஜஸ்தான் VS குஜராத்

ஜெய்பூர் - இரவு 7.30 மணி

**முடிவு**

போட்டி இல. - 44

பஞ்சாப் - 201/4 (20)

கொல்கத்தா - 7/0 (01)

மழை காரணமாக போட்டி கைவிடப்பட்டது

மாணவர்களின் கல்வி வழிகாட்டியான ஜீனியர் தமிழன் ஏப்ரல் மாத சஞ்சிகைகள்






ரூபா 100/= ரூபா 120/= ரூபா 120/=

தற்போது விற்பனையில்...

- ☑ புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்
- ☑ வினாத்தாள் I, II வழிகாட்டிகள்
- ☑ தமிழ், கணிதம், சுற்றாடல் பாட செயலட்டைகள் (தவணைகளின் அடிப்படையில்)
- ☑ திறன் அடிப்படையிலான நுண்ணறிவு விளக்கங்கள்
- ☑ தரம் - 5 சுற்றாடல் பாடத்தொகுப்பு - 04, 05
  - இசைக்கருவிகளின் சுற்றாடல்
  - இரு வினாக்களை அடக்கிய ஒரு வினாக்களின் தொகுப்பு
- ☑ நுண்ணறிவுத்தொடர் 2 - கட்புலனறிவு
- ☑ விஞ்ஞான பரிசோதனைகள்
- ☑ சிங்கள, ஆங்கிலப் பாட பயிற்சிகள்

- ☑ மாணவர்களின் சித்திரங்கள்
- ☑ கதைக்குள் ஒரு கணிதப்புதிர் - 04, குறுக்கெழுத்துப்போட்டி
- ☑ சிறுவர் திருக்குறள் சிறுகதை

ஒவ்வொரு சஞ்சிகைக்குள்ளும் இணைக்கப்பட்டுள்ள படத்தாள் ஒன்றினை இலவசமாக பெற்றுக்கொள்ளுங்கள்.

தேர்ச்சிபெற்ற ஆசிரியர்களால் தொகுத்து வெளியிடப்படுகிறது

மேலதிக விபரங்களுக்கு :

011 5 200 900 | 074 1684643 | 0777 983308 | Junior Thamilan

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo −07